# பிள்ளை வரம்

பெ. தூரன்

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

௫௯ பிராட்வே - சென்னை 1.

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

முதற் பதிப்பு: 7—5—1945.
மூன்றும் பதிப்பு: நவம்பர், 1964

விலை ரூ. 2·75

சுதந்திர நிலைய வெளியீடு—15

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை—14.

# மூன்றாம் பதிப்பின் முகவுரை

மாதம் எட்டு ரூபாய் சம்பளத்தில் மனைவி இரு குழந்தைகளோடு இன்பமாகக் கந்தப்பன் வாழ்ந்தான் என்று படிக்கும்போது, இது எந்தக் கற்பனை உலகத்திலே என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? நான் படைத்திருப்பது கற்பனை உலகமல்ல; முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த நம் நாட்டையே நான் குறிப்பிடுகிறேன். அந்தக் காலத்திலே இருந்த கொங்கு நாட்டு மக்களை நினைவில் வைத்து இத்தொகுப்பிலுள்ள பெரும்பாலான கதைகள் கற்பனை செய்யப்பட்டுள்ளன. ஆணுக்கு ஒரு நாளைக்குக் கூலி நான்கு அணா என்பதை இன்று நினைத்துப் பார்க்கவே முடியாது. இருந்தாலும் அக்காலத்து நிலையையும் மனப்பாங்கையும் உள்ளவாறே அறிந்துகொள்ள ஒரு வாய்ப்பாக இருக்கவேண்டும் என்று கருதியே இப்பதிப்பில் அவைகளில் மாற்றம் எதுவும் செய்யவில்லை. கதை அமைப்பிலும் நடை அமைப்பிலும் பல மாறுதல்கள் செய்துள்ளேன். கொங்கு நாட்டு உழவர்களின் தேன் கலந்த கொச்சைப் பேச்சு நடையை நான் தொடவில்லை. அது அப்படியே உள்ளது.

கிராமச் சூழ்நிலையும் ஓவியக் கலையும் உளவியலும் இக்கதைகளுக்கெல்லாம் பின்னணியாக நிற்கின்றன. உழவுத் தொழில் செய்து வாழும் சூது வாது அறியாத மக்களிடையே நான் இளமையிலே வளர்ந்தேன். கொங்கு நாட்டு ஊர்கள் எனக்கு வளம் அளித்தன. காவிரித்தாய் எங்களுக்குச் சிறந்த

நெற்கதிர்களை வழங்கினான். அவனுடைய அழகு நடம் செய்யும் கவிதை வளப்பிலும் அன்பர்களின் கூட்டுக் களிப்பிலும் உணர்ச்சி வேகத்திலும் தமிழ்த் தாய்க்கு ஓரளவிற்குப் பணி செய்யும் ஆசையை நான் பெற்றேன். ஓவியன் என்ற சிறுகதையிலே குறித்துள்ளதுபோலக் கலைப்பணியின் எல்லைக்கு முடிவு ஏது? மன நிறைவும் ஏது? ஓவியர் மணியின் தொழிலுக்குத்தான் நாற்றுக்கு நாறு நிறைவு உண்டு என்று நாம் கருதலாகும்; ஆனால் அந்த இறைவனே தமது படைப்பில் இன்னும் நிறைவு காணாதிருக்கிறான். "ஓவியர் மணியை" இனி அமைதியாகப் படித்துச் சிந்தித்துப் பாருங்கள். மற்ற கதைகளுக்கும் இதுவே என் வேண்டுகோள்.

வணக்கம்

பெ. தூரன்

குறிப்பு:— கதைகளில் உள்ள பெயர்கள், ஊர்கள் எல்லாம் கற்பனையே; சம்பவங்களும் கற்பனையே.

## சமர்ப்பணம்

பெரியவனே
சின்னவனே
நல்லமுத்தே
என அன்பால்
நான் அழைக்க,
உயிர்த் துணையாய்
என்றனுக்கு
முருகன் அளித்த
மூவருக்கும்.

பெ. தூரன்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ஓவியர் மணி | ... | 7 |
| ரங்கபோயன் | ... | 19 |
| சாமி தரிசனம் | ... | 31 |
| பிள்ளை வரம் | ... | 40 |
| புதுக் கடை | ... | 48 |
| கலை உள்ளம் | ... | 57 |
| முத்தம்மாள் | ... | 66 |
| ஓவியன் | ... | 74 |
| கடையின் கவர்ச்சி | ... | 80 |
| ஒரே தடவை | ... | 88 |
| கூலிக்கார வீரப்பன் | ... | 102 |
| சின்னான் | ... | 112 |
| பண்ணையாள் | ... | 120 |
| சாரதாவின் காதல் | ... | 128 |
| உள்ளமுடையான் | ... | 140 |
| விடை பெறாத கேள்வி | ... | 145 |
| காதல் வழி | ... | 152 |
| சிப்பாய் மருதப்பன் | ... | 162 |
| குரங்கு மனம் | ... | 169 |

# ஓவியர் மணி

அவன் ஓர் ஓவியன்! அவள் ஒரு கட்டழகு வாய்ந்த இளங்குமரி. அழகை அள்ளிப் பருகி வர்ணங்களில் சிறைப்பிடிக்கும் அவன் உள்ளத்தை அவள் கவர்ந்தது வியப்பன்று.

இந்த உள்ளக் கவர்ச்சி தொடக்கத்தில் கலை உணர்ச்சியாகவே மலர்ந்தது; அவளது கட்டுக்கு அடங்காத எழிலை அவன் எழுத ஆவல் கொண்டான். அவளும் இணங்கினாள்; ஒரு சிறிய அறையிலே, ஓவியக் கூட்டங்களுக்கிடையே தனிமையில் இருவரும் பல நாட்கள் சந்திக்கலானார்கள்.

சில நாட்களில் 'அந்நியம்' என்ற உணர்ச்சி நட்புணர்ச்சிக்கு இடங் கொடுத்து மறைந்து விட்டது. இப்பொழுது அவர்கள் ஒருவரை ஒருவர் பெயர் சொல்லி இயல்பாக அழைத்துக்கொள்ளுகிறார்கள்.

"முருகா, இன்னும் எத்தனை நாட்களுக்கு எழுதிக்கொண்டிருப்பாய்?"

"எத்தனை நாளைக்குத் தீட்டினாலும் உன் அழகு முழுவதையும் திரையில் காட்ட முடியாதே! தெய்வம், நீ பெயரளவில் மட்டும் தெய்வமல்ல; நீ அழகுத் தெய்வம்."

தெய்வயானை சிரித்தாள்; மறுகணம் நாணிக் குனிந்தாள். முருகன் தான்ஒன்றும் மிகைப்படுத்திக் கூறியதாக நினைக்கவேயில்லை! அவள் அழகைப்

பற்றிச் சொல்ல ஏற்ற சொற்கள் அகப்படவில்லையே என்றுதான் ஏங்கிக் கொண்டிருந்தான். ஆனால் சொல்ல இயலாததை அவன் கை திறம்படச் செய்து கொண்டிருந்தது. அதில் ஐயமே இல்லை.

முருகன் தெய்வயானையின் ஒவ்வோர் உறுப்பிலும் பொங்கும் பேரெழிலைப் படத்தில் பதித்துக் கொண்டிருந்தான். அவளோ அவன் தன் உருவத்தைத் திரையில் பிடிப்பதோடு உள்ளத்தையும் கவர்ந்துகொண்டான் என்பதை மெதுவாக உணர்ந்தாள்.

திங்கள் சில சென்றன!

இப்பொழுது அவர்கள் முறைப்படி திருமணம் செய்துகொண்ட கணவனும் மனைவியும். தெய்வயானையின் ஒவ்வோர் அசைவும் முருகனுக்கு ஒரு புது ஓவியத்திற்கு உணர்ச்சி தருவதாக இருக்கிறது; முருகன் எழுதும் ஒவ்வொரு ஓவியமும் தெய்வயானையின் காதலை வளர்க்கும் உயிர்ச் சத்தாக உருவடைகிறது.

முருகன் சிறந்த ஓவியன் என எங்கும் புகழ் பெற்றான்.

ஏழு ஆண்டுகள் இன்பத்தில் மறைந்தன.

தெய்வயானையின் மடியிலே ஓர் ஆண்டு நிரம்பிய பெண் குழந்தை கொஞ்சிக்கொண்டிருக்கிறது.

அதன் பிறகுதான் அந்த எதிர்பாராத சம்பவம் நடந்தது! ஒரு நாள் மாலை. முருகன் தன் கண்களை மூடிக்கொண்டு உள்ளத்திலேயே ஓவியமொன்றைக் கற்பனை செய்துகொண்டிருந்தான். தெய்வயானை அங்கு வந்து எதிரில் நின்றதும் அவனுக்குத் தெரிய

வில்லை. அவள் அவனைப் பார்த்துப் பெருமகிழ்ச்சியடைந்தாள். ஓவியன் கனவு துள்ளும் கண்களைத் திறந்தான்; அவள் சிரித்தாள்! ஆனால் அவள் சிரிக்கவில்லை.

எதிர்பாராத ஒன்றை அவன் கண்டான். கண்ணாடிபோல் இருந்த அவள் கன்னங்களில் முன்பு இருந்த பளபளப்பைக் காணவில்லை! கற்பனையுலகிலிருந்து மனத்தைத் திருப்பிய முருகன் திடுக்கிட்டான். தெய்வயானையின் அழகும் மாறுவதா? கடவுள் படைக்கும் அழகுகளெல்லாம் இப்படித் தேய்ந்து அழிபவைதாமா? அவன் நெஞ்சு படபடத்தது; மூளை கலங்கியது.

பல்வகையான எண்ணங்கள், உணர்ச்சிகள் குமுறி எழுந்தன! அன்றிரவு முழுவதும் அவனுக்கு உறக்கம் பிடிக்கவில்லை; படுக்கையிற் புரண்டுகொண்டிருந்தான்; உள்ளம் வெதும்பியது. கொஞ்ச நேரத்திற்கு ஒரு தடவை அவன் நெடுமூச்செறிந்தான்.

தெய்வயானையும் தூங்கவில்லை! அவள் நெஞ்சில் ஒரு கலவரம். 'ஏன் இவ்வாறு உறக்கம் இல்லாமல் புரளுகிறார்? புதிதாக ஏதாவது ஒரு காட்சி இவர் எண்ணத்திற் புகுந்து ஓவியமாக வெளிவரும் முன்பு ஏற்படும் உயிர்ப்பு வேதனையா இது? இல்லையே!' அதை எத்தனையோ தடவை அவள் கண்டிருக்கிறாளே! அதற்கும் இதற்கும் மாறுபாடு இருக்கின்றதே.

மறுநாள் முருகன் தன் ஓவியக் கண்களோடு அவளை ஊடுருவிப் பார்த்தான்! அவள் முகம் தூக்கமின்மையால் வாடியிருந்தது! ஆமாம், எட்டு ஆண்டுகளுக்கு முன் அவன் கண்ட அழகு மறைந்துவிட்டது. கன்னியழகு போய்க் காதல் வாழ்க்கையின் சிறந்த

தாய்மையழகை அவன் ஏற்றுக்கொள்ளவில்லை. அதை உணராத குருடனாகிவிட்டான்! அவனால் இந்த மாறுதலைத் தாங்க முடியவில்லை.

"என்ன! கடவுள் படைத்த அழகு இவ்வளவு தானா? அழிவதுதானா? இத்தனை பேரழகையும் நிலைத்திருக்கச் செய்ய அவரால் முடியாதா? இன்னும் சிறிது காலத்தில் எல்லாம் சூனியமாகி விடுவதா? சே சே! அதை என்னால் பொறுக்க முடியாது" என்று கூறி முருகன் நெட்டுயிர்த்தான். ஒரு வேதனைக் குரல் அவனை அறியாமல் வெளிப்பட்டது.

முருகனுக்கு அமைதி வரவில்லை! அன்று முழுவதும் அறைக்குள்ளேயே ஊசலாடிக்கொண்டிருந்தான். மாலை நேரம், அன்று என்றும் இல்லாத வனப்புடன் தோன்றியது! தெய்வயானை முருகனை அழைத்தாள். "வெளியே வந்து பாருங்கள்; அந்தி வேளை என்ன அற்புதமாக இருக்கிறது! இதை ஒரு நல்ல காட்சியாகத் தீட்டலாம்" என்றாள். முருகன் தலையை வெளியே நீட்டினான். "இதுதானே? இதுவும் இன்னும் சிறிது நேரத்தில் அழியப்போகிறது! இந்த அழகு யாருக்கு வேண்டும்? இவ்வளவுதான் இறைவனுடைய படைப்புப் பெருமை!" என்று சொல்லி விட்டு அவன் மறைந்துவிட்டான்; அவளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

முருகன் பைத்தியம் பிடித்தவன்போல் ஆகிவிட்டான். அகிலாண்டங்களையும் அவற்றிலுள்ள அனைத்தையும் ஆக்கியவனைச் சபிக்கலானான். அழியாத அழகைப் படைக்க முடியாத கடவுள் என்ன கடவுள்! தெய்வயானையின் பேரெழிலும் மாய்வதா? சீ, இந்தக் கடவுளுக்குக் கொஞ்சமும் திறமையில்லையே! சீதையின் அழகைக் கண்டு மயங்கிய ராவணன் தன் குலத்தோடு மாண்டான்; ஆனால்

அந்த அழகு எங்கே? கம்பன் காவியத்தில் காண்பதெல்லாம் எங்கே? கடவுள் கைவண்ணமே எங்கே? இன்று அதைக் காண முடியுமா?

தலைமேல் கையை வைத்தான் முருகன்! தலை சூடாக இருந்தது. குழம்பிய மனத்திலிருந்து திடீரென்று ஓர் எண்ணம் உதயமாயிற்று. "படைக்கும் கடவுளால் நிலைக்கச் செய்ய முடியாத அந்த அழகை என் கைத் திறமையினால் என்றும் இருக்கச் செய்கிறேன் பார்!" என்று கூறினான். வழி பிறந்து விட்டது கண்டு அவன் துள்ளிக் குதித்தான். பெருங் களிப்பு வெறியில் ஆடினான்.

இந்த முறை அவன் தெய்வயானையை முன்னே இருத்திப் படம் எழுதவில்லை. அவளுடைய சாயல்களை, வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு ஓவியங்களில் சிறைப் பிடித்து வைத்திருந்தவைகளையெல்லாம் ஒருங்கு திரட்டினான். முதல் முதலில் அவன் ஓவியம் தீட்டுவதற்குத் தெய்வயானை நின்ற போதிருந்த இளமை எழிலை அடிப்படையாக வைத்தான்; மணம் முடிந்து முதல் தடவையாக அவர்கள் இருவரும் படுக்கை அறை புகுந்தபோது அவள் முகத்தில் தோன்றிய முறுவலை இப்புது ஓவியத்தில் கொண்டுவந்தான்.

இப்படியாகச் செவ்வி எல்லாவற்றையும் திரட்டிப் பதினாறு வயதுக் கன்னிகையாக அவள் அன்று இருந்தவாறே கற்பனையோடு எழுதிவிட்டான்.

அவன் கொண்ட குதூகலத்திற்கு அளவேயில்லை. வெற்றிக்குறி அவன் முகத்தில் தாண்டவமாடியது! "இது என்றும் அழியாது; உலகம் உள்ள அளவும் நிலைத்திருக்கும்! ஆனால் கடவுள் உண்டாக்கிய அந்த அழகு மறைந்து போகும்; இது என்றும் இருக்கும்; அப்படியே இருக்கும்."

இந்தச் சொற்களை அவன் உலகுக்கே பறை சாற்றுபவன்போல் உரத்துக் கூறினான். "தெய்வம்! இதோ இதை வந்து பார்."

மகிழ்ச்சி பொங்கும் இந்தக் குரலைக் கேட்டுப் பல நாட்கள் ஆகிவிட்டன! தெய்வயானை ஓடி வந்தாள். அவன் கேட்கிறான்:

"அன்று இப்படித்தானே இருந்தாய?"

"அதென்னவோ உங்களுக்குத்தானே நன்றாகத் தெரியும்?"

சிறிது நேரம் இருவரும் மௌனமாக ஓவியத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"இப்பொழுது இதை எதற்காக வரைந்தீர்கள்?"

"இந்த அழகை என்றும் நிலைக்கச் செய்வதற்காக."

"என்ன இருந்தாலும் இது உணர்ச்சியில்லாத திரைதானே?"

"இதற்கா உணர்ச்சியில்லை! என்னுடன் அந்தக் குமரி பேசுகிறாளே! அந்தச் சிரிப்பு இப்போது உன்னிடம் ஏது? அதில் இல்லாத உயிர் உணர்ச்சி வேறு எங்கே இருக்கிறது?"

தெய்வயானைக்கு அவன் கருத்துச் சிறிதும் புலப்படவில்லை.

* * *

மேலும் ஓர் ஆண்டு கழிந்துவிட்டது! குழந்தை ஒன்றே இன்று தெய்வயானைக்கு ஆறுதல்! அதன்

சிரிப்பே அவன் உள்ளத்தைக் கவ்வும் கவலையிருளை அகற்றும் தண்ணமுதமாயிருந்தது.

முருகனுக்கு அந்தப் படமே எல்லாமாக ஆகி விட்டது; அதைக் கட்டி அணைத்துக்கொள்வான். அதனுடன் கொஞ்சுவான்.

தெய்வயானையைப் பார்க்கக்கூட அவனுக்குப் பிடிக்கவில்லை. தாய்மை எய்திய அவள் தோற்றம் அவனுக்குக் கசந்தது! நாளடைவில் தான் இருக்கும் இடத்திற்கு அவள் வருவதையும் வெறுக்கலானான். அவளைக் காணும் போதெல்லாம் உள்ளத்தில் வெறுப்புப் பொங்கலாயிற்று

தெய்வயானை நைந்து உருகினாள். ஆனாலும் தன் கணவனது நிலைமை உணர்ந்து அவன் இருக்கும் அறைக்குள் போவதையே குறைத்துக்கொண்டாள்.

ஒருநாள் காலை பத்து மணியாகிவிட்டது; இன்னும் வரக்காணோமே என்று அவள் காலை உணவைத் தட்டில் ஏந்திக்கொண்டு அவன் அறைக்குள் நுழைந்தாள். முருகன் படத்துடன் கொஞ்சிக்கொண்டிருந்தான். தன் கைத்திறமையில் முழுகியிருந்த அவன் கடவுளின் படைப்பைப் பார்த்ததும் என்றும் இல்லாத பெருங் கோபம் அடைந்தான். அவள் முகத்தில் காறி உமிழ்ந்தான்! அப்பொழுதும் அவன் உள்ளக் கசப்பு மட்டாகவில்லை. பக்கத்தில் கிடந்த படச் சட்டம் ஒன்றை எடுத்து அவள்மீது வீசினான்

தெய்வயானை பதுமைபோல் நின்றுகொண்டிருந்தாள்! நெற்றியில் வழியும் ரத்தத்தையும் அவள் துடைக்கவில்லை; கண்களில் மட்டும் அடக்க முடியாத ஒரு துளி பிதுங்கிவிட்டது.

"இனிமேல் என் முன்பு வந்து என் நெஞ்சைப் பிளக்காதே! கடவுளின் இழிந்த கைவேலையைப்

பார்த்தது போதும்!" என்று முருகன் வெறுப்புடன் பேசலானன்.

அவனது ஓவியசாலைக்குக் கம்பியில்லாத சாளரம் ஒன்று உண்டு! வீட்டின் பின் பாகத்தை நோக்கியிருந்தது அது. இப்பொழுது அதன் வழியாகத்தான் அவனுக்கு உணவு வருகிறது! ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட வேளைகளில் உணவேந்திய ஒரு கை சாளரத்தின் வழியே தென்படும். முருகனும் அவன் மகிழ்ந்த படமும் யாதொரு ,தடங்கலும் இன்றி ஏகாந்தமாக இருந்தனர்!

முருகனுக்குப் படத்தின்மீது ஏற்பட்ட ஆசை தாவித் தாவி வளர்ந்தது. சிறிது நேரமும் அதை விட்டுப் பிரிய அவனால் முடிவதில்லை. எப்பொழுதும் அதைப் பார்த்து மகிழ்ந்துகொண்டிருந்தான். புது ஓவியங்கள் தீட்டுவது, நண்பர்களுடன் அளவளாவுவது, தன் உடலைக் கவனிப்பது—எல்லாவற்றையும் மறந்துவிட்டான். அந்தக் கன்னியழகொன்றே அவன் உள்ளத்தை முற்றிலும் கவர்ந்திருந்தது. "இந்த அழகை அழியா அழகாகச் செய்துவிட்டேன்" என்று வெறி பிடித்தவன்போலச் சொல்லுவான்; படத்தைப் பார்ப்பான். அந்த மோகனச் சிரிப்பு அவனை எதிர்கொள்ளும். அவன் அப்படியே சொக்கிப் போவான்.

மற்றுமோர் ஆண்டு இவ்வாறு கழிந்தது! முருகனுக்குச் சித்தப்பிரமை என்ற வதந்தி எங்கும் பரவலாயிற்று. "சிறந்த ஓவியன், பாவம்! இப்படி ஆகிவிட்டது" என்று பலரும் பேசலானர்கள். ஆனல் அவனுக்கு ஓவியப் பயித்தியம் என்று யாரும் தெரிந்துகொள்ளவில்லை; உடலைப்பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாதிருந்ததால் அவன் நலிவடைந்து குலைந்தான்; இருமல் அடிக்கடி வரத் தொடங்கிற்று.

அவன் உடல் துரும்பாகிவிட்டது; கன்னம் ஒடுங்கிக் கண் குழிந்துவிட்டது! ஆனால் ஆசைமட்டும் தணிவதாயில்லை. ஓவியத்தைப் பார்ப்பான். அது சிரிக்கும்; கள்ளுண்டவன்போல் அவன் களிப்புடன் படுக்கையில் புரளுவான். உணர்ச்சி வேகத்தால் இருமல் விடாது வரும்.

சில மாதங்களில் அவன் படுக்கையை விட்டு எழுந்திருக்கவும் வலிமையற்றவனாகி விட்டான்! எலும்புந் தோலுந் தவிர அவன் உடம்பில் ஒன்றும் இல்லை. சாளரத்தின் பக்கமாகக் கால்மாட்டை வைத்துக் கட்டிலைப் போட்டுக்கொண்டான். கைக் கெட்டும் தூரத்தில் அந்த ஓவியத்தை வைத்தான். அதையே பார்த்துக்கொண்டு படுத்திருந்தான்.

அவனுக்கு இருமல் அதிகமாயிற்று! காய்ச்சலும் தலைவலியும் அடிக்கடி வந்தன. கால் குடைச்சலும் சில வேளைகளில் சேர்ந்துகொள்ளும். உடல் துன்பம் அவன் சக்தியை மீறத் தொடங்கிற்று. அந்தப் படம் அவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே இருந்தது.

ஒரு நாள் உடம்பில் ஏற்பட்ட வலியைப் பொறுக்க முடியாமல் அவன் புரண்டுகொண்டிருந் தான். விடாது இருமல் நெஞ்சைப் பிளந்தது. பிற ருடைய அன்பு மொழிகளுக்கு ஏங்கி, "அப்பா!" என்று பெருமூச்செறிந்து முருகன் ஓவியத்தை நோக்கினான்! அது சிரித்தது.

அந்தச் சிரிப்பு இப்பொழுது அவனைப் பரவசப் படுத்தவில்லை! துன்புறுபவனுக்காக அதில் கவலை இருக்கிறதா? ஆறுதல் மொழி அந்த உதடுகளில் தொனிக்கிறதா? ஒரே சிரிப்பு!

முருகன் மறுபுறம் திரும்பிப் படுத்துக்கொண் டான்! அவன் தலைகொதித்தது; மண்டை வெடித்து

விடும்போல் இருந்தது. திரை நீக்கிக்கொண்டு தன்னை அறியாது ஓவியத்தின் பக்கம் திரும்பினான்.

அது சிரித்தது!

அன்றும் மறு நாளும் வேதனையில் கழிந்தன. முருகனுக்கு உணவு செல்லவில்லை. அவன் உள்ளத்தில் பலவிதமான எண்ணங்கள் கொந்தளித்துக்கொண்டிருந்தன.

மூன்றாவது நாளும் குணம் ஒன்றும் காணவில்லை. உச்சிவேளை ஆக ஆகக் கால் குடைச்சல் மிகவும் அதிகரித்தது. "கால் குடைச்சல் தாங்க முடியவில்லையே; கால் குடைச்சல் தாங்க முடியவில்லையே!" என்று அடிக்கடி வாய்விட்டுக் கதறினான். ஒரு சமயம் அப்படிக் கூவிக்கொண்டு அந்த ஓவியத்தைப் பார்த்தான்; அது சிரித்தது.

"சீ, உயிரற்ற பிணமே! சிரிக்கிறாயா? என்மேல் உனக்கு அன்பு இருந்தால் சிரிப்பாயா இப்போது?"

அவனுடைய பயித்தியமெல்லாம் பறந்து விட்டது. "இதுவா என் கைத்தொழில்? சே, என்ன சிரிப்பு இது? ஒரேவகையான உணர்ச்சியற்ற சிரிப்பு—ஒரேவகையான இளமை—ஒரேவகையான அழகு! இது எத்தனை நாளைக்கு இன்பந் தரும்?

அவன் உள்ளத்தில் தெளிவும் உறுதியும் ஏற்பட்டன. உடல் வேதனையையெல்லாம் பொருட்படுத்தாமல் எழுந்தான். வர்ணம் கலக்கும் பட்டைக் கத்தியை எடுத்தான். அந்த ஓவியத் திரைச் சீலையைச் சின்னபின்னமாகக் குத்திக் கிழித்து எறிந்தான்.

முருகன் களைப்பால் படுக்கையில் சாய்ந்தான். ஆனால் மனத்தில் கொஞ்சம் அமைதி ஏற்பட்டது.

அப்படியே கண்களை மூடினான். வாய்மட்டும் என்ன என்னவோ பிதற்றிக்கொண்டிருந்தது.

வெகுநேரம் உறங்கிவிட்டான். மறுபடியும் அவன் கண்களைத் திறந்தபோது மனம் அமைதி பெற்றிருந்தது. மூளைக் கொதிப்பும் நீங்கிவிட்டது. அப்பொழுது யாரோ அவன் காலை மெதுவாக வருடிக் கொண்டிருப்பதை அவன் உணர்ந்தான்.

அதில் ஒரு தனிப்பட்ட இன்பம் உண்டாயிற்று. மறுபடியும் கண்களை மூடிக்கொண்டான். அந்த மெல்லிய கைகளின் வெதுவெதுப்பை எப்பொழுதும் அனுபவித்துக் கொண்டிருக்கலாம் என்று தோன்றியது.

இருந்தாலும் யாரென்று பார்க்கவேண்டுமென்ற ஆசை சிறிது நேரத்தில் பிறந்தது. மெதுவாக முருகன் தலையை மேலே தூக்கினான். இரு கரங்கள் மட்டும் தென்பட்டன. தலைகூடச் சாளரத்திற்கு வெளியே மறைந்திருந்ததால் புலப்படவில்லை.

மீண்டும் படுக்கையில் சாய்ந்து அவன் கண்களை மூடிக்கொண்டான். பல உணர்ச்சிகள் உள்ளத்தில் எழுந்து மோதிக்கொண்டன. திடீரென்று முருகன் எழுந்து அவ்விரு கைகளையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான்.

பிறகு வெளியே எட்டிப் பார்த்தான். கண்ணீர் வடியும் தெய்வயானையின் முகம் மேலே காதலோடு பார்த்தது. அதில் என்ன கவலை! கனிவு! ஆவல்! சோகம்!

என்றும் பார்த்தறியாத அழகை முருகன் அன்று கண்டான். கன்னியழகல்ல; தாய்மையடைந்த தனியழகு. துன்பக் கடலிலே ஆழ்ந்தும், பொங்கிப்

பெருகிய பேரழகு; நாள்தோ[illegible] மாறிப் புதிதாகத் தோன்றும் உயிருள்ள அழ[illegible]

“கடவுளே, நீதான் [illegible] ஓவியன்; ஓவியர் மணி! நான் மாறுதல் அ[illegible] உயிர்ச்சக்தியற்ற அழகை உண்டாக்குபவள். [illegible]றி மாறி வளரும் பேரழகை உண்டாக்[illegible] [illegible]தெய்வமே! என்னை மன்னிக்கவேண்டும்” என்[illegible] [illegible] கதறினான்.

தெய்வயானை கந்தர்[illegible] [illegible]புடன் அறைக்குள் நுழைந்தாள்.

அவள் கையைப் பி[illegible]கொண்டு நாணி நகைத்து ஒரு ‘சிறுமி அ[illegible] [illegible]டத் தொடர்ந்து வந்தது. அந்தப் புதிய ப[illegible] [illegible] தெய்வயானையின் இளமைப் பொலிவும் முருக[illegible] [illegible]கலை நிறைந்த கண்களும் ஒருங்கே வெளிப்ப[illegible] அந்தக் கலைவைப் பேரெழிலை ஆரவாரமில்[illegible] அமைத்துவரும் ஓவியர் மணியை வியந்து [illegible]ற்றி முருகன் ஆவலோடு நின்றான்.

# ரங்க போயன்

**ப**கலவன் விழுந்துவிட்டான். மேற்கு வானில் ரத்தக் கறை போன்று அங்கும் இங்கும் செம்மை ஒளித்துண்டங்கள் காண்கின்றன. இருள் பலவேறு வடிவங்களில் பூமியில் அமர்ந்திருப்பது போலத் தோன்றுகின்றன மரங்கள். நாளெல்லாம் உழைத்த கூலிக்காரர்கள் சலிப்பினுல் தளர்நடை நடந்து வருகிறுர்கள்.

ஆனுல் ரங்க போயன் மட்டும் தெம்மாங்கு பாடிக்கொண்டு பாதை முழுவதுமே போதா தென்று சொல்லும்படியாகப் பெரிய ஆர்ப்பாட்டத் துடன் வந்துகொண்டிருக்கிறுன்.

"வேலைவரும் என்று சொல்லி
ஷடியுமட்டுங் காத்திருந்தேன்
ஊலையிட்டு வந்தவனை
உள்ளுக்குவா என்றுளே
தான னன்ன னைன னன்னு
தன்ன னன னைன னன்னு"

என்று அவன் பாடுகிறுன்.

தொலைவிலே இரண்டு பேர் இந்தப் பாட்டைக் கேட்டுக்கொண்டே வந்தார்கள்.

ஒருவன், "யாரது, ரங்க போயனு இவ்வளவு குசாலாய்ப் பாடறது?"

மற்றவன்: "பின்னே அவன் இல்லாமே யாரு? பண்ணைக்காரர் வீட்டுக்குப் பக்கத்தில் வந்துங்கூட வேறு யாரு இப்படிப் பாடுவா?"

"ரங்க போயன்னு பண்ணைக்காரர் ஒண்ணும் பேசமாட்டார். வேலை சரியாப் பண்ணுறதை போனு லும் அவனை அவர் கண்டிக்கிறதே இல்லே."

"அவர் என்னத்துக்குக் கண்டிக்கிறார்? அதெல் லாம் இப்போது ஒண்ணும் கண்டிக்க மாட்டார். கொஞ்ச நாள் போய் எல்லாம் சப்பிட்டுப்போனால் அப்புறம் தெரியும். இப்படி எத்தனையோ பார்த்தது தானே?"

"அதைப்பத்தி நமக்கு என்ன? எப்படியோ போகட்டும். நாம் பேசினதாகப் பண்ணைக்காரர் காதிலே விழுந்தால் வீண் பொல்லாப்பு வரும். அந்தத் தொல்லையெல்லாம் நமக்கு என்னத்துக்கு?"

"அது சரி, நமக்கு என்ன? எவனோ, எக்கேடு கெட்டோ போகிறான்....ஆனால் இந்த ரங்க போயன் கலியாணம் பண்ணிக்கிறதுக்கு முந்தி எவ்வளவு ஒழுங்காக இருந்தான்!"

"ஆமாம், கல் கட்டிடம் கட்டறத்துக்கு இந்தப் பக்கத்திலேயே இவனைப் போல ஆள் கிடையாது. சின்ன வயசிலேயே ரொம்ப யூகமாய் எல்லாம் பண்ணுவான்."

"இப்போ? அல்லாம் அந்தப்பெண்ணைக் கட்டிக் கிட்டதிலிருந்து போச்சு."

"அவளேயே கட்டிக்க வேணும்னு காத்துக்கிட் டிருந்தானுமே?"

"அப்படித்தான் சொல்லுறாங்கோ. ஆனால் கலியாணமாகி அஞ்சாறு மாசந்தான் சரியாயிருந் தான். அப்புறம் என்னமோ எல்லாம் மாறிப் போச்சு. குடிக்க வேறு பழகிக்கிட்டான்."

"பண்ணைக்காரரே குடிக்கப் பணம் குடுக்கிறார்."

"ஆமாம்; அதோடெ குடியிருக்கிறதுக்கும் அவர் தோட்டத்துச் சாளையிலேயே ஒரு வீடு குடுத்திருக்கிறாராம்."

"அந்த வீடு இவனைப் போலே எத்தனை பேரைப் பார்த்திருக்கிறதோ! பார்க்கலாம், இவன்தான் அங்கே எத்தனை நாளைக்கு இருக்கிறானென்று!"

"ஏன் தம்பி, அந்தப் பொண்ணு எப்படி?"

"அதென்னமோ யார் கண்டா? இந்தப் பண்ணைக்காரர் சும்மா சாளை வீட்டைக் கொடுப்பாரா? அவர் இருக்கிற வரைக்கும்...."

சரி சரி; நமக்கு என்ன? யாரோ எக்கோலமோ போகட்டும்; ஊருக்குள்ளே வந்தாச்சு, இனி இதெல்லாம் பேசப் படாது. நம்ம கையும் காலும் சுகமா இருக்கிறவரைக்கும் கூலிவேலை செய்து அரைக் கஞ்சி குடிச்சுக்கிட்டிருக்கலாம். நமக்கு ஊர் வம்பெல்லாம் என்னத்துக்கு?

இம்மாதிரி அவர்கள் பேசிக் கொண்டு போய் விட்டார்கள்.

ரங்க போயன் சாலைக்கு வந்து சேர்ந்தான். அதே சமயத்தில் பண்ணைக்காரர் வேலப்ப கவுண்டரும் அங்கு வந்தார். "என்ன ரங்க போயா, உன்னை சாயங்காலத்திலிருந்து காணவே இல்லை; எங்கே போனாய்?"

"சும்மா அப்படியே! போனேனுங்க. நேரமாய்ப் போச்சு."

"அதுதான் கண்ணில் தட்டுப் படவே இல்லை. கள்ளுத் தண்ணிக்குப் பணங் கிணம் கேக்க வருவா

நினைவுகளையெல்லாம் மறந்துவிட வேண்டுமென்று கடையை நோக்கிப் போகலானான்.

அவனுக்கு இன்று பழைய ஆசைகளெல்லாம் இல்லை. பெரிய கல் வேலைக்காரனாக வேண்டும், மேஸ்திரியாக வேண்டும், குத்தகையாகப் பேசிப் பெரிய பெரிய வீடுகள் கட்டிப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணங்களெல்லாம் மறைந்து விட்டன. சின்னம்மாளைக் கலியாணம் செய்து கொண்டு இப்படி வாழவேண்டும். அப்படி வாழ வேண்டும் என்று கண்ட கனவுகளெல்லாம் கலியாணமாகி ஆறு மாதங்களிலேயே நொறுங்கி விட்டன. எப்படியோ நாளைக் கடத்த வேண்டியது என்பதுதான் இப்பொழுது அவனுடைய முடிவு. பண்ணைக்காரர் எப்படியும் பணம் கொடுக்கிறார். அவர் பண்ணையிலேயே ஏதாவது இரண்டு வேலை செய்துகொண்டிருந்தால் மாதம் இருபது வள்ளம் கூலியும் கிடைக்கிறது. வேறு என்ன வேண்டும்?

சின்னம்மாளிடம் ரங்க போயனுக்கு அன்பு இல்லையா என்று கேட்கலாம். அவளையே கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று ஐந்து ஆண்டுகள் பிடிவாதமாக நின்றவனுக்கு மனைவாழ்க்கை தொடங்கி ஆறு மாதங்களில அன்பு மறைந்து போகுமா? அப்படி மறைவது இயல்பாகத் தோன்ற வில்லை. அதிலும் அவனுக்கு இன்னும் இருபத்தைந்து வயதுகூட முடியவில்லை. (இளமையின் உணர்ச்சிக ளெல்லாம் கொழுந்துவிட்டுக் கொண்டிருக்கும் பருவத்தில் அவன் இப்படி மாறியதைக் கண்டு பலர் அன்பால் இரக்கம் கொண்டார்கள்.)

ரங்க போயன் தன் நிலைமையை நினைத்து உள்ளம் புழுங்குவான். ஆனால் அதைத் தன்னால் மாற்ற முடியுமென்ற நம்பிக்கை அவனுக்குச்சிறிதும்

இல்லை. ஒவ்வொரு சமயம், 'நானேதான் இந்த நிலைமைக்கு வரக் காரணமாயிருந்திருப்பேனா? குடிப் பழக்கத்தினாலே நான் அவளை அன்பாக நடத்தவில்லை போல் இருக்கிறது. (குடி வெறியோடு கிடக்கும் புருஷனிடத்தில் என்ன சுகம் கிடைக்க முடியும்?).. நான் எதற்காக இப்படிக் குடித்துப் பழகிக் கொண்டேன்—இதற்கும் பண்ணைக்காரரேதான் காரணம். அவர் என்னைக் குடிக்கும்படி செய்திராவிட்டால் நான் இந்தப் பாழுங்கள்ளைத் தொட்டிருக்கவேமாட்டேன். அவர் மனதில் சூது வைத்துக்கொண்டேதான் இப்படிப் பண்ணியிருக்கிறார்.—ஆனால் இன்றைக்கு அந்தக் கள் இல்லாவிட்டால் எனது துக்கத்தை எப்படி மறைத்துக்கொள்வேன்?' என்று நீள நினைப்பான். பிறகு, 'அதையெல்லாம் நினைத்து என்னாகப் போகிறது? பேசாமல் காலத்தைத் தள்ள வேண்டியதுதான். இந்த ஊரிலே அவர் வைத்ததுதான் சட்டம். என்னால் என்ன செய்ய முடியும்? வீண் கலவரம் செய்தால் ஊரறிந்து நாடறிந்து மானங் கெட்டுப் போக வேண்டியதுதான். அதைத் தவிர வேறு என்ன பலன் கிடைக்கப் போகிறது?' என்று தன் உதவியற்ற நிலையை நினைத்து பெருமூச்சு விடுவான்.

இப்படியே காலம் நழுவிக் கொண்டிருந்தது. ரங்க போயன் எவ்வாறு குடும்பம் நடத்தி வந்தான் என்பதைச் சரியாகச் சொல்வது அவ்வளவு எளிதல்ல. தாமரையிலைத் தண்ணீர் போல என்று உவமையாகச் சொல்லலாமென்றால் தாமரை இலையில் தண்ணீர் சிறிதும் ஒட்டுவதில்லை. ஆனால் அவனோ மனைவியிடத்தில் உள்ளுக்குள்ளே மிகவும் பற்றுதலோடு இருந்தான். இருந்தும் வாழ்க்கையில் அவனுக்குப் பற்றுதல் இல்லை. (சின்னம்மாளைத் தன் உள்ளச் சிப்பியில் உதித்தெழுகின்ற முத்துப்போல

வைத்திருக்க அவன் ஆவல் கொண்டிருந்தான். ஆனால் இன்று அவன் உள்ளம் பறவை பறந்து போய்விட்ட கூட்டைப்போலக் கிடந்தது.

ரங்கபோயனுடைய வாழ்க்கை இப்படியே கழிந்து போயிருக்கும். ஆனால் அதை முற்றிலும் மாற்றும்படியாக ஒரு நிகழ்ச்சி எதிர்பாராத விதத்தில் நடந்தது. பண்ணைக்காரர் வேலப்ப கவுண்டரை யாரோ அவர் தோட்டத்துச் சாளைக்கு அருகிலேயே குத்திக் கொன்றுவிட்டார்கள். ஊரெல்லாம் இதே பேச்சாக இருந்தது.

புதுப்பாளையம் ஒரு சின்ன ஊர். அதில் வேலப்ப கவுண்டரே பெரிய செல்வந்தர். அவர் வாழ்ந்த 45 ஆண்டுகளில் அவர் பேச்சைத் தட்டி நடந்தவர் அந்த ஊரிலே யாரும் இல்லை. அவர் சொன்னது வேதவாக்கு. அப்படி இருக்க அவருடைய தோட்டத்திலேயே அவரை ஒருவன் கொலை செய்துவிட்டான் என்றால் அதை முதலில் ஒருவராலும் நம்பவே முடியவில்லை. பிறகு கொலை செய்தது நிச்சயமாகத் தெரிந்துவிடவே, சிலர் யார் செய்திருப்பார் என்று பலவிதமாகக் காதுக்குக் காது பேசிக்கொண்டார்கள். ஒரு சிலருக்கு அவர் கொலையுண்டதில் உள்ளுக்குள்ளே மகிழ்ச்சியில்லாமல் இல்லை.

கொலை நடந்த அன்று மாலையில்தான் வேலப்ப கவுண்டர் எங்கேயோ போய்விட்டுத் தம் குதிரை வண்டியில் திரும்பி வந்தார். அவர் நேராகத் தோட்டத்திற்கு வந்து வண்டியை விட்டிறங்கி மாடுகளையெல்லாம் பார்வையிட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பினார். அப்பொழுது தொழுவத்தில் குதிரை வண்டியோட்டும் , நாச்சியப்பனைத் தவிர வேறு யாரும் இல்லை. மற்ற வேலைக்காரர்களெல்லாம்

இருட்டுவதற்கு முன்பே அன்று போய்விட்டார்கள். இரவு காவலுக்கு வருபவர்கள் அதற்குள் வந்து சேர வில்லை. சாலையில் ரங்க போயனும் அவன் மனைவி யும் இருந்திருக்கிறார்கள்.

இவை யெல்லாம் போலீஸ் விசாரணையில் தெரிந்தன. நாச்சியப்பனையும் ரங்கபோயனையும் அல்லாமல் வேறு ஆண் யாரும் அந்தச் சமயத்தில் தோட்டத்தில் இல்லையென்று நிச்சயமாய்த் தெரி யவே, அவர்கள் இரண்டு பேர் மேலும் சந்தேகம் ஏற்பட்டது. மேலும், வேலப்பக் கவுண்டருக்குப் பகைவனென்று வெளிப்படையாக யாருமே இல்லை. இது சந்தேகத்தை அதிகப்படுத்தியது. அதனால் அவ்விருவரையும் போலீசார் கைதுசெய்துகொண்டு போனார்கள்.

ஆனால் போலீசார் தங்களுக்குத் தெரிந்த எல்லா முறைகளையும் பயன்படுத்தியும் அவர்களிட மிருந்து கொலையைப்பற்றி ஒரு தகவலும் தெரிந்து கொள்ள முடியவில்லை. நாச்சியப்பனும் ரங்கபோய னும் தங்களுக்கு அது சம்பந்தமாக ஒன்றுமே தெரியாதென்று மறுத்துவிட்டார்கள். போலீசார் அவர்களைப் பாதுகாவலில் வைத்திருந்தார்கள்.

நீதி மன்றத்தில் இந்தக் கொலை சம்பந்தமான விசாரணை தொடங்குவதற்கு முன்பு ஒருநாள் இந்தக் காவல் கைதிகள் இருவருக்கும் தனிமையில் சில வார்த்தைகள் பேசிக்கொள்ளச் சந்தர்ப்பம் தற் செயலாகக் கிடைத்தது.

ரங்க போயன் நாச்சியப்பனைப் பார்த்து, "யார் கொலை பண்ணியிருப்பார்கள்?" என்று ரகசியமாகக் கேட்டான்.

"உனக்கு இன்னும் தெரியாதா? நான்தான்" என்றான் நாச்சியப்பன்.

ரங்க போயன் திடுக்கிட்டுப் போனான். "என்ன, நீயா? எதற்காகப் பண்ணினாய்?"

"எதற்காகவா? பண்ணைக்காரன் என் வீட்டிலும் தன் கைவரிசையைக் காட்டப் பார்த்தான். அவனுக்கு நான் எப்படிப்பட்டவன் என்று தெரியாமல் போச்சு!"

ரங்க போயனுக்கு அப்பொழுது நாச்சியப்பன் மேல் தனி அன்பு பிறந்தது. "பின்னே நீ செய்யவே இல்லையென்று போலீசாரிடம் சாதித்தாயே?"

"ஆமாம்; செய்தேனென்று சொல்லுவதா? எனக்குத் தூக்குமரத்தில் போய்த் தொங்க வேணும்னு இப்போ ஆசையில்லை."

"இத்தனை வருசமா நீயுந்தானே பண்ணைக்காரருக்கு இந்த விஷயத்திலெல்லாம் உடந்தையாய் இருந்தாய்?"

"ஆமாம், அதுக்குத்தான் கடைசியிலே நீட்டின மரத்திலேயே பதம் பார்க்க வந்திருக்கிறான். அதெல்லாம் எங்கிட்ட நடக்குமா?"

இதற்குமேலே தொடர்ந்து பேச அவர்களுக்குச் சமயம் வாய்க்கவில்லை.

விசாரணை நாள் வந்தது. நாச்சியப்பன் கீழ்க் கண்டவாறு வாக்குமூலம் கொடுத்தான்.

"பண்ணைக்காரர் வண்டியை விட்டு இறங்கியதும் மாடு கன்றுகளைப் பார்ப்பதற்காக வழக்கம் போல் போய்விட்டார். நான் குதிரையைக்கொண்டு போய்க் கட்டி, அதற்குக் கொள்ளு வைத்தேன். அது தின்ற பிறகு கொஞ்சம் அருகம் புல் போட்டு

விட்டு நேராக என் வீட்டிற்குக் குறுக்குத் தடத்தின் வழியாகப் போய்விட்டேன். பண்ணைக்காரர் முன்னுலேயே போயிருப்பார். இருட்டாக இருந்ததால் அது எனக்கு நிச்சயமாகத் தெரியாது....நான் அவரிடம் பத்து வருஷங்களாகக் குதிரை வண்டி ஓட்டிக் கொண்டிருக்கிறேன். அவரிடம் எனக்கு எந்தவிதமான வருத்தமும் இல்லை. நாலு மாதத்திற்கு முன்புதான் எனக்குக் கலியாணம் நடந்தது. அதற்குக்கூட அவர் செலவுக்கென்று ஐம்பது ரூபாய் கொடுத்தார்."

நாச்சியப்பன் பேசும்பொழுது அவன் குரலில் ஒருவிதமான குழப்பமும் தோன்றவில்லை. தடுமாற்றமே யில்லாது களங்கமற்றவனைப்போல் மேற்கண்டவாறு கூறினான்.

அடுத்தபடியாக ரங்க போயனை விசாரித்தார்கள். அவனும் அழுத்தந்திருத்தமாகவே பதில் சொன்னான். ஆனால் அவன் அதிகம் பேசவில்லை. ஒரே வாக்கியத்தில் தன் வாக்குமூலத்தை முடித்துக் கொண்டான்.

"நான்தான் பண்ணைக்காரரைக் கொலை செய்தேன்"

அவ்வளவுதான் அவன் பேச்சு. யாரும் இதை எதிர்பார்க்கவே இல்லை. நீதிபதி, போலீஸ் இன்ஸ்பெக்டர் முதலியவர்கள் கொஞ்ச நேரம் திகைத்துப் போனார்கள். நாச்சியப்பன் அப்படியே கல்லாகி விட்டான்.

இரண்டு நிமிஷம் ஒரே நிசப்தம். பிறகு குறுக்கு விசாரணை நடந்தது:

"எதற்காகக் கொலை செய்தாய்?"

"நான் குடிப்பதற்காகப் பணம் கேட்டேன். என்றைக்கும் கேட்டவுடன் கொடுப்பார். அன்றைக்கு இல்லையென்றார்; எனக்குக் கோபம் வந்தது. கையில் வைத்திருந்த குத்திட்டியால் குத்திவிட்டேன்."

"அப்பொழுது அங்கே ஒருவரும் இல்லையா?"

"ஒருவரும் இல்லை; வேலைக்காரர்களெல்லாம் வீட்டுக்குப் போய்விட்டார்கள்."

"நாச்சியப்பன் அங்கே இருக்கவில்லையா?"

"இல்லை."

நாச்சியப்பன் விடுதலை செய்யப்பட்டான். ரங்க போயனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அவன் அதை அமைதியாக ஏற்றுக்கொண்டான். தண்டனையை நிறைவேற்றுவதற்கு முன்பு அவன் நாச்சியப்பனை ஒரு முறை பார்க்கவேண்டுமென்று விருப்பத்தைத் தெரிவித்தான்; அதற்கு அனுமதி கிடைத்தது.

இருவரும் கொஞ்ச நேரம் தனியாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"நீ எதற்காக இந்தக் குற்றத்தை ஏற்றுக்கொண்டாய்?"

"உன்மீது எந்த விதத்திலும் குற்றம்ருசுவாகாமல் இருப்பதற்காகத்தான்."

"அதனால் உனக்கு என்ன பிரயோசனம்?"

"நீ இந்த உலகத்தில் இருந்தால் பண்ணைக்காரர் போன்ற மனிதர்கள் கொஞ்சம் அடங்கியிருப்பார்கள். நான் இருந்து யாருக்கு லாபம்? நம்மைத்தான் இந்தக் கோர்ட்டுகள் தண்டிக்குமே ஒழிய அவர்களை ஒன்றும் செய்யாது. அதனால் நீ இருப்பது நான் இருப்பதைவிட நல்லது. உனக்கு இருக்கிற தைரியம் எனக்கு இல்லை."

"உன்னை விடவா நான் தைரியசாலி? செய்யாத குற்றத்தைச் செய்ததாக ஏற்றுக்கொண்டு சாகப் போகிற உனக்கு நான் எந்த மூலை?"

"சரி சரி. அதைப்பத்தி இப்போ பேசவேண்டியதில்லை. நீ இப்பொழுதுதான் கலியாணம் பண்ணிக் கொண்டிருக்கிறாய். நீயும் உன் பெண்டாட்டியும் எவ்வளவு பிரியமாய் இருக்கிறீர்களென்று எனக்குத் தெரியும். நீங்கள் சுகமாக இருக்கவேணும்."

"நீயும் உன் வீட்டுக்காரியும் அப்படிப் பிரியமாகத்தானே இருந்தீர்கள்?"

ரங்கபோயன் மௌனம் சாதித்தான். பழைய நினைவுகள் அவன்முன்பு படக்காட்சிபோல் நின்றன. பேசக் கிடைத்த நேரம் தீர்ந்தது என ஒருவன் அறிவித்துக்கொண்டு பக்கத்தில் வந்தான்.

இருவரும் பிரிந்தனர்.

# சாமி தரிசனம்

இடுப்பிலே கோவணம், கையிலே நீண்ட கொக்கித் தடி, தலையைச் சுற்றி ஓர் அழுக்கடைந்த பழங்கந்தை இப்படி அதிகாலையிலே பண்ணைக்காரர் முத்துசாமிக் கவுண்டருடைய மாட்டுப் பட்டியிலே வீரன் காட்சி அளிப்பான்.

(அவனுக்கு வயது எட்டு நிறையவில்லை. அதற்குள்ளே அவன் தனது வயிற்றுப் பிழைப்புக்காக வேலை செய்ய வேண்டியதாகிவிட்டது. அவன் தாய் தகப்பன் எல்லோருமே கூலி வேலை செய்கிறார்கள் இருந்தாலும் குடும்பத்துக்கு அவர்களுடைய வரும்படி கட்டிவரவில்லை) அதனால் வீரன் எருமை ஒன்றை மேய்ப்பதற்கு ஆளாகச் சேர்ந்தான்.

காலையில் பழையது சாப்பிட்டுப் போனால்; இருட்டான பிறகுதான் அவன் வீடு திரும்புவான். பகலெல்லாம் எருமை மேய்ப்பான். மத்தியான்னம் பண்ணைக்காரர் வீட்டிலேயே சோளக்கூழ் ஊற்றுவார்கள்.

எருமை மேய்ப்பதற்காக வீரனுக்கு மாதம் இரண்டு வள்ளம் ராகி கூலி கிடைத்தது; ஒரு வேளை உணவும் கிடைத்தது (அந்த ஏழைக் குடும்பத்துக்கு அதுவே பெரிய வருவாய்)

எருமை மேய்ப்பதென்றால் சிறுவனுக்கு ஒரு விளையாட்டு கரட்டுப்பாளையத்துக்குப் பக்கத்திலேயே சிறிய ஓடை ஒன்று செல்கிறது அதில் ஆண்டு முழுதும், தண்ணீர் குறு குறுவென்று ஓடிக்கொண்

டிருக்கும்; அதனால் அதன் இரு மருங்கிலும் பசே லென்று பசும்புல் அடர்ந்து வளரும். அங்கே எரு மையை ஓட்டிக்கொண்டு போய்மேய விட்டுவிட்டு, வீரன் ஒரு மரத்தடியில் இருப்பான்; அவனைப் போலவே இன்னும் சில பையன்களும் அங்கே கூடு வார்கள். பனங்கொட்டை ஆட்டம், பந்து, பம்பரம் முதலிய விளையாட்டுக்களிலே அவர்களின் பொழுது போகும்.

வீரனுக்கு அவன் தகப்பன் ஒரு தப்பட்டை கட்டிக் கொடுத்திருந்தான். அவனுக்கு இந்த வயதி லேயே எல்லாவிதமான கொட்டு முழக்கும் தெரியும்; பெரியவனாகிறபோது அப்பனைவிட அவன் தப்பட்டை அடிப்பதில் கெட்டிக்காரனாவான் என்று சேரியில் பெருமையாய்ப் பேசிக்கொள் வார்கள்.

மேலே சொன்ன விளையாட்டுக்களில் சலிப்பு ஏற்பட்ட சமயத்தில், வீரன் தனது தப்பட்டையை எடுத்து முழக்குவான். மற்றச் சிறுவர்கள் ஒரு கம்பம் நட்டு அதைச் சுற்றி ஆடுவார்கள். இப்படிப் பகலெல்லாம் இன்பமாகவே கழியும்.

வீரன் வேலைக்குச் சேர்ந்த நாலாவது மாதத்தில் முத்துசாமிக் கவுண்டர் ஓர் இளஞ் செம்மறிக் கடாவை வாங்கினார், அடுத்த ஆடியிலே காட்டுக் கறுப்பண்ண சுவாமிக்குப் பலியிடுவதற்காக.

வீரன்தான் அதையும் மேய்த்து வந்தான். நாளாக நாளாக அவனுக்கு அந்தக் குட்டியின் மேல் அளவு கடந்த பிரியம் உண்டாகிவிட்டது. விளை யாட்டையெல்லாம் விட்டுவிட்டு, அதற்குப் புல் தேடிக் கொடுப்பதிலேயே இப்போது காலத்தைப் போக்கலானான். அந்த வாயில்லாப் பிராணியும்

வீரனுடைய அன்பை உணர்ந்து கொண்டதுபோலத் தோன்றியது. அது அவனுடனேயே எந்நேரமும் சுற்றிக்கொண்டிருக்கும்.

ஆறு மாதங்களில் அது நன்றாய்க் கொழுத்துப் பருத்துவிட்டது. இரண்டு கொம்புகள் திருகிக் கொண்டு யாரும் சற்று அஞ்சும்படி அதன் தலையிலிருந்து வெளிக் கிளம்பின. உடம்பெல்லாம் அடர்ந்து சுருண்ட செம்பட்டை மயிர்.

வீரன் அதற்குத் திருகு கொம்புச் செம்பட்டை என்று பெயர் கொடுத்தான். 'ஏ செம்பட்டை!' என்று அவன் கூவினால், அது குதித்துக்கொண்டு அவனிடம் ஓடி வரும். யாராவது விளையாட்டாக அவனை அடிக்க வந்தாலும், அந்தக் கடா அவரை முட்டப் போய்விடும்.

இப்படியாக வீரனும் திருகுக் கொம்புச் செம்பட்டையும் நெருங்கிய தோழர்களாக வளர்ந்து வந்தார்கள். வீரனின் பேச்சு அதற்குத் தெரியும்; அதன் உள்ளத்தை அதன் பார்வையிலிருந்தும் சத்தத்திலிருந்தும் அவனும் தெரிந்து கொள்ளுவான். அது தலையை நிமிர்ந்து ஏறிட்டுப் பார்த்தால் அதன் பொருளை உடனே வீரன் கண்டு கொள்ளுவான். சொற்களால் அவ்வளவு அழகாக உள்ளுணர்ச்சிகளை அவனுக்கு வெளிப் படுத்த முடியாது.

திருகு கொம்பன் வயிறு நிறையப் புல் மேயவில்லை என்றால் அன்று வீரனுக்குக் கஞ்சி குடிக்கவே மனம் இருக்காது. தன்னை வீரன் மேய்க்கவில்லையென்றால், அந்தக் கடாவும் வாயினால் புல்லைத் தொடாது.

ஒரு நாள் வீரன் காலையில் கொஞ்சம் அதிக நேரம் தூங்கிவிட்டான். அதனால் வழக்கமாக எழு

வீரனுடைய அன்பை உணர்ந்து கொண்டதுபோலத் தோன்றியது. அது அவனுடனேயே எந்நேரமும் சுற்றிக்கொண்டிருக்கும்.

ஆறு மாதங்களில் அது நன்றாய்க் கொழுத்துப் பருத்துவிட்டது. இரண்டு கொம்புகள் திருகிக் கொண்டு யாரும் சற்று அஞ்சும்படி அதன் தலையி லிருந்து வெளிக் கிளம்பின. உடம்பெல்லாம் அடர்ந்து சுருண்ட செம்பட்டை மயிர்.

வீரன் அதற்குத் திருகு கொம்புச் செம்பட்டை என்று பெயர் கொடுத்தான். 'ஏ செம்பட்டை!' என்று அவன் கூவினான், அது குதித்துக்கொண்டு அவனிடம் ஓடி வரும். யாராவது விளையாட்டாக அவனை அடிக்க வந்தாலும், அந்தக் கடா அவனை முட்டப் போய்விடும்.

இப்படியாக வீரனும் திருகுக் கொம்புச் செம் பட்டையும் நெருங்கிய தோழர்களாக வளர்ந்து வந்தார்கள். வீரனின் பேச்சு அதற்குத் தெரியும்; அதன் உள்ளத்தை அதன் பார்வையிலிருந்தும் சத்தத்திலிருந்தும் அவனும் தெரிந்து கொள்ளு வான். அது தலையை நிமிர்ந்து ஏறிட்டுப் பார்த் தால் அதன் பொருளை உடனே வீரன் கண்டு கொள்ளுவான். சொற்களால் அவ்வளவு அழகாக உள்ளுணர்ச்சிகளை அவனுக்கு வெளிப் படுத்த முடியாது.

திருகு கொம்பன் வயிறு நிறையப் புல் மேய வில்லை என்றால் அன்று வீரனுக்குக் கஞ்சி குடிக்கவே மனம் இருக்காது. தன்னை வீரன் மேய்க்கவில்லை யென்றால், அந்தக் கடாவும் வாயினால் புல்லைத் தொடாது.

ஒரு நாள் வீரன் காலையில் கொஞ்சம் அதிக நேரம் தூங்கிவிட்டான், அதனால் வழக்கமாக எழு

மையை அவிழ்த்து விடும் நேரத்துக்கு வர முடிய வில்லை. பண்ணைக்காரருக்குக் கோபம் வந்து இரண்டடி அடித்து விட்டார். வீரன் இரண்டு நாள் வேலைக்கு வர முடியாதென்று பிணங்கிக் கொண்டான்.

திருகு கொம்பன் அந்த இரண்டு நாளும் புல்லைத் தொடவே இல்லை; தண்ணீரும் குடிக்கவில்லை. அப்படியே படுத்திருந்தது. சாமிக்கு விட்ட கடா இப்படிக் கிடக்கிறதே என்று முத்துசாமிக்கவுண்டர் ஆள்விட்டு வீரனைக் கூட்டிவந்து அவனிடம் சிறிது அன்பாகப் பேசி மறுபடியும் வேலைக்குச் சேர்த்துக் கொண்டார். கூலியும் இரண்டு படி அதிகப் பட்டது.

வீரன் வேலைக்கு வராமல் இருந்த போதிலும் அவன் மனமெல்லாம் திருகு கொம்பன் மேலேயே இருந்தது. அதனால், பண்ணைக்காரர் கூப்பிட்டுப் பேசியதும் மகிழ்ச்சியோடு வேலைக்கு வந்துவிட்டான் பழையபடி அவன் தனது அருமைக் கடாவுடன் இன்பமாக நாளைக் கழித்தான்.

ஆடி மாதம் வந்தது. திருகுகொம்புச் செம் பட்டையைக் காட்டுக் கறுப்பண்ணனுக்குப் பலி கொடுத்துவிட்டார்கள். அது இறக்கும்போது, வீரிட்டு அலறியதை வீரன் ஓர் ஓரத்தில் நின்று கேட்டு விம்மி விம்மி அழலானான்.

"டே, சாமிக்குக் கடா வெட்டறப்போ அழுவப் படாது" என்று அவன் தகப்பன் ஆறுதல் சொன்னான்.

ஆனாலும், வீரன் அழுகையை நிறுத்தவில்லை. "செம்பட்டையை உசிரோடு சாமிக்கு விட்டிருந்தா, அவர் ஏறிச் சவாரி பண்ணலாமே; செத்த கடாவை

அவர் என்ன செய்வாரு?'' என்று சொல்லித் தேம்பினான்.)

“சும்மா இங்கே விட்டா, நரி கிரி கொண்டு போயிடாதா?'' என்றான் தகப்பன்.

"சாமிக்கு அதைத் தடுக்க முடியாதா? அதைக் கூடச் செய்ய முடியாத அந்தச் சாமிக்குக் கடா என்னத்துக்கு வெட்ட வேணும்?

“டே அப்படிச் சொல்லாதே. பண்ணைக்காரர் காதிலே கேட்டா அடிப்பாரு.''

"அடிச்சா அடிக்கட்டுமே! திருகு கொம்பனை வெட்டி விட்டாங்களே. ஐயோ அது எப்படித் துடிச்சுதோ?''

"துடிச்சா என்ன? அந்தக் கடா, சாமிக்கு வெட்டினதுனாலே சொர்க்கத்துக்குப் போகும். அதுக்காக நீ அழுவப்படாது.''

என்ன ஆறுதல் சொன்னாலும், செம்மறிக்கடா இறக்கும்போது அலறிய பரிதாபக் குரலை வீரனால் மறக்கவே முடியவில்லை.

அன்று மத்தியான்னம் வீரனுக்கும் அவன் வீட்டாருக்கும் பண்ணைக்காரரின் வீட்டிலிருந்து கடாக் கறிக்குழம்புடன் சோறு கிடைத்தது. ஆனால், வீரன் அதைத் தொட மறுத்துவிட்டான். இரவிலும் பசியில்லை என்று படுத்துக்கொண்டான்.

அவனுக்குத் தூக்கம் வரவே இல்லை. திருகு கொம்பனின் கடைசிக் குரலே அவன் காதில் இடைவிடாது ஒலித்துக்கொண்டிருந்தது. "திருகு கொம்பன் சொர்க்கத்துக்குப் போயிருக்குமா? அதை

அங்கே யாரு மேய்ப்பா? அங்கே புல் நிறைய இருக்குமா?" என்று இப்படித் தன்னைத்தானே கேட்டுக் கொண்டு படுத்திருந்தான். அவனுக்கு ஒரு பதிலும் கிடைக்கவில்லை.

இரவு பன்னிரண்டு மணி ஆகிவிட்டது. இன்னும் அவன் கேள்விகளுக்கு விடை தெரியவில்லை. அந்தக் கறுப்பண்ணை சாமியையே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று கடைசியாக அவன் முடிவு செய்துகொண்டு எழுந்து கோயிலுக்குப் புறப்பட்டான்.

கோயில் ஒரு புன்செய் நிலத்திலே ஆல மரத்தடியில் கட்டப்பட்டிருந்தது. சிறிய கோயில்; கதவில்லாத காரைச் சுவர் மண்டபம். மூன்று பக்கம் சுவரும் ஒரு பக்கம் திறந்தும் இருக்கும். அவ்வளவுதான். ஆண்டுக்கு ஒரு முறை ஆடி மாதத்திலே சுற்றுப் பக்கத்து நிலச் சொந்தக்காரர்கள் பொங்கலிட்டு ஆடு பலி கொடுப்பார்கள். மற்ற நாட்களில் கறுப்பண்ணை சாமிக்குப் பூசை கூடக் கிடையாது. இந்தச் சாமி தங்களுடைய நிலத்தையும் ஆடுமாடுகளையும் காவல் புரிவதாக எல்லோரும் நம்பினார்கள்.

வீரன் கோயிலுக்கு வெளியே நின்று சாமியை எட்டிப் பார்த்தான். உள்ளே போக அவன் கால் கூசிற்று. தான் உயிருக்குயிராக அன்பு கொண்ட கடாவைப் பற்றிச் சாமியிடம் கேட்க எவ்வளவு ஆவல் இருந்தாலும், ஒரு சக்கிலிப் பையன் கோயிலுக்குள் நுழைய முடியுமா?

வீரனின் நெஞ்சு பட பட என்று அடித்துக் கொண்டது. சுற்றுமுற்றும் பார்த்தான். எங்கும் ஒரே இருட்டு. நிலத்தில் தோய்ந்து கிடந்த

ரத்தத்தில் மொய்த்துக்கொண்டிருந்த எறும்புகள் அவன் காலைக் கடித்தன.

அவன் கறுப்பண்ணசாமியை ஆசையோடு கேட்டான்: "சாமி, இருகு கொம்புச் செம்பட்டை சொர்க்கத்துக்கா போயிடுச்சு? அங்கே அதை நல்லா மேய்ப்பாங்களா?"

இதே கேள்வியை அவன் பல தடவை திருப்பித் திருப்பிக் கேட்டான்; ஒரு பதிலும் கிடைக்கவில்லை. நிலத்தில் விழுந்து கும்பிட்டுக்கொண்டே கெஞ்சிக் கேட்டான். பதில் வரவேயில்லை.

"சாமி, நீ சொல்லாவிட்டால் இந்த இடத்தை விட்டுப் போகவே மாட்டேன்; இல்லாதபோனால், என்னையும் அது இருக்கும் இடத்துக்குக் கூட்டிக் கிட்டுப் போ; நான் அதை மேய்க்கிறேன்" என்று, கடைசியாகச் சாமிக்கு முன்னால் சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டுப் படுத்துவிட்டான். பதில் வரவே யில்லை. எறும்புகள்தான் மேலெல்லாம் கடிக்கத் தொடங்கின.

கிழக்கு வெளுத்துப் பொழுதும் விடிந்தது; இன்னும் பதில் வரவில்லை. வீரன் மனமுடைந்து விட்டான். கறுப்பண்ணசாமிமேல் அவனுக்கு ஒரே வெறுப்புண்டாயிற்று. "சாமியைப் பாரு, சாமியை. சாமியாயிருந்தால், பேசுமோ இல்லையோ? கல்லை நட்டு வச்சுக்கிட்டு, செல்லமா வளர்த்த கடாவை யெல்லாம் வெட்டறாங்களே" என்று கத்திக் கொண்டே, கோயிலுக்குள் நுழைந்தான். கறுப் பண்ணசாமியைப் பிடுங்கி வெளியில் கொண்டு வந்து வீசியெறிந்தான்.

அந்தச் சமயம் முத்துசாமிக் கவுண்டர் தம் நிலங் களைப் பார்வையிட்டுக்கொண்டே அங்கே வந்தார்.

கோயிலில் உண்டான சத்தங் கேட்டு, "என்னடா, வீரா! அங்கே இந் நேரத்திலே என்ன பண்ணறே?" என்று கேட்டார்.

"இந்தக் கல்லைப் பிடுங்கி எறிஞ்சிட்டேனுங்க. இது சாமி இல்லை—வெறுங் கல்லு" என்று களங்கமில்லாமல் பதில் சொன்னான்.

பண்ணைக்காரருக்குத் தலைகால் தெரியாமல் கோபம் பிறந்துவிட்டது. "கோயிலுக்குள்ளே நீ எப்படிப் போகலாமடா? போனது மில்லாமெ, சாமியைப் பிடுங்கிவிட்டாயா?" என்று உறுமி, அவனை அடி அடியென்று அடித்து நொறுக்கி விட்டார்.

வீரன் கோயிலுக்கு முன்னாலே மயங்கி உணர்வற்று விழுந்தான். வெகுநேரம் ஆகியும் அவனுக்கு மயக்கம் தெளியவில்லை.

தகப்பனுக்குச் செய்தி கிடைத்தவுடன் வந்து, அவனைத் தூக்கிக்கொண்டு போய்க் குடிசையில் போட்டான்.

வீரன் கண் விழித்தபோது உச்சி வேளையாகி விட்டது. அவனால் அசையக்கூட முடியவில்லை. உடம்பெல்லாம் ஒரே வலி. விலா எலும்பு இரண்டு ஒடிந்திருந்தன.

யாரும் அவனுக்கு ஆறுதல் கூறுவார் இல்லை. தகப்பனும் தாயுங்கூட அவனை வாய்க்கு வந்தபடி வைது பேசிக்கொண் டிருந்தார்கள்.

வீரன் தனது அருமைக் கடாவை நினைத்துக் கொண்டே படுத்திருந்தான். மாலை வேளை ஆக ஆக அவன் உடம்பு கொதிக்கத் தொடங்கிற்று. மிகக்

கடுமையான காய்ச்சல், உடம்பில் கை வைக்க முடியவில்லை.

இரவெல்லாம் அவன் என்னென்னவோ உளறினான். காய்ச்சலின் வேகம் அவனால் தாங்க முடியவில்லை. (தலை சுழன்றது; மூளை கலங்கிற்று. ஆனால் திருகு கொம்பனைப் பற்றிய நினைவு மட்டும் அவனுக்கு மாறவில்லை) "செம்பட்டை, ஐயோ! அலறாதே, அலறாதே! உன்னை வெட்டி விட்டாங்களா? நீ சொர்க்கத்திலே இருக்கிறாயா? கறுப்பண்ண சாமி பேசவே மாட்டேங்குதே. அது சாமி இல்லை; கல்லு; வெறுங் கல்லு" என்று என்னென்னவோ பிதற்றிக்கொண்டே இருந்தான்.

மறுநாட் காலையில் இந்தக் கதறல் மாறிவிட்டது. வீரன் முகத்திலே ஒரு தெளிவு பிறந்தது. அவனுடைய ஆசை நிறைவேறிவிட்டது போல் தோன்றிற்று. அவன் ஆனந்தமாகச் சிரித்தான். எதையோ பார்த்துப் பரவசமடைந்தான். "சாமி, எனக்குத் தரிசனங் கொடுத்தியா? எனக்கும் சொர்க்கங் கொடு" என்று தழுதழுத்த குரலில் அவன் கெஞ்சினான். திருகு கொம்புச் செம்பட்டை அவனுக்குக் காட்சி அளித்தது. அதன் முகத்தில் என்றுமில்லாத ஓர் ஒளி இருந்தது. சாகும்போது அதன் கண்ணிலிருந்த மருண்ட பார்வை போய் இப்போது சாந்தி பொங்கிற்று. அது அன்போடு தெய்விகக் குரலில் தன்னை அழைப்பதாக வீரன் உணர்ந்தான். "நீதான் சாமி; அந்தக் கல்லு சாமியில்லை. நீ தான் எனக்குச் சொர்க்கங் கொடுக்கும் சாமி" என்று அவன் உதடுகள் அசைந்தன.

அவன் ஆவி பிரிந்தது.

# பிள்ளை வரம்

"எந்த வீட்டைப் பார்த்தாலும் இதிலே சொத்தை, அதிலே சொத்தை என்கிறாயே; நாம் என்ன விலைக்கா வாங்கப் போகிறோம்? இரண்டு நாளைக்கு இருப்பதற்கு இந்த மகாராணிக்கு ஒரு பங்களாக் கட்டிவிடலாமா?" என்று முத்துசாமிக் கவுண்டர் கோபத்தோடு முணு முணுத்துக் கொண்டே போனார். அவருக்கு வயது சுமார் நாற்பத்தைந்து இருக்கும். மிக இளவயதிலேயே 'மைனர் தர்பார்' நடத்தத் தொடங்கியதால் இப்பொழுதே அவர் கிழப் பருவத்தை அடைந்துவிட்டார். தலை அநேகமாக வெளுத்துத் தோன்றியது. முகத்தில் ஒடுக்கு விழுந்துவிட்டது.

ஆண்மை குன்றி உடல் அலுத்துப்போனவர்கள் சீக்கிரம் பொறுமையை இழந்துவிடுவது இயற்கையே. முத்துசாமிக் கவுண்டரும் இந்த விதிக்கு மாறுபட்டவர் அல்ல. சிறு வயதில் இவர் யாரிடமும் கோபித்துக்கொள்வதே இல்லையாம். ஆனால், இப்பொழுது கொஞ்சம் மனத்திற்குப் பிடிக்காவிட்டாலும் எரிந்து விழுவார். அவருடைய இரண்டாம் மனைவி லக்ஷ்மிகூடச் சில சமயங்களில் இதற்கு இலக்காகாமற் போகவில்லை.

ஆனால் முத்துசாமிக் கவுண்டருக்கு அவளிடம் பிரேமை அதிகம். முதல் மனைவி, அவரது தர்பார்களின் பயனாகவே மகப்பேறு கூட இல்லாமல் எமன் வாய்ப்பட்டாள். இரண்டாவது கல்யாணமாகி மூன்று ஆண்டு ஆகின்றன. குழந்தை இல்லாததால்

முத்துசாமிக் கவுண்டர் மனைவியுடன் ஸ்தல யாத்திரையாக வந்திருக்கிறார்.

அவர் தட்டுப்பாளையத்தில் பெரியபணக்காரர். பணக்காரரென்றால், "காடு வா, வா" என்கிற பருவமாயிருந்தாலும் பெண் கொடுப்பவர் நான் முந்தி நீ முந்தி என்று வருவார்கள் அல்லவா?

லக்ஷ்மிக்குப் பதினெட்டு வயதிருக்கலாம். அவள் நல்ல அழகு வாய்ந்தவள்; அவள் சுத்தப்பட்டிக்காடல்ல. 'பவுடர்' அடித்துக்கொள்ளத் தெரியும்; ரொம்ப நாசூக்குக்காரி என்று எல்லோரும் சொல்லுவார்கள்.

தர்பார்க் கிழவர் அவளுக்கு வேண்டியவையெல்லாம் வாங்கிக் கொடுப்பார். அவளுக்கு நாவல் படிப்பதும் பவுடர் அடித்துக்கொள்வதுந்தான் வேலை. உறவினர் வந்தால்கூட அவர்களிடம் அதிகமாகப் பேச மாட்டாள். அவர்கள் எல்லாம் நாகரிகமற்றவர்கள் என்பது அவளுடைய எண்ணம்.

கல்யாணமாகிக் கொஞ்ச காலம் புது வாழ்க்கையும், நாகரிக நடை உடைகளும், பணச்செருக்கும் லக்ஷ்மிக்கு இன்பம் கொடுத்துக் கொண்டிருந்தன; ஆனால் விரைவில் யோசனை செய்யவேண்டிய காலம் வந்துவிட்டது.

முத்துச்சாமிக் கவுண்டர் எப்பொழுதும் தம் இளம் மனைவியுடன் இருப்பார், வெல்லப்பாகில் ஈ மொய்ப்பது போல. லக்ஷ்மி தன்னைப்போன்ற இளவயதினர்களுடன் உல்லாசமாகக் காலங்கழிக்க ஆசைப்படுவாள். இது அவருக்குப் பிடிப்பதில்லை. கிழட்டு மோகம் என்று சொல்லுவார்கள்; அது லக்ஷ்மிக்குச் சங்கடமாக இருந்தது.

இப்பொழுது இந்தத் தம்பதிகள் திருப்பதியிலே தங்குவதற்காக ஒரு வீடு தேடிக்கொண்டிருக்கின்றனர். இரண்டு மூன்று வீடுகளைப் போய்ப் பார்த்தார்கள். அவைகளெல்லாம் லக்ஷ்மிக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் கவுண்டருக்குக் கோபம் வந்துவிட்டது.

திருப்பதியில் பணம் அதிகமாகக் கொடுத்தாலும் நல்ல வீடு கிடைக்காது. பொதுவாகத் தரிசனத்திற்கு வருபவர் யாரும் நல்லவீட்டைப்பற்றி அதிகம் கவலைப்படுவதும் இல்லை. சமைப்பதற்கும், துணிமணிகளை வைத்துக்கொள்வதற்கும் ஒரு சிறு வீடோ, அல்லது சத்திரத்தில் ஒரு மூலையோ கிடைத்தால் அதுவே திருப்தி. கோயில் அர்ச்சகர்களைவிட அதிகமாக மூட்டைப்பூச்சிகளும், கொசுக்களும் உயிரை வாங்குகின்றனவேயென்று அவர்கள் கவனிப்பதில்லை. 'ஒரு நாள், இரண்டு நாள், அதற்குள் என்ன கெட்டுப்போகும்? நம்ம வீடா—எல்லா வசதிகளும் தேடிக்கொண்டிருக்க?' என்று இருந்துவிடுவார்கள்.

லக்ஷ்மிக்குச் சுகாதாரத்தைப்பற்றிக் கவலையில்லை. இத்தனை பெரிய பணக்காரி ஒரு சாதாரண வீட்டில் தங்குவாளா? அவள் பணக்காரியென்று, அங்கு அவளுக்கும், அவள் கணவனுக்கும், கூடவந்திருக்கும் சமையல்காரனுக்கும் தவிர வேறு யாருக்கும் தெரியாது. இருந்தாலும் சிறிய வீட்டில் தங்க அவள் மனம் ஒப்பவில்லை. கடைசியாக ஒரு மெத்தை வீட்டின் கீழ்ப்பகுதியில் ஓர் அறையும், சமைக்கத் தனியறை ஒன்றும் கிடைத்தன. மெத்தை வீடாதலால் லக்ஷ்மி மகிழ்ச்சி அடைந்தாள்.

மாலையில் அவர்கள் ஆழ்வார் தீர்த்தத்திலும், பாபநாசத்திலும் சென்று முழுகிவிட்டுச் சுவாமி தரி

சனத்திற்குச் சென்றனர். "என்ன கவுண்டரே! அர்ச்சனை உண்டா? அஷ்டோத்தரமா, ஸஹஸ்ர நாமமா?" என்றான் அர்ச்சகன்.

முத்துசாமிக் கவுண்டர், "ஸஹஸ்ரநாமமே பண்ணுங்கோ, சாமி" என்றார்.

அர்ச்சனை வாயுவேகமாக நடந்து தீபாராதனையில் முடிந்தது. முத்துசாமிக் கவுண்டர், "வேங்கடாசலபதி, பிள்ளைக் குறை தீர்க்கவேணும்" என்று வாய்விட்டுச் சொல்லித் துதித்தார். லக்ஷ்மிக்கு அதைப்பற்றிக் கவலை இருந்ததாகத் தெரியவில்லை. கணவன் நாகரிக இளைஞனாக இல்லையே என்பதுதான் அவள் ஏக்கம்.

சுவாமி தரிசனம் செய்துவிட்டு முத்துசாமிக் கவுண்டர் காதில் துளசியைச் செருகிக்கொண்டு இருக்கையை நோக்கிப் புறப்பட்டார். லக்ஷ்மி சிந்தனையில் ஆழ்ந்தபடியே அவர் பின்னால் நடந்து கொண்டிருந்தாள்.

நாவல்களிலெல்லாம் காதலைப் பற்றி அவள் படித்திருக்கிறாள். அவள் படித்ததற்கும் அவளது நிலைமைக்கும் எங்காவது சம்மந்தம் இருக்கிறதா? மனோபாவமும், கற்பனா சக்தியும் மறைந்துபோன ஒரு கிழவருடன் அவள் வாழ்க்கை இன்பத்தைத் தேடவேண்டியிருந்தது.

வீடு வந்து சேர்ந்தனர். முத்துசாமிக் கவுண்டர் நடந்த அலுப்பால், "உஸ், அப்பாடா!" என்று உட்கார்ந்தார். லக்ஷ்மி எண்ணமிட்டபடி வெளியே நின்றாள்.

அந்தத் தருணத்தில் மாடியிலிருந்து ஓர் இளைஞன் இறங்கி வெளியே போனான். வயது

வதாகக் காணவில்லை. தலையெழுத்து என்று ஒரு குரல் அழுதுவிட்டுப் பேசாதிருந்து விடுவார்கள். லக்ஷ்மியின் மனக் குறையைக் குறட்டையின் உறுமல் அதிகப்படுத்தியது.

அந்தச் சமயத்தில் மேல் மாடியிலிருந்து 'பாஞ்சோ' வாத்தியத்தின் ஒலி கேட்டது. லக்ஷ்மி நடேசனைப்பற்றித் தன்னை அறியாமலே சிந்திக்க லானாள். தட்டுப்பாளையத்திற்கும் ஈரோட்டிற்கும் ஏழு மைலுக்குமேல் இல்லை. அவ்வளவு சமீபத்தில் இருக்கும் ஒரு நகரத்தில் வாழும் வாலிபன் இவர்கள் வந்த சமயத்திலேயே திருப்பதிக்கு வந்திருக்கிறான்; அதனுடன் இவர்கள் தங்கின வீட்டிலேயே தங்கி யிருக்கிறான். இது லக்ஷ்மிக்கு முதலில் ஆச்சரிய மாகவே இருந்தது. பிறகு நடேசனைப்பற்றிப் பலவாறு எண்ணமிடலானாள். அவன் நாகரிகம் வாய்ந்த இளைஞன் அல்லவா?

லக்ஷ்மி இரவெல்லாம் ஏதேதோ கனவு கண் டாள். அடிக்கடி தூக்கங் கலைந்து எழுந்தாள். அப் பொழுதெல்லாம் கணவனின் குறட்டை அவள் மனத்தைப் புண்படுத்தும்.)

காலையில் லக்ஷ்மி வெளியே வந்தபொழுது நடேசன் வீட்டுக்காரியிடம் பேசிக்கொண்டிருந் தான்; முத்துச்சாமிக் கவுண்டர் மொட்டை அடித் துக்கொண்டு வருவதற்காகப் புறப்பட்டார். அவ ரைக் கண்டதும் நடேசன் ஒருவகையான கலவரத் தோடு லக்ஷ்மியை ஏறிட்டுப் பார்த்துவிட்டுத் திடீ ரென்று மேல் மாடிக்குச் சென்றுவிட்டான்; லக்ஷ்மி இதை நன்கு கவனித்தாள்; தன் கணவனைக் கண் டதும் ஏன் அவன் முகங் கோணவேண்டும்? பிறகு எதற்காகத் தன்னை ஆழ்ந்து நோக்கினான்? ஆகா! என்ன பார்வை! ஒருகால் அவன் தன் கதியை

அறிந்து விசனப்பட்டாளு?— ஆமாம், அப்படித் தான் இருக்கவேண்டும். வீட்டுக்காரியிடம் அவன் என்னைப்பற்றி விசாரித்திருப்பான்.

தனியாக உட்கார்ந்துகொண்டு லக்ஷ்மி தன் மனத்தைக் கற்பனையுலகில் தாராளமாக உலவ விட்டுவிட்டாள்.

ஆனால் அவள் மனக்கோட்டை திடீரென்று இடிந்து விழலாயிற்று, முத்துசாமிக் கவுண்டர் உள்ளே நுழைந்தார். லக்ஷ்மி தன்னை அறியாமலே பெருமூச்சு விடலானாள்.

அன்று சாயங்காலமே ஊருக்குத் திரும்பி விடுவதாக அவர்கள் எண்ணிக்கொண்டு வந்திருந்தார்கள். ஆனால் லக்ஷ்மிக்கு அன்றே புறப்பட விருப்பமில்லை; வீடு அவளுக்குப் பெரிதும் திருப்தி அளித்தது. வேங்கடாசலபதியை இன்னும் சில நாட்களுக்குத் தரிசனம் செய்ய ஆசைப்பட்டாள்! முத்துசாமிக் கவுண்டருக்கோ ஒரே மகிழ்ச்சி. எத்தனை நாட்களென்றாலும் அவருக்குச் சம்மதந்தான்; ஆதலால் மேலும் ஒரு வாரம் அங்கேயே இருப்பதென்று முடிவு செய்துவிட்டார்கள்.

நடேசனை அன்று முழுதும் பார்க்க இயலவில்லை. அவன் தன் அறையைவிட்டு வெளிக் கிளம்பவே இல்லை! இரவில் பாஞ்சோ ஒலியும் கேட்கவில்லை.

மறுநாள் காலை லக்ஷ்மி சமையலறையில் அன்று சமைக்க வேண்டிய உணவைப்பற்றிச் சொல்லிவிட்டு வந்தாள்; அப்பொழுது வீட்டிற்குள் நடேசன் குரல் கேட்டது. அவள் மெய் சிலிர்த்தது; மெதுவாகக் கதவுப் பக்கம் போய் நின்று உற்றுக் கேட்டாள்! நடேசன் ஆத்திரத்தோடு பேசிக்கொண்டிருந்தான்.

"என்னைப்போல் எத்தனை பேர் சமூகத்தில் தலை காட்ட நாணி மறைவாகத் திரிகிறார்களோ? என் தாயைக் கெடுத்தது மட்டுமா? எனக்கு வாழ்நாள் முழுவதும் தீராத அவமானத்தை உண்டாக்கி விட்டாயே! எனக்குச் செல்வம் இருக்கிறது, படிப்பும் இருக்கிறது; இருந்து என்ன செய்வது? நீ உயிரோடு இருக்கிறாய்; என்றாலும் எனக்குத் தகப்பன் இல்லை. உன்னைப்போன்ற சண்டாளர்கள் உலகில் எத்தனை பேரோ? இவ்வளவு பெரிய பிள்ளை நான் இருக்கும் போது நீ பிள்ளை இல்லையென்று வரங் கேட்க வந்திருக்கிறாயே! உனக்கும் கடவுள் அருள் செய்வாரா?"

ஆத்திரமும் அழுகையும் அவன் நெஞ்சை அடைத்துக்கொள்வதுபோல் இருந்தது. அவன் தடாலென்று வெளியே போய்விட்டான்; கதவருகே நின்ற லக்ஷ்மியையும் கவனிக்கவில்லை.

முத்துச்சாமிக் கவுண்டர் ஒன்றும் சொல்லத் தோன்றாமல் திகைத்துப்போய் உட்கார்ந்திருந்தார்.

மாலை நேரம் வரையில் அவர் அநேகமாக வாய் திறக்கவே இல்லை! கடைசியில் பெருத்த தயக்கத்தோடு அவர் தம் மனைவியைப் பார்த்து, "ஊருக்கு இன்றே போகலாமா?" என்று கேட்டார்.

லக்ஷ்மி, "போகலாம்" என்றாள். அங்கிருந்து உடனே போய்விடுவதில் அவரைவிட அவளுக்குத் தான் இப்பொழுது ஆவல் அதிகம்.

"என்னைப்போல் எத்தனை பேர் சமூகத்தில் தலை காட்ட நாணி மறைவாகத் திரிகிறார்களோ? என் தாயைக் கெடுத்தது மட்டுமா? எனக்கு வாழ்நாள் முழுவதும் தீராத அவமானத்தை உண்டாக்கி விட்டாயே! எனக்குச் செல்வம் இருக்கிறது, படிப்பும் இருக்கிறது; இருந்து என்ன செய்வது? நீ உயிரோடு இருக்கிறாய்; என்றாலும் எனக்குத் தகப்பன் இல்லை. உன்னைப்போன்ற சண்டாளர்கள் உலகில் எத்தனை பேரோ? இவ்வளவு பெரிய பிள்ளை நான் இருக்கும் போது நீ பிள்ளை இல்லையென்று வரங் கேட்க வந்திருக்கிறாயே! உனக்கும் கடவுள் அருள் செய்வாரா?"

ஆத்திரமும் அழுகையும் அவன் நெஞ்சை அடைத்துக்கொள்வதுபோல் இருந்தது. அவன் தடாலென்று வெளியே போய்விட்டான்; கதவருகே நின்ற லக்ஷ்மியையும் கவனிக்கவில்லை.

முத்துச்சாமிக் கவுண்டர் ஒன்றும் சொல்லத் தோன்றாமல் திகைத்துப்போய் உட்கார்ந்திருந்தார்.

மாலை நேரம் வரையில் அவர் அநேகமாக வாய் திறக்கவே இல்லை! கடைசியில் பெருத்த தயக்கத் தோடு அவர் தம் மனைவியைப் பார்த்து, "ஊருக்கு இன்றே போகலாமா?" என்று கேட்டார்.

லக்ஷ்மி, "போகலாம்" என்றாள். அங்கிருந்து உடனே போய்விடுவதில் அவரைவிட அவளுக்குத் தான் இப்பொழுது ஆவல் அதிகம்.

# புதுக் கடை

கந்தப்பன் இப்பொழுது பெருங் குடிகாரனாகி விட்டான். வீரப்பனோடு சேர்ந்துகொண்டு பழகிய இந்தக் கெட்ட குணம் அவனை இன்று இறுகப் பிடித்துக்கொண்டது! முதலில் தனியே குடிக்கப் போக அஞ்சுவான்; அவன் கால்கள் கடைக்குள் எட்டி வைக்கக் கூசும்; 'யாராவது பார்த்தால், மானம் போச்சே!' என்ற எண்ணம் அவனுக்கு உண்டாகும்! உண்மையில் வீரப்பன் இல்லாவிட்டால் அவன் அந்தப் பக்கமே போயிருக்கமாட்டான். இப்பொழுதோ கந்தப்பன் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் கடைக்குள் நுழையப் பின் வாங்குவதில்லை. கந்தப்பன் பெருத்த குடிகாரனாகிவிட்டான் என்பது கிராமம் முழுவதும் தெரிந்துவிட்டது.

சில வேளைகளில் அவன் குடிவெறியால் நடு வழியில் உருண்டு கிடப்பான். அப்போது அவனைப் பார்த்தவர்கள், "ஐயோ! சூது வாது தெரியாத இவனும் சேர்க்கையால் இப்படிக் கெட்டு விட்டானே!" என்று இரக்கப்படுவார்கள்.

கந்தப்பன் செங்காளிபாளையத்தில் ஒரு பண்ணையாள்; மாதம் எட்டு ரூபாய் சம்பளம். அது கொண்டு தன் மனைவி, இரு குழந்தைகளோடு சுகமாக வாழ்ந்து வந்தான்! ஊரில் எல்லோரும் அவனை, "அப்பாவி" என்று புகழ்ந்து பேசுவார்கள்.

கந்தப்பனுக்குக் காலை முதல் மாலை வரையில் பண்ணைக்காரனுக்குத் திருப்தி ஏற்படும்படி வேலை செய்யத்தான் தெரியும்! கூலியைத் தன் மனைவி

வேலாயியிடம் கொடுத்து விடுவான்; தனக்கென்று அவன் ஒரு காசுகூட வைத்துக்கொள்ள மாட்டான். வேலாயி வீட்டுக்கு எஜமானி; குழந்தைகளோடு கொஞ்சுவதும், பகலெல்லாம் உழைத்துக் களைப்புடன் திரும்பி வரும் கந்தப்பனை உபசரிப்பதுந்தான் அவள் வேலை! கந்தப்பன் தன் மனைவியின் அமுத மொழிகளால் களிப்பெல்லாம் நீங்கிக் களிப்புறுவான்.

புதன் கிழமை செங்காளிபாளையத்திற்குச் சந்தை நாள். அன்று ஒருவரும் வேலைக்குப் போக மாட்டார்கள்! சில கூலிக்காரர் அன்றுதான் தலையில் இரண்டு செப்புத் தண்ணீர் ஊற்றிக்கொள்வார்கள்; வேலாயி அதிகாலையிலேயே தன் கணவன், குழந்தைகளை எண்ணெய் தேய்த்துக் குளிக்கச் செய்து, பின்பு தானும் எண்ணெய் தேய்த்து முழுகுவாள்! சூரியன் உதயமாக ஆக அந்த இன்பக் குடும்பம் தூய ஆடை உடுத்துக்கொண்டு, கற்பூரம் ஊதுவத்திகளோடு கோவிலுக்கு வந்துவிடும்; அவ்வூரில் சிவன், விஷ்ணு, மாரியம்மன் கோயில்கள் பக்கம் பக்கமாகவே இருந்தன. அவர்களுக்கு எல்லாம் கடவுள்தான்; சைவம், வைணவம் என்ற பேரே தெரியாது. அவர்கள் மூன்று கோவிலுக்கும் சென்று வணங்குவார்கள்; கந்தப்பனுக்குக் கற்பூர ஆராதனை நடக்கும் போதும் மணிச் சத்தங் கேட்கும்போதும் கண்களில் நீர் பெருகிவிடும். வேலாயி, "என் கண்ணாட்டிகள் (கணவனும், பிள்ளைகளும்) சுகமாக இருக்க வேண்டும்" என்று மனமாறத் தொழுவாள்.

அன்று மாலை வேலாயி சந்தைக்குச் சென்று வீட்டுக்கு வேண்டிய 'செலவும்' பிள்ளைகளுக்கு மிட்டாயும் கந்தப்பனுக்குக் கரும்பும் வாங்கி வருவாள். கந்தப்பனுக்குக் கரும்பைவிட அவள் அன்பே அதிகமாக இனிக்கும்.

ஆனால் இதெல்லாம் குடிப் பேய் பிடிப்பதற்கு முந்திய நிகழ்ச்சிகள். இப்பொழுது எல்லாம் மாறி விட்டன! கந்தப்பனுக்குக் குடிப்பதற்கே கூலிப் பணம் கட்டுவதில்லை. வீட்டில் ராகிகூட இருக்காது; அதைப்பற்றி அவன் கவலைப்படமாட்டான்; சில சமயம் வேலாயி இரண்டணாவாவது கொடுக்கும்படி கெஞ்சுவாள். குடி மயக்கம் இல்லாவிட்டால் கந்தப்பன், "இந்தா" என்று கொடுப்பான்; குடி மயக்கமாயிருந்தால் வேலாயிக்கு அடிதான் கிடைக்கும்.

இன்பம் குடிகொண்டிருந்த அக் குடும்பத்தில் வறுமை புகுந்துவிட்டது. வேலாயி உடல் மெலிந்து களையிழந்து வாடிவிட்டாள். வீட்டில் இருந்த நகைகளை எல்லாம் விற்றாய்விட்டது. குழந்தைகளுக்குச் சரிவரச் சோறு போடுவதே இப்பொழுது முடிவதில்லை.

ஒரு நாள் மாலை பண்ணைக்காரன் கந்தப்பனிடம் நூறு ரூபாய் கொடுத்துப் பக்கத்து ஊரில் ஒருவனுக்குக் கொடுத்துவரும்படி சொன்னான். கந்தப்பன் போகும் வழியில் ஒரு கள்ளுக்கடை இருந்தது. அவன் அன்று காலை முதல் கையில் காசு இல்லாததால் குடிக்கவில்லை. கடையைக் கண்டதும் கந்தப்பனுக்குக் கால் அங்கே இழுத்தது. சற்று நேரம் தயங்கினான். பண்ணைக்காரனுக்குத் தெரிந்தால் அப்புறம் வேலைக்கு வரவேண்டாமென்று சொல்லி விடுவானே என்ற பயமும் உண்டாயிற்று; "உம்! நாலணாவுக்குக் குடித்துவிட்டுப் பிறகு யாரிடத்திலாவது வாங்கிக் கொடுத்துவிட முடியாதா?" என்ற எண்ணமும் நடுவே தோன்றியது. இதற்குள் அவன் கடைக்குப் பக்கமாக வந்துவிட்டான். "கந்தப்பா, வா வா, உன்னைப் பத்தித்தான் இவ்வளவு நேரம் பேசிக்கிட்டிருந்தேன்" என்று கடையில் உட்கார்ந்து

கொண்டிருந்த வீரப்பன் கூப்பிட்டான்; "எங்கே, இப்படி இரண்டு கொண்டா; டேய் சாக்கணு." பண்ணைக்காரன், அவன் கட்டளை எல்லாம் பறந்து விட்டன. கந்தப்பன் தன் நண்பனோடு சேர்ந்து குடிகுடி யென்று குடித்துவிட்டான்.

கந்தப்பன் தள்ளாடிக்கொண்டு நடக்கிறான், எந்தப் பக்கம் போகிறான், ஏன் அங்கே போகிறான்? ஒரு நிதானமும் இல்லை. பாதையை அளக்கிறான், முகத்தில் (களிப்புப் பொங்குகிறது; ஒரு சிறு தெம் மாங்கு அவனை அறியாது கிளம்புகிறது)

கடையைவிட்டு ஒரு காடுகூடத் தாண்டவில்லை, அதற்குள்ளேயே கந்தப்பனுக்குக் கால் நிலத்தில் பாவவில்லை. அப்படியே திண்டாடி ஒரு கள்ளியரு கில் பொத்தென்று விழுந்தான். கெட்ட நாற்றத் தோடு அவன் வாயிலிருந்து கள் வழிந்தது. வேட்டி சரியாக இடுப்பில் இல்லை; மடிப்பையைக் காணும்.

மறுநாள் காலை; (கதிரவனோடு தூங்கிக் கதிரவ னோடு விழிக்கும் பறவைகள் தங்கள் இணையுடன் உல்லாசமாகப் பேசிக் கொண்டிருக்கின்றன; இன் துயில் விட்டுப் புத்துயிருடனும் புது மகிழ்ச்சியுடனும் மரத்துக்கு மரம் கிளைக்குக் கிளை பறந்து திரிகின்றன. இயற்கைத் தேவி அருளிய மந்த மாருதத்தில் நீந்தி, உணவைத் தேடி உண்டு, ஊறும் தீஞ்சுவை தண்ணீரைப் பருகி வாழும் அப்பறவைகளுக்கு அடக்க முடியாத, மயக்கந்தரும் களிப்பும் கிடை யாது; பின்பு அதனால் ஏற்படும் தளர்ச்சியும் கிடை யாது. அவற்றின் இன்பம் அழியா இன்பம், அமைதி யான இன்பம்.)

மயக்கத்திலிருந்து தூக்கத்திற்குச் சென்று விழித்த கந்தப்பன் மிகுந்த குடியால் தளர்வுற்று அப்படியே படுத்துக்கொண்டு சற்று நேரம் இந்தக்

காட்சியைக் கவனித்தான். அவனை அறியாமலேயே அவனுக்குச் சிரிப்பு வந்தது. புதிதாகத் தோன்றிய பகலவனும் சிரித்தான். மறு கணம் கந்தப்பனுக்குத் தன் மேலேயே வெறுப்புண்டாயிற்று. குடி பெருந் தீங்கு என்ற எண்ணம் திடீரென்று அந்தப் பறவைகளைப் பார்த்ததாலேயோ அல்லது வைகறையின் வசீகரத்தாலேயோ அவனுக்கு ஏற்பட்டது.

இந்த எண்ணத்துடன் அவன் தன் வீட்டுக்குள் நுழைந்தான். இரவு பட்டினியாகையால் குழந்தைகள் இரண்டும் வயிறு ஒட்டிப் பிய்ந்த பாயில் படுத்துக் கொண்டிருந்தன. தூக்கமோ, பசியைக் கமோ—அவை இரண்டும் அவனைக் கண்டு ஒன்றும் பேசவில்லை. வேலாயி இரவில் வெகு நேரம் தூங்காமல் அழுது கொண்டிருந்தபடியால் தலை நோவுண்டாக, பக்கத்து வீட்டுக்காரர் கொடுத்த நாலு மிளகை அரைத்து நெற்றியில் தடவிக் கொண்டிருந்தாள். இக்காட்சியால் கந்தப்பனுக்கு அடக்க முடியாத துக்கம் வந்துவிட்டது. பழைய அன்பு குடியின் வெறுப்பேற்பட்டவுடன் திரும்பிவர, அவன் வாய்விட்டுக் கதறினான்.

“இனிமேல் நான் இந்தப் பாழும் கள்ளைக் கையில்கூடத் தொடுவதில்லை” என்று தன் மனைவியின் முன் சத்தியம் செய்தான். அப்பொழுதுதான் அவனுக்குச் சிறிது ஆறுதல் உண்டாயிற்று.

வேலாயி மறுபடியும் நல்ல நாட்களைக் காண ஆரம்பிக்கிறாள். கந்தப்பன் தனது சத்தியத்தைக் கைவிடவில்லை. கூலிப்பணம் பழையபடி வேலாயி கையில் விழுந்தது. ஆனால் தொலைத்துவிட்ட நூறு ரூபாயைக் கொடுக்க அடகு வைத்த தாலியை இன்னும் திருப்பவில்லை. வேலாயி கழுத்தில்

தாலிக்குப் பதிலாக ஒரு சிறு சரடுதான் தொங்கு கிறது.

கந்தப்பன் தன்னை அவமானத்திலிருந்து காக்கத் தன் மனைவி தாலியை அடகு வைக்கத் துணிந்ததைக் கண்டு அவள்மேல் முன்னிலும் அதிக அன்பு கொண்டான். "குடிப்பதில்லை, இது உறுதி" என்று பலமுறை சொல்லிக் கொள்ளுவான். அதோடு கிராம சேவையில் ஈடுபட்ட பல தொண்டர்கள் அக்கிராமத்தில் வந்து செய்யும் மதுவிலக்குப் பிரசாரத்தை அவன் தப்பாமல் போய்க் கேட்பான். படிக்கத் தெரியாவிட்டாலும் பல சொற்பொழிவு களைக் கேட்டு அவன் மதுபானத்தின் தீங்கைப்பற்றி நன்முகத் தெரிந்து கொண்டான்.

ஆனால் மதுபானம் தீங்கு என்ற உண்மையைக் கொண்டு அவன் அதைத் தொடாமல் இருக்கவில்லை; சத்தியத்தைக் காப்பாற்றவேண்டும், குடிப்பதால் மனைவி மக்கள் துன்புற வேண்டியிருக்கிறது என்ற எண்ணங்களே அவனைக் குடிக்காமலிருக்கச் செய்தன.

கந்தப்பன் தனது உறுதியில் வெற்றி பெறு வதற்கு அரசாங்கத்தில் உண்டான ஒரு முக்கிய மாறுதலும் உதவி புரிந்தது. காங்கிரஸ் ஆட்சி சென்னை மாகாணத்தில் ஏற்பட்டதும் சேலம் மா வட்டத்தில் மதுவிலக்கு அமலுக்கு வந்தது. செங் காளி பாளையம் அந்த மாவட்டத்தில் இருந்ததால் அங்கு மதுக் கடைகள் மூடப்பட்டன. கந்தப்பன் குடியை அறவே மறந்துவிட்டான்.

* * *

காலம் மெதுவாக நழுவிக் கொண்டிருந்தது. அப்படி நழுவிய ஐந்தாறு ஆண்டுகளில் எத்தனையோ மாறுதல்கள் உண்டாயின. சென்னை மாகாணத்தில்

காங்கிரஸ் ஆட்சி முடிவடைந்து விட்டது. பயங்கர யுத்தம் உலகத்தையே வளைத்துக்கொண்டது. சேலத்தில் மது அரக்கன் மறுபடியும் தாண்டவமாட லானுன்.

மறுபடியும் ஒரு புதன்கிழமை. கந்தப்பனுக்கு இப்பொழுது 15 ரூபாய் சம்பளம். மத்தியான்னம் சுமார் இரண்டு மணிக்குக் கந்தப்பன் கூலிப் பணத்தை வாங்கிக்கொண்டு வந்தான். இத்தனை ஆண்டுகளாக மிச்சம் பிடித்த பணத்துடன் இதையும் சேர்க்கவே மொத்தம் 103 ரூபாய் இருந்தது. அதைக் கண்டு அவன் உள்ளம் பூரித்தது. "இனி அடகு வைத்த தாலியைத் திருப்பிவிடலாம்" என்று அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு சந்தைக் குப் புறப்பட்டான்.

சந்தைக்குள் நுழைவதென்றால் கள்ளுக்கடை யைத் தாண்டி வந்தாகவேண்டும். சந்தையன்று மக்கள் அதைப் பார்க்காது சென்றாலும் ஏழு நாளைய புளித்த கள் நாற்றத்தையாவது மூக்கில ஏற்றிக் கொண்டு போய்த்தாளுக வேண்டும். அதோடு வழக்கமாக அன்று கள் விலை செப்பு ஓர் அணு ஆகி விடும். "விலை சொப்பு ஒரு அணு" என்று ஒருவன் திடுமம் அடித்துக் கொண்டிருப்பான்.

கந்தப்பன் கடையை அணுகியதும் பழைய நினைவு எப்படியோ உதயமாகிவிட்டது. நல்ல வெயிலில் இரண்டு மைல்களுக்குமேல் நடந்ததால் அவனுக்கு மிகுந்த தாகம் உண்டாயிற்று. "தாலி யைத் திருப்ப 100 ரூபாய் போதும்; சந்தைச் செல வுக்கு இரண்டு ரூபாய் வேண்டுமென்று வேலாயி சொல்லியிருக்கிருள். ஒரு ரூபாய் மீதி இருக்கிறதே, அதைச் சொந்தச் செலவிற்கு வைத்துக்கொண்டால் என்ன? இன்றைக்கு ஒரு நாள் மட்டும் மனமாரக்

குடித்துவிட்டுப் பிறகு அதை நினைக்கிறதே இல்லை." என்று இம்மாதிரி அவன் மனத்தில் நினைப்போடியது களைப்பாறவோ என்னவோ அவன் சந்தைக்குள் நுழையாமல் கள்ளுக்கடைக்குப் பக்கத்தில் இருந்த ஒரு வேப்ப மரத்து நிழலில் உட்கார்ந்தான்.

கந்தப்பன் மறுபடியும் கள்ளைப்பற்றி நினைத்தான்; "விட்டது முதல் அதன் மேலேயே ஒரே பைத்தியமாக இருக்கிறது. இன்றைக்கு ஒரு நாள் குடிப்பதால் என்ன முழுகிவிடும்? நான் முன்னைப் போல் தினமுமா குடிக்கப் போகிறேன்? இந்த ஆசையைத் தீர்த்துக்கொள்ள இன்றைக்கு மாத்திரம். மறுபடியும் இதைத் தொடுவதே இல்லை. மறுபடியும் கடையைத் திறந்திருக்கிறார்களே. ஒரு தடவை குடித்தால் என்ன கெட்டுப் போகும்? புதுக் கடையைக் கண்டது முதல் அதே நினைவாக இருக்கிறது. இன்றைக்கு மாத்திரம் குடித்துப் பார்த்துவிட்டு மறுபடியும் அதைத் தொடுவதே இல்லை."—"இன்றைக்கு மாத்திரம்; மறுபடியும் கிட்டக் கூடப் போவதில்லை" என்று அவன் மறுபடியும் உறுதியாகத் தீர்மானிக்கத் தொடங்கினான். "ஆகக் கூடி ஒரு நாலணுக் காசு—இந்தப் பைத்தியம் தொலையட்டும்" என்று முணகிக் கொண்டே கந்தப்பன் கடைசியாகக் கடைக்குள் நுழைந்து விட்டான்.

அன்று அவன் வேலாயியைப் பார்க்கவில்லை. புளித்த கள்ளை வெய்யில் நேரத்தில் 'இன்றைக்கு மாத்திரந்தானே' என்று நிறையக் குடித்ததனாலும், நெடுநாளாகக் குடிப்பழக்கம் விட்டுப் போனதாலும் அவனுக்குப் போதை மீறிவிட்டது. சந்தை சென்று திரும்பிய வண்டிக்காரன் ஒருவன் அவன் வழியில் தடுமாறுவதைக் கண்டு வண்டியில் தூக்கிப் போட்டு கொண்டு போய் அவன் வீட்டில் விட்டான்.

கந்தப்பனுக்குப் போதை தெளிவதற்குள் இருட்டிவிட்டது. முதலில் எங்கிருக்கிறோமென்றே அவனுக்குத் தெரியவில்லை. பிறகு கொஞ்சங் கொஞ்சமாக நடந்தவையெல்லாம் நினைவிற்கு வந்தன. "வாக்குத் தவறினதுமல்லாமல், வேலாயிக்குத் தெரியும்படி நடந்துகொண்டேனே! யாரிடத்திலாவது அவளிடம் கொடுக்கும்படி இரண்டு ரூபாயை முதலிலேயே கொடுத்திருக்க வேண்டும்" என்று பலவாறு நினைத்துக் கலங்கினான். அப்பொழுதுதான் அவனுக்குத் தான் கொண்டுபோன ரூபாயைப் பற்றிய எண்ணம் வந்தது. மடியைத் தொட்டுப் பார்த்தான். பையைக் காணவில்லை.

சந்தையில் ஒரு செலவும் வாங்காமல் வேலாயி வெறுங்கூடையுடன் வீட்டுக்கு வந்தாள். "அடே அம்மா வந்துட்டா. அம்மா! முட்டாயி" என்று சத்தம் போட்டுக்கொண்டு சிறுவர்கள் ஓடி வந்தார்கள்.

கந்தப்பனுக்கு இதைக் கேட்கப் பொறுக்க முடியவில்லை. வேலாயியிடம் நடந்ததை ஒளிக்க அவன் இப்பொழுது கருதாமல் தனது மனத்தைக் கலைத்த கள்ளுக்கடையை ஒரு சிலந்திக் கூடு என மனத்திற்குள்ளேயே அதைச் சபிக்கலானான். அதே சமயத்தில் வேலாயியின் வாடிய கண்கள் அவன் கண்களைச் சந்தித்தன. "ஐயோ! கடையை மறுபடியும் திறந்துவிட்டு என் புத்தியைக் கெடுத்துவிட்டார்களே! கடையில்லாவிட்டால் நான் புத்தி கெட்டுப் போயிருக்க மாட்டேனே!" என்று அவன் கதறினான்.

# கலை உள்ளம்

முருகன் ஓர் ஓவியப் பைத்தியமாக இருந்திரா விட்டால் அவ்வாறு செய்திருக்கவே மாட்டான். நீங்களே சொல்லுங்கள்: மக்கள் நெருக்கம் உள்ள வீதியொன்றில் போய்க்கொண்டிருக்கிற முன்பின் தெரியாத இளநங்கையை, திடீரென்று அவளெதிரில் போய், "அம்மா, உன் அழகு, என்னைக் கவர்கிறது. படத்தில் அதை எழுத உள்ளம் துடிக்கின்றது. என் ஓவியக் கூடத்துக்கு வரவேணும்" என்று யாராவது உள்ளத் தெளிவு உடையவர்கள் கூப்பிடுவார்களா? அவன் அப்படித்தான் கூப்பிட்டான். அவனுக்குப் பதில் என்ன கிடைத்திருக்குமென்று இதற்குள்ளேயே ஊகித்துவிட்டீர்கள். நானும் உங்களைப் போலத்தான் முடிவு கட்டினேன். ஆனால் நாம் எதிர்பார்க்கிறபடி எல்லாம் நடக்கிறதா என்ன? அம்மங்கை முதலில் திடுக்கிட்டு நெறித்த புருவத்தோடுதான் பார்த்தாள். ஆனால் முருகன் கண்களில் ஒளிவிட்டுக்கொண்டிருக்கும் கலை வெறியைக் கண்ட அவள் புன்முறுவலோடு, "சரி, வருகிறேன்" என்று அவனைப் பின்தொடர்ந்தாள்.

கமலம் என்பது அவள் பெயர். நல்ல செல்வமுடைய பெண்; கல்லூரிப் படிப்புடையவள். அடுத்த சித்திரையிலே அவளுக்கும் சந்திரசேகரனுக்கும் திருமணம் நிச்சயமாகியிருக்கிறது. சந்திரசேகரன் வக்கீல் தொழிலில் சென்னையில் முன்னணியில் இருப்பவன்; நெடுநாளாகக் கமலத்தை மணக்க வேண்டுமென்று தவங் கிடப்பவன். கமலத்துக்கும் அவனை மணக்க வேண்டுமென்று உள்ளூற ஆசை

உண்டு. ஆனால் இது வெளிப்படையாக யாருக்கும் தெரியாது.

முருகனது 'கலைப் பைத்தியம் கமலத்தையும் பிடித்துக்கொண்டது. முருகனோடு பழகியவர் யாரையும் அது விடாது என்றே சொல்லவேண்டும். நாள்தோறும் அவள் ஓவியக்கூடத்திற்குப்போவாள்; எத்தனை மணி நேரமென்றாலும் சலிப்பில்லாமல் முருகன் நிற்கச் சொன்னவாறெல்லாம் நிற்பாள் அவளுக்கு அதில் தனி இன்பம்.' என்றும், யாருக்கும் இன்பங் கொடுக்கிற ஓர் அழகிய ஓவியத்தை உருவாக்குவதில் தானும் பங்கெடுத்துக் கொள்வதைப் பற்றி அவள் பெருமை கொண்டாள். ஆனால் தனது அழகில்' அவள் சிறிதேனும் கருவம் கொள்ளவில்லை.

கமலம் பல நாள் இவ்வாறு முருகனுடன் இருந்து வந்தது பலவிதப் பேச்சுக்கு இடங்கொடுத்து விட்டது. சந்திரசேகரன் காதுக்கும் அது எட்டி விட்டது. வம்புப் பேச்சுக்குத்தான் இறகு முளைத்திருக்கிறதே! கமலத்தின் உள்ளம் அவனுக்குத் தெரியாதாகையால் அவன் வதந்திக்குச் செவி சாய்க்கலானான்.

அவனுடைய ஐயத்தை நிலைநாட்ட மற்றொரு முக்கிய காரணமும் சேர்ந்துகொண்டது. ஓவியக் காட்சி ஒன்று சென்னையில் கோகலே மண்டபத்தில் நடந்தது. பல படங்களுடன் முருகனுடைய ஓவியங்களும் அக் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. அங்கு வைக்கப்பட்டிருந்த எல்லாப் படங்களிலும் முருகன் வரைந்த கடைசிப் படந்தான் கலையரங்கின் கண்ணாக விளங்கியது. அதுதான் கமலத்தை மாதிரியாக வைத்து எழுதிய ஓவியம். அதைப் பார்த்து மெய் மறந்து நிற்காதவர்களே இல்லை.

பணக்காரர்களும் பிரமுகர்களும் கலைக் காட்சியைப் பார்ப்பதையும், ஒன்றிரண்டு படங்கள் வாங்குவதையும் தங்கள் நாகரிகத்திற்கு அறிகுறியாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சந்திரசேகரனும் அந்தக் கலைக்காட்சிக்கு வந்திருந்தான்.

அவனும் அந்தப் படத்தைப் பார்த்தான். கமலத்தின் ஒப்புயர்வில்லாத சாயல் அவனுக்கு என்றும் எதிர் நிற்கும் தோற்றமாதலால் அதை அப்படத்தில் உடனே கண்டுகொண்டான். முருகன் மேல் அவனுக்குப் பெரிய கோபம் மூண்டது. இருந்தாலும் வெளிக்குக் காட்டாமல், "இந்தப் படத்தின் விலை என்ன?" என்று பெருந்தோரணையோடு கேட்டான்.

முருகனுக்கு அவனை யாரென்று தெரியாது. "இதை விற்பதற்காகக் கொண்டுவரவில்லை" என்று அவன் பணிவோடு பதிலளித்தான்.

"விற்காமல் நீ போடுகிற படத்தையெல்லாம் என்ன செய்யப் போகிறாய்? படம் எழுதி விற்று வயிறு வளர்ப்பவன்தானே நீ?"

முருகன், "வேறு படங்களையெல்லாம் நான் விற்கிறவன்தான்; இதை மட்டும் விற்பதில்லை" என்று நிதானமாய்ச் சொன்னான்.

"ஐயாயிரம் ரூபாய் கொடுக்கிறேன். இதைக் கொடுக்கிறாயா?"

"உங்கள் ஐயாயிரம் உங்களுக்குப் பெரியது; எனது கலை எனக்குப் பெரியது."

சந்திரசேகரன், "ஓகோ, இது உன் காதலியின் படமோ? அதனால்தான் இந்தத் தோரணையோடு

பேசுகிறாய்" என்று உறுமிக்கொண்டே போய் விட்டான்.

சந்திரசேகரன் தான் முன்பே கேள்விப்பட்டிருந்த வதந்தி உண்மைதானென்று நிச்சயமாக முடிவு கட்டினான். அது அவனுக்குப் பெரிய அதிர்ச்சியை உண்டுபண்ணிற்று; சோர்ந்த மனத்துடன் கல்யாண ஏற்பாட்டை அவன் நிறுத்திவிட்டான்.

கமலத்தின் பெற்றோருக்கு, கல்யாணம் வேண்டாமென்று அவன் சொன்னதன் காரணம் தெரியாது. இப்படிப்பட்ட நல்ல வரன் கிடைக்கவில்லையே என்று அவர்களுக்கு ஏமாற்றமுண்டானாலும் கடவுளின் மேல் பாரத்தைப் போட்டுவிட்டுப் பேசாமல் இருந்துவிட்டார்கள். "எங்கே முடிச்சுப் போட்டிருக்கிறதோ அங்கேதானே நடக்கும்? நம் முயற்சியால் என்ன ஆகிறது?" என்கிற மனப்பான்மை ஒரு வகையில் நல்லதாகத் தோன்றுகிறது. வீணான துன்பம் ஏற்பட வழியில்லை அல்லவா?

கமலத்திற்குத் தன்னைப்பற்றிக் கிளம்பியுள்ள பேச்சுத் தெரியாமல் இல்லை. ஜாடை மாடையாக அது அவள் காதிலும் விழுந்திருந்தது. அதனால், கல்யாணம் நிறுத்தப்பட்டதன் காரணத்தை அவள் தனது கூர்ந்த அறிவால் ஊகித்துக்கொண்டாள். இருந்தாலும் அவள் எப்படிச் சந்திரசேகரனிடம் இந்தப் பேச்சுப் பொய்யென்று நிரூபிப்பாள்? அவனிடம் ஒரு நாளும் பேசாதவள் இன்று பேச முடியுமா? அதுவும், தான் அவனை அந்தரங்கமாகக் காதலிக்கிறதாகச் சொல்ல முடியுமா? அப்படிச் சொன்னாலும் அவன் அதை நம்பாவிட்டால் என்ன செய்வது?

ஆகையால் உண்மை வெளியாகாமலே இரண்டு மாதங்கள் கழிந்துவிட்டன. இந்த இரண்டு மாதங்களாகக் கமலம் முருகனுடைய ஓவியக் கூடத்திற்குப் போகவில்லை; அவனைச் சந்திக்கவும் இல்லை. முருகன் சதா ஒரு சிறு அறைக்குள்ளேயே இருந்துகொண்டு பல நாட்களாக ஓவியம் தீட்டி வந்ததால் அவன் உடல்நிலை கெட்டுவிட்டது. அதனால் அவனை எங்காவது கிராமத்திற்குச் சென்று சில காலம் திறந்த வெளியில் இருக்கும்படி வைத்தியர்கள் சொன்னார்கள். முருகன் சென்னையைவிட்டுக் குற்றாலம் சென்று இயற்கையின் அழகைக் கண்டு களித்து அதைப் படத்தில் சிறைப் பிடித்துக் கொண்டிருந்தான். அதுவே கமலம் அவனைச் சந்திக்காததற்குக் காரணம்.

அவன் திரும்பி வந்துவிட்டதைக் கேள்விப்பட்டதும் கமலம் அவனைச் சந்திக்கச் சென்றாள். அவள் முகம் சோர்ந்திருப்பதை அவன் கவனித்தான். அதன் காரணத்தைக் கேட்க வாயெடுத்தான். அதற்குள் சோகம் கனியும் அவள் அழகில் அவன் மெய்மறந்துவிட்டான். உச்சிக்கு வந்த சூரியனது சுடு கிரணம் பட்டுச் சோர்ந்து கிடக்கும் மாந்தளிரில் ஓர் அழகு காணப்படுவதுபோல அவள் துன்பத்திலும் வனப்புடன் விளங்கினாள்.

"கமலம், இன்னொரு படம் எழுத விரும்புகிறேன். நீ இப்படி உட்காருகிறாயா? உன் முகத்தில் இப்பொழுது காணும் உணர்ச்சி நான் இதுவரையில் காணாதது" என்றான் முருகன்.

"சரி" என்றாள் கமலம்.

சில நாட்களில் அந்தப் படம் முடிந்துவிட்டது. முருகனுக்கு ஒரே குதூகலம். தனது கை வேலையை உற்றுப் பார்த்துக்கொண்டே அவன், "ஆகா, இந்தச்

சோக வனப்பை வேறெதுவும் மீற முடியாது" என்று குதித்தான்.

கமலத்தின் நீண்ட கண்களிலிருந்து ஒரு முத்துப் பிதுங்கிக் கன்னத்தில் வழிந்தது; அவளால் அதைத் தடுக்க முடியவில்லை.

முருகன் திடுக்கிட்டுப் போனான்; "கமலம்! என்ன இது?"

"ஒன்றும் இல்லை முருகா! உன் படம் நன்றாயிருக்கிறது"

"இல்லை இல்லை, உன் மனதில் ஏதோ கவலை குடி கொண்டிருக்கிறது. நான் உன்னைக் கேட்க மறந்துவிட்டேன். அதை எனக்குச் சொல்லியே ஆகவேணும்."

முருகனுடைய வேண்டுகோளை மறுக்க அவளால் முடியாது. குழந்தைபோல அப்படிக் கெஞ்சிய பார்வையுடன் அவன் கேட்டான்.

"நீ படம் போட்டு ஆனந்திக்கிறாய். இந்த ஆனந்தந்தான் எனது துன்பமாக முடிந்தது, முருகா."

"என்ன கமலம், நான் உனக்கு என்ன செய்துவிட்டேன்? உனக்குத் தீங்கு செய்ய நான் கனவிலும் நினைக்கமாட்டேனே!"

"நான் இங்கே அடிக்கடி வருவதைப்பற்றிச் சந்தேகங்கொண்டு அவர் என்னை மணக்க மறுத்துவிட்டார்" என்றாள் கமலம். இப்பொழுது அவள் கண்களிலிருந்து கண்ணீர் தாரையாக ஓடத் தொடங்கிவிட்டது. முருகன் அதைத் துடைக்க ஓடிவந்தான். கமலம் தனது முன்றானையால் முகத்

தைத் துடைத்துக்கொண்டு மறுபக்கம் திரும்பிக் கொண்டாள்.

“நீ இங்கே வருவதில் என்ன தவறு இருக்கிறது?”

“நீ தவறில்லையென்று நினைக்கிறாய்; நானும் அப்படித்தான் நினைக்கிறேன். ஆனால் உலகம் அப்படி நினைப்பதில்லையே!”

“உலகம் எப்படியோ நினைத்துக்கொள்ளட்டும்; அதைப்பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்?”

“அவரும் அப்படியே கருதுகிறாரே; அதுதான் என்னால் தாங்க முடியவில்லை.”

“அவரும் அப்படியா நினைக்கிறார்? அட முட்டாளே! யார் அவர்?”

“வக்கீல் சந்திரசேகரர்.”

“அடடா, அவரா? சரி சரி; விஷயம் எனக்கு விளங்கிவிட்டது. கமலா, நீ ஒன்றும் வருத்தப் படாதே. விரைவில் அவர் உன்னை மணந்துகொள்வார். நான் அதைச் செய்து வைக்கிறேன்” என்று கூறி முருகன் அவளை அனுப்பிவிட்டான். இதுவரையில் அவன் கமலத்தை யார் மணக்கப் போகிறாரென்று கேட்கவே இல்லை. அதில் அவனுக்கு அக்கறை இருந்தால்தானே? இப்பொழுது அவனுக்கு விளங்கி விட்டது.

முருகன் ஒரு நீண்ட கடிதம் எழுதி அதையும், கமலத்தை மாதிரியாக வைத்து வரைந்த இரண்டு படங்களையும் வக்கீல் சந்திரசேகரனுக்கு அனுப்பினான். சந்திரசேகரன் நான்கு முறை கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் படித்தான். படத்தை மாறி

மாறிப் பார்த்தான். அவன் மனம் கொஞ்சங் கொஞ்சமாகத் தெளிவடைந்துகொண்டே வந்தது. கடிதத்தில், "நீங்கள் கலைக் காட்சியில் என்னிடம் அந்தப் படத்தை விலை பேச வந்தபோதே எனக்குக் கொஞ்சம் சந்தேகம் உண்டாயிற்று. உங்கள் வார்த்தைகள் எனக்குப் பிடிக்கவில்லை. (அழகைக் கண்டு போற்றுபவன் உடல் சம்பந்தத்தை நாடியே இருக்கிறான் என்று நினைப்பது உலகின் குருட்டு முடிவு) அதனால் உங்கள்மேல் குறை சொல்லுவதில் பயன் இல்லை. கமலம் என் காதலியல்ல; எனது கலைத்தேவி. அவளைத் தொழுது போற்ற எனக்குத் தெரியும். அவள் அழகை வர்ணத்தில் பிடித்து உலகம் என்றும் இன்புறச் செய்ய முயல எனக்குத் தெரியும். அவ்வளவுதான். நீங்கள் நினைக்கிறமாதிரி அவளைக் காதலிக்க எனக்குத் தெரியாது. அவளது சோகம் வழியும் முகப் பொலிவை எனது இரண்டாவது படத்தில் பாருங்கள். அந்தச் சோகம் தங்களை மணக்க முடியாததால் ஏற்பட்டது என்பதை இன்று தான் அவள் வாயிலிருந்து உணர்ந்தேன். உடனே இக்கடிதம் எழுதுகிறேன். அவளுடைய சோக அழகை நான் அநுபவித்தேன்; அசோக வனத்தில் சோகக் கனலில் மூழ்கி ஒளிவிட்ட சீதையைக் கண்ட அநுமார் அவ்வழகைப் போற்றியது போல நான் போற்றி அநுபவித்தேன்."

இம்மாதிரி இன்னும் என்ன என்னவோ எழுதியிருந்தான். (தூரிகை பிடித்த கை பேனாவையும் சந்திரசேகரனது உள்ளத்தை ஈர்க்கும் திறனுடன் பிடித்துவிட்டது)

விஷயத்தை வளர்ப்பானேன்? சந்திரசேகரனுக்கும், கமலத்திற்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. முருகன் வராமலும் அந்தக் கல்யாணம் நடக்குமா? சந்திரசேகரன் கமலத்தின் கையைப்

பிடித்துக்கொண்டு முருகனை வணங்க வந்தான். ஆனால் முருகன் எதையும் கவனிக்கவில்லை. "கமலம், அப்படியே நில். சோகத் தெளிவில் பிறக்கும் புடமிட்ட அழகு இப்போது உன் முகத்தில் பொங்குகிறது. அதையும் எழுதிவிடுகிறேன்; கொஞ்சம் பொறு. இதோ வர்ணப் பெட்டியை எடுத்து வந்து விடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே அவன் ஓடினான். சம்பந்திகளும், உறவினர்களும் திகைத்து நின்றனர். சந்திரசேகரன் சிரித்துக் கொண்டே கமலத்தைப் பார்த்தான். அவள் கண்களில் பேரின்பம் துளித்தது.

# முத்தம்மாள்

"சின்னத் தம்பியையாவது கூட வரச் சொல்லட்டுமா? நீ தனியாகவா போகிறாய்?"

"வேண்டாம் அம்மா. நான் தனியாகவே போகிறேன். அவர்கள் ஏதாவது சொன்னால் தம்பிக்கு வேதனையாக இருக்கும்."

"உனக்கு மட்டும் வேதனையாக இருக்காதா?"

"நான்தான் கேட்கப் பிறந்திருக்கிறேன்; தம்பியும் கேட்கவேணுமென்று என்ன தலைவிதியா? என்னைத் திட்டுவதைக்கேட்டால் தம்பிக்கு வருத்தமாக இருக்கும். நானே போகிறேன். அவன் வேண்டாம்."

மாராயி தன் மகள் நிலையை நினைத்துத் தாரை தாரையாகக் கண்ணீர் விடலானாள்.

இதுவரையில் மௌனமாக வீற்றிருந்த அவள் கணவன் குமரப்பன், "எதற்கு அழுகிறாய்? ஊருக்கு அனுப்புகிறபோது சிரித்தமுகமாக அனுப்பு. ஏதோ ஒரு நாளைக்குக் கோபத்திலே அவர் ஏதாவதுசெய்து விட்டால் தினமும் அப்படியா இருக்கும்? இனிமேல் எல்லாம் நல்லாயிருக்கும்........ முத்து, நீ மாத்திரம் பொறுமையாக நடந்துகொள். உனக்கு ஒன்றுமே கெடுதல் வராது" என்றான்.

முத்தம்மாள் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு, "நேரமாகிறது; போய்விட்டுவருகிறேன்"

என்று சொல்லித் தன் பெற்ருர்கள் பாதத்தைத் தொட்டுக் கும்பிட்டாள்.

"துரைசாமிதான் அழுவானே என்னமோ; ஏம்மா, அவனையும் கூட்டிக்கொண்டு போகட்டுமா?"

"வேண்டாம்; அவன் இங்கேயே இருக்கட்டும்; எதற்கு அழுகிருன்? நான் பார்த்துக்கொள்ளு கிறேன். இரண்டு நாள்கழித்துநான் அவனை எடுத்து கொண்டு அங்கே வருகிறேன்."

"சரி, புறப்படம்மா; போய்ச் சேர இருட்டாகி விடும். மாடும் வேகமாகப் போகாது; காலையி லிருந்து ஏருழுதுவிட்டு வந்திருக்கிறது" என்ருன் குமரப்பன்.

முத்தம்மாள் வண்டியில் ஏறினள்; வண்டி புறப்பட்டது. மாராயி கலக்கத்தோடு நின்று பார்த்துக்கொண்டே இருந்தாள். குமரப்பன் தனது மனத்திலேயே அடக்கி வைத்திருந்த விசனம் இப் பொழுது நீண்ட பெருமூச்சாக வெளிப்பட்டது.

முத்தம்மாள் எண்ணமிட்டுக்கொண்டே போகி ருள். 'என்ன இருந்தாலும் அவர் என் வீட்டுக் காரர்; நல்லதோ கெட்டதோ அவரோடு இருந்து வாழவேண்டியதுதானே? பிறந்த வீட்டில் வந்து எத்தனை நாளைக்குத்தான் குந்தியிருப்பது? எத்தனை பிரியமாக அவர்கள் வைத்திருந்தாலும் குடும்ப மென்று இல்லாவிட்டால் நாளைக்கு பையன் துரை சாமி எப்படி நாலு பேருக்குச்சமமாக இருப்பான்? ஆனால் அவர் அப்படி அடிக்கிருரே; ஐயோ அன் றைக்குக் குடித்துவிட்டு வந்து காலில் எட்டி எட்டி உதைத்தாரே; நான் என்ன தப்புச்செய்தேன்?

அவர் நடத்தையைப் பற்றி ஒரு வார்த்தையாவது நான் பேசுகிறேனா? இல்லையே! வந்த நேரத்திற்கு அவருக்கு வேண்டியதெல்லாம் செய்வதோடு காடு தோட்டத்தையும் நானே கவனித்துக் கொள்ளு கிறேன். அவர் என்ன செய்கிறார்? குடிப்பதும், வைப்பாட்டி வீடு வீடாகத் திரிகிறதுந்தான்......... என்ன செய்வது! என் தலையெழுத்து, எப்படி யாவது தள்ளிக் கொடுத்துக்கொண்டு போக வேண்டியதுதான்; எத்தனை நாளைக்கு இப்படியெல் லாம் செய்வார்? எழுமாத்தூர்ப் பூசாரி சொன்னது போலப் பொல்லாத கிரகப்பலன்தான் இப்படி ஆட்டிவைக்கிறது. இந்தச் சித்திரை போய் அடுத்த சித்திரைக்கு எல்லாம் விலகிப் போய்விடும். அது வரை பொறுத்துப் பார்க்கலாமே. ....ஆனால் அவர் அடிக்கிற அடியை நினைத்தால்தான் பயமாக இருக் கிறது. அன்றைக்குச் சாட்டையை எடுத்துக் கொண்டு அடித்தாரே; நினைத்தால் இன்னும் உடம்பு நடுங்குகிறது. காலைப் பிடித்துக்கொண்டு, சாமி சாமி என்று கெஞ்சக் கெஞ்ச அப்படி அடித் தாரே. அவர் மனசு எப்படித் திருந்தப் போகிறது? எனக்காக இல்லாவிட்டாலும் அந்தக் குழந்தைக் காகவாவது பார்க்கவேண்டாமா? அதுவும் நின்று கொண்டு வீர் வீரென்று கத்தக் கத்த அடித் தாரே........

'துரைசாமியை எடுத்துக் கொண்டு வராமற் போனேன்; அவனைப் பார்த்தாவது கொஞ்சம் பிரிய மாய்ப் பேசமாட்டாரா? அம்மாள் அவனை எடுத்துக் கொண்டு இரண்டு நாள் கழித்து வருவதாகச் சொல்லியிருக்கிறாள். அதுவும் ஒரு வழியில் நல்லது தான். அவர் கொஞ்சமும் இளகாமல் மறுபடியும் அடித்தால் அம்மாள் வந்தவுடன் அவளோடு திரும்பிவிடலாம். அப்புறம் ஈசன் விட்டபடி

யாகிறது. இந்த இரண்டு நாளில் அவரை எப்படி யாவது மனசு இரங்கும்படி செய்து பார்த்துவிடு கிறேன். அடித்தாலும் அடிக்கட்டும், கொன்று விடுவார்? இத்தனை நாள் பட்டது போல இன்னும் இரண்டு நாள் பொறுத்துக்கொண்டு அவரைக் கெஞ்சிப் பார்க்கிறேன். அவரும் மனிதர்தானே? அவர் நெஞ்சம் என்ன கல்லா? வீட்டோடு இருந்து கொண்டிருந்தால் போதும். நான் குடும்பத்தை யெல்லாம் எப்படியோ கஷ்டப்பட்டுக் கவனித்துக் கொள்ளுவேன். கோபம் வந்து என்னைக்காவது அடித்தாலும் பரவாயில்லை, அவர் மட்டும் வைப் பாட்டி வீடு போகாமல் வீட்டோடு இருந்து விட்டால் போதும்."

இவ்வாறு நினை நினைந்து முத்தம்மாள் உள்ளத் திலே ஒரு சமயம் தைரியமும், ஒரு சமயம் கலக்கமும் பயமும் பிறக்க வந்து கொண்டிருக்கிறாள். அவள் இள நெஞ்சில் எழுந்த பல எண்ண அலைகளினூடே ஒருவிதப் புதிய நம்பிக்கையும் இருந்தது.

மாடுகள் களைத்திருந்ததனால் தட்டுப்பாளையம் வந்து சேர இரவு எட்டு மணியாகி விட்டது. வந்ததும் முத்தம்மாள் வண்டியைத் திருப்பி அனுப்பி விட்டாள். "இந்தா, அங்கிருந்து கொண்டுவந்த முறுக்கு இருக்கிறது. சாப்பிட்டுக் கொண்டே ஊர் போய்ச் சேர். இங்கே இனி நான் போய்த்தானே சமையல் செய்யவேணும்? ரொம்ப நேரமாகிவிடும்" என்றாள் முத்தம்மாள்.

"ஆமாத்தா, நான் போகிறேன். சமையலாகிச் சாப்பிட்டு விட்டுப் போனால் ரொம்ப நேரமாகிவிடும். அப்புறம் காலையிலேதான் போகவேணும். அப்படிப் போனால் உழவு வேலை கெட்டுப் போகும்" என்று கூறிவிட்டு வண்டிக்காரன் போய்விட்டான்.

முத்தம்மாளுக்குத் தான் தன் கணவனைச் சந்திக்கும்போது அங்கு யாரும் இருக்கக் கூடாது என்று எண்ணம். "அவர் என்ன வேண்டுமானாலும் வையட்டும்: அடிக்கட்டும்; வேறொருத்தர் பார்க்காமல் இருந்தால் போதும்."

அவள் வந்த நேரம அநேகமாக ஊர் அடங்கி விட்டது. பண்ணை ஆட்களும் தங்கள் வேலையை முடித்து விட்டுப் போய்விட்டார்கள். வீட்டுத் திண்ணையில் வழக்கமாக , இருக்கும் விளக்கும் அணைந்துவிட்டது.

முத்தம்மாள் மெதுவாகக் கதவருகே சென்றாள். கதவு உட்புறம் தாழிடப்பட்டிருந்தது. 'கதவைத் தட்டலாமா? தட்டினால் அவர் வந்து திறந்துவிடுவாரா? சந்தோஷமாக வருவாரா? அல்லது....அப்பன் வீட்டிற்கு ஓடினாயே இப்பொழுது என்னத்திற்கு வந்தாய் என்று சீறுவாரோ?'—அவள் உள்ளம் படபடவென்று அடித்துக்கொண்டது. கால்கள் தள்ளாடின! ஆனால் முகத்தில் மட்டும் உறுதி குலையவில்லை.

அவள் கதவை மெதுவாகத் தள்ளிப் பார்த்தாள்; திறக்கவில்லை. பிறகு கதவுப் பலகையிடுக்கின் வழியாக உள்ளே உற்றுப் பார்த்தாள்.

உள்ளே விளக்குப் பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தது; வாசலில் ஒரு கட்டிலில் மெத்தையை விரித்துச் சின்னச்சாமி படுத்திருந்தான். பக்கத்திலே ஓர் இள நங்கை உட்கார்ந்து கொண்டிருந்தாள். கட்டில் அடியில் ஒரு பாட்டிலும் கண்ணாடித் தம்ளரும் இருந்தன.

"கண்ணே, எங்கே ஒரு முத்தம் கொடு."

அவள் மௌனமாக உட்கார்ந்திருந்தாள்.

"என்ன யோசனை? எங்கே இப்படித் திரும்பு: உன்னை நான் என் உயிர்போல வைத்திருப்பேன்!"

அவள் புன்சிரிப்போடு அவன்மேல் சாய்ந்தாள்.

சின்னச்சாமி ஆசை மேலோங்க அவளை அணைத்துக்கொண்டான். "நீதான் என் கண்மணி, என் ராணி."

"ஆமாம்; இப்பொழுது இப்படித்தான் சொல்லுவீர்கள். இது எத்தனையோ பேரிடம் சொன்ன வார்த்தைதானே?"

"இல்லை இல்லை; இது உண்மையான பேச்சு. நீ நிச்சயமாக நம்பலாம்! என் மனசை நீதான் உண்மையில் கொள்ளை கொண்டிருக்கிறாய்."

"நாளைக்கு முத்தம்மாள் வந்துவிட்டால் அப்புறம் நான் இங்கே இருக்க முடியுமா?"

"ஏன் இருக்க முடியாது? நீ இனிமேல் இங்கேயே தான். அவள் அநேகமாக வரமாட்டாள்; வந்தாலும் என்ன?"

"நான் என்ன இருந்தாலும் வீட்டுக்கு எஜமானி ஆக முடியுமா?"

"நீதான் வீட்டிற்கு இனிமேல் எஜமானி."

"இதெல்லாம் அவள் வந்த பிறகு நடக்காது."

"ஏன் நடக்காது? அவள் வந்து தொலைந்தால் உனக்கு வேலை செய்யும்படி செய்கிறேன், பார்."

"நீங்கள் பேசுவதெல்லாம் நடக்காத காரியம். அவள் வந்தால் ஒரு நாழிகைகூட நான் இங்கே இருக்க முடியாது."

"நீ வேணுமானால் பார்; அவள் இங்கே வருவதையே நான் வெறுக்கிறேன். அன்று கொடுத்த அடிக்கே அவள் வரமாட்டாள். அப்படி வந்தாலும் என் இஷ்டப்படி உனக்கு வேலை செய்துகொண்டிருக்கட்டும். இல்லாவிட்டால் வந்த வழியே போக வேண்டியதுதான்; அவள் தொலைய வேணுமென்பதுதான் என் ஆசை."

அவனுக்கு இந்தப் பேச்சில் தொனித்த வெறுப்பு பயத்தை அளித்தது. அப்படியே அவனைக் கட்டிப் பிடித்துக்கொண்டாள். சின்னச்சாமியும் அவளை இறுகப் பிடித்தான்.

முத்தம்மாள் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தாள்; அவளுடைய தீர்மானம், ஆசை, உறுதி எல்லாம் சுக்கு நூறாக நொறுங்கிவிட்டன. உள்ளம் வெடித்துவிடும்போல் இருந்தது.

'இந்த நிலையிலே கதவைத் திறந்து விடும்படி சொல்வதில் என்ன பிரயோசனம்? இதுவரையில் எங்கெங்கோ அலைந்து கொண்டிருந்தார். இப்பொழுது வீட்டிற்கு எஜமானியாகவே ஒருத்தி வந்துவிட்டாள். இவர் மனசை மாற்றுவதென்பது இனிமேல் ஆகிற காரியமா? அதுவும் என்னைக் கண்டாலே பிடிக்கவில்லை என்கிறபோது எப்படி முடியும்?'

முத்தம்மாள் மெதுவாக வாசற்பக்கம் திரும்பினாள். அவள் கால்களில் ஒருவித உணர்ச்சியும் இல்லை. கனவில் நடப்பதுபோலக் கொஞ்ச தூரம் நடந்தாள்.

'நான் எதற்காக இங்கே வந்தேன்? பேசாமல் அங்கேயே இருந்திருக்கக்கூடாதா? ஆனால் அங்குதான் எதற்காக இருக்கவேணும்? வீணாக மண்

ணிற்குச் சுமைதானே?....ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாளைக்காவது அவர் இந்தமாதிரி வாழ்வில் சலிப்படைய மாட்டாரா? அதுவரையில் பேசாமல் அப்பன் வீட்டிலேயே இருந்தால் என்ன? இப்பொழுது நான் இந்த இருட்டில் திரும்பிப் போக முடியுமா? வண்டியையும் அனுப்பிவிட்டேனே!........ போனால் அங்கே எல்லோரிடமும் என்ன சொல்வது? அப்படிப் போய்த்தான் அங்கே இந்த உயிரை வைத்துக்கொண்டிருப்பானேன்?....என் தகப்பனார் சீராக அனுப்பிய அந்த மெத்தையிலே வேறொருத்தி அவருடன் படுத்திருக்கிறாள். அவர் அவளிடத்திலேயே என்னைக் கண்டாலும் பிடிக்கவில்லை என்று கூறுகிறார்! நான் இன்னும் இந்த உடலைச் சுமந்து கொண்டு இருக்க வேணுமென்று ஆசைப்படுகிறேன்! அடடா, இந்த உயிர் அத்தனை வெல்லமா எனக்கு?— சீ சீ, கேவலம் இன்னும் நான்....'

முத்தம்மாள் சுற்று முற்றும் பார்த்தாள். வாசலில் வேப்பமரத்தடியில் காளை கட்டியிருந்த தலைக்கயிறு கிடந்தது; அது அவளுக்குக் கடவுள் தந்த வரப்பிரசாதமாக அப்பொழுது தென்பட்டது.

* * *

உள்ளிருந்து மது வெறியோடு கலந்த சிரிப்புக் கிளம்பியது! ஆனால் அது முத்தம்மாள் செவியில் இனிமேல் புகுந்து அவளை வருத்த முடியாது. வேப்ப மரத்தில் தொங்கிக்கொண்டிருந்த அவளுக்கு இனி இன்பமும் இல்லை; துன்பமும் இல்லை.

# ஓவியன்

தென்னங்கீற்றின் மேலே அந்தச் சூரியனுடைய பொற் கிரணங்கள் பட்டு ஜொலிப்பதைப் பார்த் திருக்கிறீர்களா? காற்று மெதுவாக ஓலைகளை அசைக்கும்போது, ஆகா, 'அந்த ஜொலிப்பின் அழகை என்னென்பது! அதை எனது ஓவியத்தில் பிடித்துவிட வேண்டுமென்று மூன்று நாட்களாக முயன்றுகொண்டிருக்கிறேன். எந்த வகையான வர்ணக் கலவை செய்து வரைந்தாலும் எனக்கு மன நிறைவு ஏற்படவில்லை. கண்ணெதிரில் கண்ட அந்த மின்னல் ஒளியின் மினுமினுப்பை அப்படியே பிடிக்க முடியவில்லை. ஒன்று, மஞ்சள் நிறம் சிறிது அதிகமாகிவிடுகிறது; அல்லது பசுமை மேலெழு கிறது. இல்லாவிட்டால் இவைகளுக்குள்ளேமயங்கி கிடக்கும் செவ்வண்ணம் மிகுதியாகி ஜொலிப்பைக் கொஞ்சம் மங்கச் செய்துவிடுகிறது. இப்படி ஏதாவது ஒரு குறை ஏற்பட்டு என் கைத்திறனைச் சோதித்துக்கொண்டே இருந்தது.

நான் உட்கார்ந்திருப்பது ஒரு காடு; மக்கள் நடமாட்டம் இல்லாத வனப்பு மிக்க இடம். அதனால் நிம்மதியாக எனது வேலையில் மனத்தை ஒரு முக மாகச் செலுத்த முடிந்தது.

ஆனால் தொலைவில் தோன்றும் அந்தத் தென்னங் கீற்றுகளில் நடக்கும் ஒளி நடனத்தை மட்டும் இன் னும் என்னால் திரையில் சிறைப்பிடிக்க முடியவில்லை. இரண்டு மாலை வேளைகள் வீணாயின. மூன்றாவது நாளும் வெற்றி கிடைப்பதாகக் காணவில்லை.

அதனால் நான் கொஞ்சங் கொஞ்சமாகப் பொறுமையை இழந்துவிட்டேன்.

'சரி, இப்பொழுது உருவாகியுள்ளதே போதும். இதையே மக்கள் பார்த்து ஆச்சரியப்பட்டு மகிழ்வார்கள். ஆனால் அந்த உயிர் ஓட்டம் முழுவதும் இதில் இல்லைதான்; இல்லாவிட்டால் என்ன? அதைப் பதினாயிரத்தில் ஒருவன்கூடச் சிந்திக்கமாட்டான். இதற்கே நல்ல விலையும் கிடைக்கும்; பிறகு எதற்காக வீண்தொல்லை?' என்று நான் எண்ணமிட்டுக்கொண்டிருந்தேன்.

அந்தச் சமயத்தில்தான் திடீரென்று அந்த அற்புத மனிதன் என்முன் தோன்றினான். முதலில் 'இவன் யார், சிவ பூசையில் கரடி மாதிரி?' என்று ஒரு வெறுப்புணர்ச்சி என் உள்ளத்தில் உதித்தது. பிறகு அவனுடைய நீண்ட தாடியையும், கூர்ந்த பார்வையையும், கம்பீரமான தோற்றத்தையும் கவனித்தவுடன் அவனை எழுதினால் நல்ல ஓவியமாகுமென்ற எண்ணம் உண்டாயிற்று.

அவன் முறுவலித்துக்கொண்டே என் அருகில் வந்து, "அது முடியாது" என்றான். அவன் பேச்சு என்னை ஒரு குலுக்குக் குலுக்கியது! 'எது முடியாது? நான் நினைத்ததை இவன் எப்படி உணர்ந்துகொண்டான்? உற்று நோக்குவதைப் பார்த்தே கண்டுகொண்டானோ? அப்படியிருந்தால் இவன் சிறந்த அறிவாளியாகத்தான் இருக்கவேண்டும்' என்ற எண்ணங்கள்கோவையாக ஒரே கணத்தில் என் மனத்தில் எழுந்தன. அவற்றோடு என்னை அறியாமலேயே அவனுடன் பேசவேண்டுமென்ற ஆசையும் சேர்ந்துகொண்டது.

"நான் நினைத்ததை எப்படி அறிந்தாய்?" என்று வியப்புடன் கேட்டேன்.

அவன் எனது கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. "அதிருக்கட்டும்; நீ யார்?" என்று திரும்பி ஒரு கேள்வி போட்டான். அவன் முகப் பொலிவும் சிரித்த பேச்சும் அவனோடு வார்த்தை கொடுத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று என்னைப் பெரிதும் தூண்டின. மேலும் நான்தான் எனது வேலையை அதோடு நிறுத்தி விடுவதென்று முன்னமேயே முடிவு கட்டிவிட்டேனே.

"நான் ஓர் ஓவியன்" என்றேன்.

அவன் சிரித்தான். "நீதானா ஓவியன்? உலகிலுள்ள எல்லோரும் ஓவியர்களே. உனக்கு இதில் என்ன தனிச் சிறப்பு இருக்கிறது?"

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. உலகில் எல்லோருமே ஓவியர்களா? அதெப்படி இருக்க முடியும்?

"நீ சொல்வது விநோதமாக இருக்கிறதே! எல்லோரையும் ஓவியரென்று சொல்ல முடியுமா?"

"நிச்சயமாகச் சொல்லலாம். நீ உன் விருப்பப்படி படம் எழுதுகிறாய்; அவர்களும் தம்முடைய விருப்பப் படியே தம் வாழ்க்கைச் சித்திரத்தை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். உனக்கு வர்ணங்கள் எப்படியோ அப்படியே அவர்களுக்கு அவர்களுடைய குணம்."

"உன் வார்த்தையின் கருத்தை நான் அறிந்து கொள்ள முடியவில்லையே!"

"கருத்தென்ன? இதுதான் கருத்து: நீ பல வர்ணங்களைக் கொண்டுவந்திருக்கிறாய். அவற்றைக் கொண்டு தூரிகையால் ஓவியம் தீட்டுகிறாய். இந்த

வர்ணத்தைத்தான் உபயோகிக்க வேண்டும். இந்த மாதிரிதான் தீட்டவேண்டும் என்று யாராவது உன்னைக் கட்டுப்படுத்துகிறார்களா? இல்லையே இல்லை. அதுபோலவே அவர்களும் சில குணங்களோடு உலகில் வந்து, வாழ்நாள் என்னும் தூரிகை கொண்டு தங்கள் வாழ்க்கைப் படத்தை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். எந்தக் குணத்தைப் போற்றிப் பயன்படுத்த வேண்டும், எதை விலக்க வேண்டும் என்பதெல்லாம் அவர்கள் இச்சைப் படியே விடப்பட்டிருக்கின்றன.''

''சரி, அவர்கள் முயற்சியின் முடிவுதான் என்ன?''

''உனது ஓவியத்தின் முடிவு போன்றதுதான் அதுவும்! எந்த எந்த நிறங்களைப் பக்கம் பக்கமாக இருக்கச் செய்யலாமோ, எவற்றைக் கலவையாக்கிப் புதிய வர்ணத்தையும் காந்தியையும் உண்டாக்கலாமோ அப்படிச் செய்து ஜீவகளையும், உணர்ச்சியும் தோன்ற வரைந்தால் உயர்ந்த சித்திரமாகும். தாறுமாறாகப் பட்டை அடித்தாலும், வர்ணச் சேர்க்கை செய்தாலும் ஓவியம் பாழடைகிறது. அதுபோன்றதே வாழ்க்கை ஓவியமும். அதை எல்லோரும் மதிக்கும்படியாகச் செய்யலாம்; அல்லது வெறுக்கும்படியாகவும் செய்யலாம். எல்லாம் மனிதன் கையிலேயே இருக்கிறது! வெற்றிச் சிகரத்தை அடைபவனும் அவனே; பாதாளத்தில் அழுந்திக் கிடப்பவனும் அவனே.''

''ஆமாம், என்னுடைய ஓவியத்தைக் கண்டு பலர் புகழப் போகிறார்கள்! நீ சொல்லும் ஓவியத்தை யார் பார்க்கிறார்கள்?''

அவன் நகைத்தான்! ஆகா, அது என்ன சிரிப்பு! அதில், நான் எல்லாம் அறிந்தவன் என்ற எனது

பாவனையெல்லாம் அடியோடு சாம்பலாகிவிட்டது. அடக்கம் பிறந்தது. அவன் மறுமொழியைக் கவன மாகக் கேட்கலானேன்.

"பலபேர் புகழுகிறார்கள் என்ற எண்ணத்தால் தானே அரைகுறையாக நீ உனது ஓவியத்தை இன்று முடிக்க நினைக்கிறாய்? உனக்கு இன்றைய வேலை முற்றும் திருப்தியா? இல்லையே! சாதாரண மக்கள் புகழுரையிலா மன நிறைவு அடைவது? ஆயிரத்தில் ஒருவனான ரசிகனை மகிழச் செய்வதல்லவோ சிறந்த கலை? அதோடு நீ நினைக்கிறாய், உனது ஓவியந்தான் கவனிக்கப்படுகிறதென்று! உண்மை அதுவல்ல. இந்த ஓவியம் எப்படி மக்களுடைய உள்ளத்தில் உணர்ச்சிகளை எழுப்புமோ அதுபோல ஒவ்வொருவ னுடைய வாழ்க்கைச் சித்திரமும் அதன் மதிப்புக்குத் தக்கபடி உலகில் இன்ப துன்பம் போன்ற மாறான உணர்ச்சிகளை விளைவிக்கின்றது. அதன் பயனை நாம் எல்லோரும் தெரிந்தோ தெரியாமலோ அனுபவிக் கிறோம். மற்றும் எல்லோருடைய வாழ்க்கைச் சித்திரத்தையும், உனது சித்திரமும் உள்படக் கவனித்துத் தீர்ப்புச் சொல்லும் மகா ரஸிகன் ஒருவன் இருக்கிறான். அவன் பார்வையில் அகப் படாதது ஒன்றும் இல்லை. அவனை மகிழ்விப்பதே வாழ்க்கையின் குறிக்கோளாகும்" என்று நிதான மாக அவன் பேசினான்.

எனக்கு எல்லாம் விளங்கிவிட்டது. இவன் சாதாரணப் பேர்வழி அல்ல என்பதும் தெரிந்து கொண்டேன். அதே சமயத்தில் ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றி அவனுடைய கருத்தைத் தெரிந்துகொள்ள என்னுள்ளே ஆவல் குதித் தெழுந்தது.

"அந்த மகா ரஸிகன் என்னைப்பற்றி என்ன நினைப்பானோ?"

"அதை யார் சொல்ல முடியும்? ஆனால் அவ... விருப்பு வெறுப்பில்லாது தீர்ப்புச் சொல்லுவா... என்பது மட்டும் திண்ணம். மனித சமூகத்தி... (உனது கலையினால் இன்பத்தைக் கொடுக்க நீ உண்மை... யாக முயன்றிருப்பாயாகில், அதில் முழு வெற்... அடையாவிட்டாலும், அவன் உன்னைப் போற்... வான். ஆனால் சோம்பலாலும், அசிரத்தையாலு... உனக்கே மனநிறைவு இல்லாத நிலையில் நிறுத்தினு... அவன் ஏற்றுக்கொள்ளமாட்டான்) சாதாரண மக்களின் புகழுரையே போதுமென்று கலையின் சிகரத்தை அடைய முயலாது நின்றாலும் அகமகிழ்ச்சி அடையான்."

"ஆமாம் மெய்தான்" என்று என் உள்ளம் எதிரொலித்தது. கை என்னை அறியாமல் தூரிகையை மறுபடியும் எடுத்தது. தென்னங்கீற்றின் ஜொலிப்பைத் திரையில் சிறைப்பிடிக்கப் புது ஆவேசத்துடன் தொடங்கினேன்.

மறுபடியும் நான் என் கண்களைத் திரையிலிருந்து வேறு பக்கம் திருப்பியபோது அவனைக் காணவில்லை.

# கடையின் கவர்ச்சி

பங்குனி மாதம் ஒரு நாள் பகல் பன்னிரண்டு மணியிருக்கும்; கதிரவன் தீப்போல் காய்கிறான். குருடிமலை வெயிலில் சோர்ந்து நினைவிழந்து கிடப்பதுபோல் காணப்படுகின்றது. அம்மலைச் சாரலின் ஒரு பக்கத்தில் ராமன் தான் வெட்டிச் சேர்த்த விறகுகளையெல்லாம் ஒரே கட்டாகக் கட்டிக்கொண்டிருக்கிறான். பொழுது சாய்வதற்குள் கையில் இரண்டு பணம் கிடைக்கும் என்று அவன் உள்ளத்தில் உவகை பொங்குகின்றது.

> குருடிமலை ராசாவே
> கும்பிடறேன் காத்திடுவாய்

என்று சிறிய பாட்டுப் பாடுகிறான்.

விறகைத் தூக்கிக்கொண்டு கொஞ்ச தூரத்தில் இருக்கும் தனது குடிசைக்கு வந்தான் ராமன். இன்னும் பாட்டு நிற்கவில்லை.

> கும்பிடறேன் ராசாவே
> கொள்ளைப் பணம் கொடுப்பாயே
> குருடிமலை ராசாவே...

பாட்டு முடிந்ததும் முடியாததுமாக அதே தொனியில், "கறுப்பாயி, என்ன பண்ணறே? சீக்கிரமா சோத்தைத் போடு! இன்னும் அஞ்சாறு மைல் போக வேணும்" என்றான்.

விறகைக் குடிசைக்கு முன்னால் போட்டுவிட்டு ராமன் குடிசைக்குள் நுழைந்தான். அவன் மனைவி

கருப்பாயி மெள்ள எழுந்து வட்டிலை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள். மலைக் காய்ச்சலால் அடிக்கடி துன்பப்படுவதால் அவள் உடல் மெலிந்திருந்தது. முகம் மஞ்சள் படர்ந்திருந்தது. இடுப்பிலிருந்த சாயம் போன சிவப்புச் சேலையில் ஆயிரம் தையல்கள் காணப்பட்டன.

வட்டிலைக் கழுவி உள்ளே கொண்டு போய் ராமன் முன்பு வைத்துவிட்டுக் களியை ஒரு சட்டியில் கரைத்துக்கொண்டிருந்தாள் கருப்பாயி.

"பொழுதோடே ஒரு பணமாவது கொண்டாரல்லேன்னு இந்தக் கஞ்சியும் இல்லே; நேத்துக் காலமே காய்ச்சினது! எனக்குக் குளிர்ந்து குளிர்ந்து வந்துக்கிட்டே இருந்துது; குடிக்கல்லே. அதுதான் மிச்சம் இருந்தது" என்று சொல்லிக்கொண்டே கரைத்த கூழை வட்டிலில் ஊற்றினாள்.

"வரும்போது ராகி வாங்கிக்கொண்டு வர்றேன். சும்மா மூக்கைச் சிந்தாதே" என்றான் ராமன்.

வட்டிலில் ஊற்றியது வயிற்றுக்குப் போதுமோ போதாதோ? இருந்தது அவ்வளவுதான். அதைக் குடித்துவிட்டு ராமன் வெற்றிலை போட உட்கார்ந்தான்.

"லே, கொஞ்சம் புகைலே கொண்டா!"

"போன சந்தை வாங்கலே! வீட்டிலிருந்ததெல்லாம் நேத்தே தீர்ந்துது. சருகுகூட இல்லை" என்றாள் கருப்பாயி.

"வாங்காதே என்ன பண்ணினே? இதெல்லாம் சொல்லிச் சொல்லி ஆகோணுமா? மூதேவி" என்று சிடுசிடுத்தான் ராமன்.

"என்ன பண்ணறது! ராகி வாங்கவே பணம் பத்தலே; நான் நல்லா இருந்தாலாவது ஏதோ ஒரு சுமை அரைச்சுமை கொண்டுவந்து வித்துக் காசு பண்ணுவேன். அதுக்கும் வழியில்லே" என்று நயமாகப் பதில் சொன்னாள் அவன் மனைவி. அவளுக்கு ராமன்தான் கதி. "படைச்சவன் தலையிலே எழுதினபடிதானே எல்லாம் நடக்கும்?" என்று கறுப்பாயி மௌனமாக எதையும் சகித்துக்கொண்டிருப்பவள்.

அவள் வார்த்தைகள் ராமன் உள்ளத்தில் சுருக்கென்று தைத்தன. பேசாமல் தனது மடிப் பையிலிருந்த வாடிப்போன வெற்றிலையொன்றை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு வெளியே வந்தான். விறகுக்கட்டை அவிழ்த்து அது பெரிதாகத் தோன்றுமாறு குச்சிகளை மாற்றி மாற்றி வைத்து மறுபடியும் கட்டினான். இதுவரையில் அவன் இடுப்பில் ஒரு பெரிய கந்தைத் துணி கௌபீனமாக இருந்தது. தலையில் மட்டும் ஓர் அழுக்கடைந்த வேட்டியைச் சுற்றிக்கொண்டிருந்தான்.

இப்பொழுது தலைவேட்டி இடுப்புக்கு வந்துவிட்டது; இடுப்பிலிருந்த கிழிசல் சும்மாடாக மாறியது. விறகைக் கட்டித் தூக்கிக்கொண்டு புறப்பட்டான் ராமன்.

கறுப்பாயி வெளியே வந்து, "ஒரு ரெண்டு சல்லிக்கு மிளகாயும் வாங்கிக்கிட்டு வாங்க" என்று தனது மெலிந்த குரலில் சற்று உரக்கவே கூறினாள். ராமன் நடந்துகொண்டே அதைக் காதில் வாங்கிக்கொண்டான்.

மூன்று மணி சுமாருக்கு ராமன் பெரிய நாயக்கன்பாளையம் வந்து சேர்ந்தான். வந்ததும் கொஞ்சங்கூட நிற்காமல், "விறகு! விறகு!" என்று

கத்திக்கொண்டு ஊரெல்லாம் அலைந்தான். வெயில் இன்னும் குறைந்தபாடில்லை. செருப்பில்லாததால் கால் வேறு சூடேறுகிறது. கத்திக் கத்தித் தொண்டையும் வறண்டுவிட்டது.

ராமன் ஒரு சந்து வழியாகப் போனபோது அவனை நோக்கிக் கவுண்டம் பாளையத்து நஞ்சப்பன் வந்துகொண்டிருந்தான். அவன் முகத்தில் ஒரு குஷி தோன்றிக்கொண்டிருந்தது; கையில் விற்று விற்ற காசு குதிக்கிறது.

"என்ன, இன்னம் விக்கலே?" என்று அவன் ராமனைக் கேட்டான்.

"போன மாசம் இந்தச் சுமை பத்தணாவுக்குப் போச்சு! இப்போ எட்டணாவுக்குப் போடுங்கருங்கோ. எட்டணாவுக்குப் போட்டா, ராகி வாங்கவே பத்தாது."

"அடே போட்டுட்டு வா! என்னமோ தலைமேலே கட்டிக்கிட்டுப் போறேம்; கிடைச்சது லாபம். ரெண்டு புட்டி போட்டுட்டுப் போகலாம்!"

(ராமன் எட்டணாவுக்கு விறகை விற்றுவிட்டான். நஞ்சப்பனோடு நேராக ரயில் பாதைக்கு அருகிலிருக்கும் கள்ளுக் கடைக்குப் பு...... வயிற்றுப் பசி ஒரு பக்கம்; தண்ணீர்த் தாகம் ஒரு பக்கம்! விறகு வெட்டி வந்து சுற்றித் திரிந்த களைப்பு வேறு; இவற்றிற்கெல்லாம் மேலே நஞ்சப்பனுடைய பேச்சும் சேர்ந்து ராமனை வேறு எல்லாவற்றையும் மறந்துவிடச் செய்தது.

எட்டணாவுக்கும் குடித்துவிட்டான்;) இன்னும் அவனுக்குத் தாகம் அடங்கவில்லை. ஆனால் என்ன

செய்வது? அவனை நம்பிக் கடைக்காரன் கடனுக்குக் கள்ளூற்ற மறுத்துவிட்டான்.

போதை கொஞ்சம் மீறவே கடைக்காரனை வாயில் வந்தபடி வைதுகொண்டு ராமன் குடிசையை நோக்கிப் புறப்பட்டான். எப்படியோ தட்டுத் தடுமாறி இரவு பத்து மணிக்குப் போய்ச் சேர்ந்தான்.

நேரம் அதிகமாக ஆகக் கறுப்பாயிக்குத் தன் கணவன் ராகி மிளகாயுடன் திரும்பி வருவான் என்ற நம்பிக்கை போய்விட்டது; ராமன் வந்த நிலைமையைக் கண்டதும் அவள் அவனை ஒன்றும் கேட்கவில்லை. மௌனமாக உட்கார்ந்திருந்தாள்.

"ஏ குருதாட்ட உக்காந்துக்கிட்டிருக்கிறே? சோறு போட்டு வை" என்று குழறினான் ராமன்.

"ஒண்ணுமே இல்லேனு போறபோதே சொன்னேனே; இப்படி வந்தாக் கஞ்சிக்கு எங்கே போறது?" என்று மெதுவாகச் சொன்னாள் கறுப்பாயி.

"எங்கே போறதா? ஏல்லே, காத்தேலேயிருந்து நான் கஷ்டப்பட்டுட்டு வாரேன். நீ கொஞ்சங்கூட மரியாதெயில்லாமெ காலே நீட்டிக்கிட்டா பேசறே?"

"ஆமாம், குடிச்சுட்டு வந்தா பின்னே இப்படித் தான் பேசச் சொல்லும். இன்னைக்கென்ன புதுசா?" என்று கறுப்பாயி முகத்தைச் சுளித்தாள்.

"என்ன, முகத்தைச் சுளிக்கிறியா சும்மா? ஆரு குடிச்சுட்டு வந்திருக்கிறு? அந்தக் கம்மனாட்டி ஊத்த மாட்டேங்கறான். இருக்கட்டும், அவனை ஒரே அடியா அடிச்செறியாத போனு?"

"சரி, சரி, பேசாமே படுத்துக்குங்க; ஊரிலே இருக்கிறவங்களை அடிச்சா சும்மா விட்டுவிடுவாங்கோ!"

"நான் அவளை அடிச்சா அதைப்பத்தி நீ ஏன் வாண்டாமுங்கிறே? அப்படித்தான் அடிப்பேன். நீ ஆரு வாண்டாமுங்கறத்துக்கு? உனக்கும் அவளுக்கும் என்னஎல்லே....?"

"குடிச்சா புத்தி போறதைப் பாரு. இதெல்லாம் நல்லதுக்கா இப்படிப் பேசறது?"

"என்ன எதுத்தெதுத்துப் பேசறியா? என்னைக் கண்டா உனக்கு எப்படிலே இருக்குது?....ம்" என்று தள்ளாடிக்கொண்டே ராமன் குடிசையின் ஒரு மூலையில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த வட்டிலை எடுத்துக் கறுப்பாயிமேல் வீசினான்.

கறுப்பாயி சட்டென்று விலகிக் குடிசைக் கதவைத் திறந்துகொண்டு வெளியே ஓட்டம் பிடித்தாள். போதை வெறியாதலால் ராமன் அவளைப் பின் தொடரவில்லை. ஏதேதோ வாயில் வந்தபடி பேசிக்கொண்டே அப்படியே படுத்து உறங்கிவிட்டான்.

காலையில் வெகுநேரம் ஆகிவிட்டது. தூக்கம் கலைந்து, வெறியும் போய் ராமன் எழுந்து கண்ணைத் துடைத்துக்கொண்டு உட்கார்ந்தான். அவனுக்கு ஒன்றும் தெளிவாக விளங்கவில்லை; ஏதோ கனவு கண்டதுபோல் கொஞ்சம் கொஞ்சம் நினைவுக்கு வந்தது.

ராமன் வெளியே வந்து தன் மனைவியைத் தேடத் தொடங்கினான். கறுப்பாயி சற்றுத் தூரத்தில் ஒரு மரத்தடியில் படுத்துக்கொண்டிருந்ததைப் பார்த்ததும் அவனுக்கு ஆச்சரியமாய்ப் போயிற்று.

"கறுப்பாயி, ஏன் இங்கே படுத்துக்கிட்டிருக்கிறே? வீட்டுக்கு வா போவோம்" என்று சொல்லிக் கொண்டே ராமன் அருகில் வந்தான்.

கறுப்பாயி மெதுவாகக் கண்ணை விழித்துப் பார்த்தாள். "மேலெல்லாம் குடையுது; எழுந்திருக்க முடியல்லே" என்றாள்.

ராமன் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு அவள் காலை மெதுவாகப் பிடித்தான்.

"ஆமாம், விடுங்கோ. ராத்திரி அந்த வட்டில் என் மேலே பட்டிருந்தா இந்நேரம் எங்கிருப்பேனோ?"

ராமனுக்கு வெட்கமாய்ப் போய்விட்டது. இரவு தான் என்ன என்னவோ செய்துவிட்டதாக நினைத்துக்கொண்டான். "வா, உள்ளே போய்ப் படுத்துக்கோ; சீக்கிரமாப் போயி ஒரு சுமை கொணந்து இன்னைக்கு எல்லாம் வாங்கிக்கிட்டு வாறேன்."

"தினமும் இப்படித்தான் சொல்றது; சாயங்காலமானா நெனைப்பு மாறிப் போவுது."

"கறுப்பு, அதெல்லாம் தொலையுது; இனிமேல் பார்த்துக்கோ! அந்த நஞ்சன் பண்ணிப்பிட்டான். அவனைக் கண்டாச் செருப்பிலே போடறேன் பாரு."

கறுப்பாயி திடுக்கிட்டாள். "சே சே, அப்படி என்னவது பண்ணிப்பிடாதீங்கோ. நாம் சேர்க்கை சேர்ந்து கெட்டுப் போனா, அதுக்கு ஊரிலே இருக்கிறவங்களை அடிக்கிறமுன்னு சும்மா இருப்பாங்களா?"

"பெரியநாயக்கப்பாளையம் போனாலே காலு அந்தக் கடைக்கு இழுக்குது. இனிமே அந்த

ஊருக்கே போறதில்லே. இல்லாட்டி அந்தக் கடைக்குத் தீ வைக்கறேன் பாரு.''

''சும்மா இருங்க; ஆராவது கேட்டா என்ன நினைப்பாங்க? நாம் புத்தியில்லாமப் போனு, கடை என்ன பண்ணும்?''

''கடையில்லாதபோனு எப்படிப் போவேன்? கடை இருக்கக் கண்டுதானே நினைப்பு வருது?''

''கடைக்குத் தீ வைச்சா, செயிலுக்குத்தான் போகணும்; சர்க்காரு கடையில்லையா? அவுங்க தானே ஏலத்திலே போடறுங்கோ?''

''ஆமா, சர்க்காரு கடையை எடுத்துப்பிட்டா எனக்கு இப்படித் தினமும் புத்தி கெட்டுப்போவாது. கடையைக் கண்டாலே மனசு மயங்கிப் போவுது.''

''ஆமாம், சர்க்காரு கடையை எடுக்கிற தெப்போ, நீங்க குடிக்காதிருக்கிறதெப்போ! என்னமோ என் தலைவிதி!''

''சரி, சும்மா முகத்தை இழுத்துக்கிட்டு இருக்காதே; இனிமே அந்தப் பக்கம் போகாமே வந்துடறேன்.''

''இதோட இப்படிச் சொன்னது ஆயிரந் தடவை இருக்கும்.''

ஆனல், ராமன் அப்பொழுது மிகவும் உறுதி யோடுதான் இருந்தான்.

# ஒரே தடவை

"ஏதோ ஒரு குற்றம் செய்துவிட்டான்; அதைக் கொண்டு அவனை நாம் அயோக்கியனென்று நினைக்கக்கூடாது" என்றார் ஒரு பெரியவர்.

"யோக்கிய னென்றால் அப்படிச் செய்திருப் பானா? அவனை இனிமேல் எப்படி நம்ப முடியும்?" என்றார் ஒரு குட்டை மனிதர்.

"யாரும் ஒரு தடவை தப்பிப் போகலாம். அதை வைத்தே அவனுக்கு என்றும் நிலைபெறும்படி அயோக்கியப் பட்டம் கட்டுவது நியாயமல்ல" என்றார் பெரியவர்.

குட்டையருக்கு அவர் கூறும் கருத்துப் பிடிக்க வில்லை. 'என்னவோ சொல்லுகிறார். அவருக்கு வேண்டியவர் போலிருக்கிறது. அதனால்தான் பரிந்து பேசுகிறார்' என்று எண்ணமிட்டுக்கொண்டு அவர் ஏதோ முணுமுணுத்தார்.

இருவரும் கடற்கரை நண்பர்கள். மாலையில் உலாவ வரும்போது சந்திப்பார்கள்; அவ்வளவுதான். அதனால் ஒருவர் அபிப்பிராயத்தில் மற்றவருக்கு ஆழ்ந்த நம்பிக்கை ஏற்படவில்லை. இந்த விஷயம் இப்படியே ஒருவிதமான முடிவும் பெறாமல் நின் றிருக்கும். ஆனால் இவர்களுக்குப் பக்கத்தில் மணலில் தனியாக உட்கார்ந்திருந்த ஒரு வழுக்கைத் தலைப் பெரியவர் எதிர்பாராத விதமாக இந்த விவாதத் தில் கலந்துகொள்ளவே, நிலைமை மாறிவிட்டது.

"மிக நல்ல மனிதனும் ஒரு தடவை ஏமாந்து தவறு செய்துவிடலாம். இதில் நடக்கக்கூடாதது ஒன்றுமே இல்லை. அதனால் அவனை அயோக்கிய னென்று சொல்லக்கூடாது" என்று அவர் அழுத்த மாகக் கூறினார். அவர் குரலில் தமது எண்ணத்தைப் பற்றி அவருக்கு இருந்த முழு நம்பிக்கை தொனித்தது.

மற்ற இருவரும் அவருடன் பேச வாயெடுத் தார்கள்.

"ஏன் சொல்லக்கூடாது? சும்மா, சொல்லக் கூடாது என்றால் எனக்கு நம்பிக்கை உண்டாக வில்லை. காரணம் சொன்னால் நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்" என்றார் குட்டையர்.

"நீங்கள் உங்கள் கருத்திற்குச் சாதகமாக அநுபவத்திலிருந்து ஏதாவது சொல்ல முடியுமானால் இவருக்கு ஐயம் இருக்காது" என்று பெரியவர் புதியவரிடம் சொன்னார்.

"எனக்கு ஒரு நண்பரைத் தெரியும். மிகநல்லவர். சொற்ப சம்பளத்திற்கு அவரைப் போல் அவ்வளவு விசுவாசத்துடன் வேலை செய்தவரை நான் கண்டதே இல்லை. இருந்தாலும் அவரும் ஒரு தடவை தவறித் தான் போனார்" என்றார் வழுக்கைத் தலையர்.

"அவரைப்பற்றிச் சற்று விவரமாகத் தயவு செய்து சொல்ல வேணும்" என்று மற்ற இருவரும் ஒரே மூச்சில் கேட்டுக் கொண்டார்கள்.

அவர் தொடங்கினார்:

குப்புசாமி ராயப்பேட்டையில் ஒரு பாங்கியில் குமாஸ்தாவாக இருந்தார். மாதம் நாற்பது ரூபாய் சம்பளம். நல்ல உழைப்பாளி. ஒரு நாளாவது காலந்

தவிர அவர் வேலைக்குச் சென்றதே இல்லை. மிகுந்த சிரத்தையோடு அவர் தம்முடைய வேலையைச் செய்வார். பாங்கியை மூடிவிட்டுச் செல்லும்போது அவரே கடைசியாக இருக்கும். அவர் கடமையிலே ஒருதப்பு வந்ததில்லை. அதனால் பாங்கிக்குச் சொந்தக்காரரான செட்டியாருக்கு அவரிடத்தில் நல்ல மதிப்பு ஏற்பட்டிருந்தது. அவரை நம்பி எவ்வளவு தொகையையும் கொடுத்தனுப்புவார்.

குப்புசாமி பாங்குப் பணத்தில் ஒரு தம்படி தொடமாட்டார். மனச்சான்று என்பதை அவரிடந்தான் பார்க்கவேண்டும், 'கிடைக்கிற சம்பளமானது செய்கிற வேலைக்குத் தக்கபடி இருக்கிறதோ இல்லையோ, சம்மதப்பட்டுத்தானே வேலைக்கு வந்திருக்கிறோம்? அதனால் வேலையை மனச்சான்றிற்கு விரோதமில்லாமல் செய்யவேண்டாமா?' என்பது அவர் கொள்கை. மத்தியான்னம் சிற்றுண்டிக்காகக் கிடைக்கும் ஒரு மணி நேர ஒழிவிலும் அவர் பதினைந்து நிமிஷந்தான் எடுத்துக்கொள்வார். அவருடன் வேலை செய்யும் மற்றக் குமாஸ்தாக்களுக்கு அவர்மேல் உள்ளுக்குள்ளே பொறாமை. ஒருவர்மட்டும் இவ்வாறு வேலை செய்தால் மற்றவர்களுக்குக் கஷ்டந்தானே?

குப்புசாமிக்குப் பாங்கு தெரியும்; அதற்குப் பக்கத்திலேயே ஒரு சந்தில் இருந்த தமது வீடு தெரியும். வேறு எங்கும் அவர் போகமாட்டார். கடல் இவ்வளவு அழகாக இருக்கிறதே; அவர் அந்தக் காலத்திலே இந்தப் பக்கம் வந்ததே இல்லை. வர ஆசைப்பட்டிருந்தாலும் சம்பளம் இடங்கொடுத்திராது. (பஸ்ஸுக்கும், டிராமுக்கும் செலவழிக்க அவருக்குத் தாராளமாகப் பணம் ஏது? குடும்பச் செலவுக்குத்தான் அவர் வருவாய் பற்றும் பற்றாமல் இருந்தது.)

ஆனால் குதிரைப் பந்தயம் நடக்கும் காலத்தில் மட்டும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் கிண்டி செல்வதில் அவர் தவறமாட்டார். குதிரைப் பந்தயத்தில் அவருக்கு அத்தனை பைத்தியம். யாராலும் அவரை அங்கே போவதிலிருந்து தடுக்க முடியாது. ஆனால் அவர் பந்தயம் வைக்கவேண்டும் என்று போவதில்லை. குதிரைகள் ஓடுவதையும் பந்தயம் கட்டுபவரையும் பார்ப்பதிலே அவருக்கு ஆரம்பத்தில் ஆசை இருந்தது. நான்கணு டிக்கட் வாங்கிக் கொண்டு உள்ளே சென்று ஆவலோடு குதிரைகளைக் கவனித்துக் கொண்டிருப்பார். பந்தயம் முடிந்த பிறகு வெற்றியடைந்தவர்களுடைய குதூகலப் பேச்சைக் கேட்டு மகிழ்ந்து கொண்டே வீடு திரும்புவார்.

நாளடைவில் குப்புசாமிக்குக் குதிரைகளின் பெயர்களும், அவற்றின் வெற்றிப் புகழ்களும், சவாரி செய்பவர்களுடைய திறமைகளும் மனப்பாடமாகி விட்டன. பாங்குக்குக் காலையில் சென்றதும் வேகமாகப் பத்திரிகையைப் புரட்டிக் குதிரைப் பந்தயச் செய்திகளை ஆவலோடு படிப்பார். பந்தயத்தில் வென்றவர்களுக்குக் கிடைக்கும் தொகை முதலியவற்றை யெல்லாம் விடாமல் படித்துத் தெரிந்துகொள்ளுவார்.

பிறகு குப்புசாமியும் குதிரைப் பந்தயம் பார்க்க செல்லும் வேறு சில ஜோஸ்யக்காரர்களைப் போல, முதலில் வரும் குதிரையைப் பற்றி முன்கூட்டியே சொல்லத் தொடங்கினார். அவருக்குத்தான் குதிரைகளைப் பற்றியும், சவாரி செய்பவர்களைப் பற்றியும் மிக நன்றாகத் தெரியுமே. அதோடு எப்பொழுதும் கணக்கில் அவர் கைதேர்ந்தவர். பாங்கியில் கணக்கு வைக்கும் பழக்கம் இங்கும் அவரிடம் வெளிப்பட்டது. அதனால் அவர் ஆராய்ந்து பார்த்துச் சொன்ன

ஜோஸ்யம் பெரும்பாலும் பொய்யாகாது. "அதோ, அந்த ஏழாம் நம்பர்க் குதிரை முதலில் வரப் போகிறது" என்பார். அதுவே முதலில் வரும். குப்புசாமிக்கு அளவில்லாத மகிழ்ச்சி உண்டாகும்.

அவர் ஆராய்ந்து கூறுவதைக் கேட்டுப் பலபேர் வெற்றி பெறலானார்கள். இது கொஞ்சங் கொஞ்சமாகக் குப்புசாமிக்கு ஆசை வலையை விரித்து விட்டது. அதற்குத் தகுந்தவாறு ஒரு சனிக்கிழமை மாலை, செட்டியார் அவரிடம் 500 ரூபாயைக் கொடுத்து, சுராஜ்மல்லில் தாம் வாங்கிய வைரத் தோட்டிற்குப் பாக்கி நின்றதைத் தீர்த்து வரும்படி சொன்னார். "மாலையில் பாங்கு மூடும்போது போய்க் கணக்கைத் தீர்த்துவிட்டு ரசீது வாங்கித் திங்கட் கிழமை கொண்டுவந்து விடுங்கள்" என்று செட்டியார் சொல்லியிருந்தார். முன்னாலேயே சென்றால் வேலை கெட்டுப் போகுமல்லவா? மேலும் குப்புசாமியிடம் அவருக்கு முழு நம்பிக்கை இருந்தது. பின் எதற்காகப் பாங்கு வேலையைக் கெடுத்துக்கொண்டு முன்னாலேயே அனுப்பவேண்டும்?

பாங்கு மூடியவுடன் குப்புசாமி பணத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். பஸ்ஸில் இருந்த பிரயாணிகளிற் சிலர் அடுத்த நாள் நடக்கப்போகும் கிண்டிக் குதிரைப் பந்தயத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். குப்புசாமிக்கு யோசனை பிறந்துவிட்டது. "இந்த 500 ரூபாய் மட்டும் என் கையில் இருந்தால் நாளைக்கு ஏராளமாக வென்று விடலாம். நான் நினைக்கிற குதிரை நிச்சயமாய் முதலில் வரும். அதிலும் நாளைக்கு ஓடும் குதிரைகள் எல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். எப்படியும் நாளைக்கு நான் சொல்வது கட்டாயம் பலிக்கும். நாளைக்கு மட்டும் நான் பந்தயம் கட்டினால் கொள்ளை லாபம் அடித்துவிடலாம். வீட்டிலே என் மனைவி

நெடு நாளாகக் கேட்டுக் கொண்டிருக்கிற அந்தச் சேலை, குழந்தைக்குச் சங்கிலி எல்லாம் வாங்கி விடலாம். இந்த 40 ரூபாய்ச் சம்பளத்தில் என்றைக்கு இவைகளையெல்லாம் வாங்கிக் கொடுக்கப் போகிறேன்? சம்பள உயர்வு கேட்டால் செட்டியார் கொடுக்கவா போகிறார்? மேலும் நாளைக்குவென்று கையில் கொஞ்சம் தொகையும் வைத்துக் கொண்டால் நிம்மதியாக இருக்கலாம்' என்று இவ்வாறு அவருக்கு எண்ணம் ஓடிற்று.

'ஆனால் செட்டியார் பணத்தைத்தொடலாமா? சே, சே! பிறகு நாணயம் கெட்டுப் போய்விடும். ஒரு நாள் நாணயம் போய்விட்டால் பிறகு யாரும் என்னை நம்பமாட்டார்கள். இந்த ஆசையெல்லாம் எனக்கு எதற்கு? பேசாமல் சுராஜ்மல்லின் ரூபாயைக் கொடுத்துவிட்டு வீடு போய்ச்சேரலாம் நகையில்லா விட்டால் சோறு செல்லமாட்டே னென்கிறதா, என்ன? ஏதோ இந்த வேலை இருந்தால் போதும். சாப்பாடாவது நிச்சயம் கிடைக்கும். செட்டியார் மனசு வைத்துச் சம்பளம் அதிகப்படுத்துகிற காலத்தில் எல்லாம் பார்த்துக் கொள்ளலாம்.' இந்த மாதிரி ஒரு யோசனையும் இடையே பிறந்தது.

இதற்குள் பஸ்ஸில் மற்றொரு குரல் கேட்டது. "போன வாரம் ஓர் ஆப்பக்காரி அஞ்சு ரூபாய் கை மாற்றாக வாங்கிக்கொண்டு வந்து 125 ரூபாய் சுளை போல அடித்துக்கொண்டு போய்விட்டாள். அவள் தான் கெட்டிக்காரி. தைரியமாகக் கட்டுகிறான்" என்றது அக்குரல்.

குப்புசாமி மறுபடியும் சிந்தனை செய்யலானார். 'ஆமாம், செட்டியார் பணத்தை நான் வைத்துக் கொள்ளவா போகிறேன்? நாளைக்கு மட்டும் பயன் படுத்திவிட்டுத் திங்கட்கிழமை சுராஜ்மல் கணக்கைத்

தீர்த்துவிட்டால் போகிறது. எப்படியும் நான் வெற்றி பெறத்தான் போகிறேன். ஒரு முறை தவறிவிட்டாலும் மற்றென்றில் நிச்சயம் கெலித்து விடுவேன். திங்கட் கிழமை நேரமே போய்ப் பணத்தைச் சுராஜ்மல்லில் கொடுத்துவிட்டு ரசீதும் வாங்கி வந்துவிடலாம். ஆனால் இப்பொழுது ஏதாவது ஒரு பேச்சு அவர்களுக்குச் சொல்லிவிட்டு வர வேண்டுமே? சொல்லாமல் திரும்பி விட்டால் ஒரு சமயம் திங்கட்கிழமையன்று பாங்குக்கு ஆள் அனுப்பி விட்டார்களானால் என்ன செய்வது? இப்பொழுது சுராஜ்மல்லுக்குச் சென்று, 'செட்டியார் கணக்குத் தீர்க்கும்படி கொடுத்த பணத்தை வரும் போது எடுத்துவர மறந்துவிட்டேன்; பாங்கியிலேயே என் கைப்பெட்டியில் இருக்கிறது. திங்கட்கிழமை பாங்கு திறந்ததும் கொண்டுவந்து கொடுத்துவிடுகிறேன். என்று சொல்லிவிட்டு வந்துவிடலாம்' என்று சூழ்ச்சி செய்யலானார்.

இது மிகவும் பொருத்தமாகத் தென்பட்டது. இதை யாரும் சந்தேகிக்கவும் முடியாது. மறந்து வந்துவிடுவது இயற்கைதானே? "ஜேப்பில் இருப்பதாக நினைத்துக்கொண்டே நான் வந்துவிட்டேன். பாங்கியைப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டு செட்டியாரும் போய்விட்டார். பஸ்ஸில் வரும் போதுதான் பணம் கொண்டுவரவில்லை என்று தெரிந்தது. பிறகு என்ன செய்வது? திங்கட்கிழமை கொண்டுபோய்க் கொடுத்துவிட்டால் போகிறது.— இதில் என்ன தவறிருக்கிறது?"

குப்புசாமியின் சூழ்ச்சி நன்றாகவே வேலை செய்தது. அதிலெல்லாம் அவர் தவறிவிடவில்லை. சுராஜ்மல்லில் அவர் வார்த்தையை யாரும் சந்தேகிக்கவில்லை. ஆனால் அடுத்த நாள் குதிரைப் பந்தயத்தில் தான் அவர் கணக்கும் ஆராய்ச்சியும் தவறிவிட்டன.

சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். அவர் அன்று எடுத்துச் சென்ற 500 ரூபாயையும் தோற்றுவிட்டு வெறுங்கையோடு வீடு திரும்பினார்.

வரும்போது அவருக்கு எந்த விதமான உணர்ச்சியும் இருந்ததாகத் தெரியவில்லை. பிணம் ஒன்றிற்கு நடக்க மட்டும் சக்தியிருந்தால் எவ்வாறு வருமோ அவ்வாறு வீடு வந்து சேர்ந்தார்; அப்படியே சாப்பிட்டார்; படுத்துக்கொண்டார்.

அவருக்கு உறக்கம் வரவில்லை. தலை கொதிக்கலாயிற்று. அவரையும் அறியாது ஒரு பெருமூச்சு நெஞ்சைப் பிளந்துகொண்டு வெளிவந்தது.

'ஆசையால் மோசம் போய்விட்டேனே! நாளை மத்தியான்னம் 12 மணிக்குள் விஷயம் எப்படியும் வெளியாகிவிடும். வேலை நிச்சயமாகப் போய்விடும். பிறகு குடும்பத்தின் கதி என்னவது? யாரிடமாவது கடன் வாங்கிக் கொடுத்துவிடலாமென்றால் யார் எனக்குக் கடன் கொடுக்கப் போகிறார்கள்? சம்பளம் குடும்பச் செலவுக்கே காணாது என்பதை யாரும் எளிதில் அறிந்து கொள்ளுவார்கள். ஐந்நூறு ரூபாய் கடன் கொடுத்தால் திருப்பிக் கொடுக்கச் சக்தி இருக்கிறதா என்று யோசிப்பார்களல்லவா? ஏதாவது நகையை அடகு வைத்து வாங்கலாமென்றாலோ மனைவி கழுத்தில் தாலியைத் தவிர வேறு ஒன்றும் இல்லையே! இனி என்ன செய்வது? வேலை போவதோடு நாணயம் வேறு கெட்டுப்போச்சே! இப்படியும் என் அறிவு கெட்டுப்போக வேண்டுமா? பேசாமல் சுராஜ்மல்லின் பணத்தைக் கொடுத்துவிட்டு வந்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டாலும் முதல் தடவை தோற்றவுடன் வந்திருக்கக்கூடாதா? ஒரு தடவை தவறினாலும் இன்னொரு தடவையாவது பலித்துவிடும் என்று மேலும் மேலும் கட்டி எல்லாம்

தொலைத்துவிட்டேனே!) நாற்பது ஐம்பது என்றாலும் எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாம்; ஐந்நூறு ரூபாய்க்கு எங்கே போவது?'

இவ்வாறு அவர் நினைத்து நினைத்து நெடுமூச்செறிந்துகொண்டிருந்தார். மணி ஆக ஆக அவர் கவலையும் மன வேதனையும் அதிகரித்தன! 'விடியாமல் இப்படியே இரவாகவே எனது வாழ்க்கை கழிந்துவிடாதா?' என்றுகூட எண்ணலானார். தூரத்தில் எங்கோ மணி பன்னிரண்டு அடிக்கும் சப்தம் கேட்டது; ஒவ்வோர் அடியும் தமது நெஞ்சில் தாக்குவது போலிருந்தது அவருக்கு. 'நாளைப் பகல் பன்னிரண்டு மணிக்குள் எல்லாம் வெளியாகிவிடும். அப்பொழுது நான் ஒரு மோசக்காரனாகச் செட்டியார் முன்னிலையிலும், மற்றக் குமாஸ்தாக்கள் முன்னிலையிலும் நிற்கவேண்டும். இத்தனை நாள் என் மேல் கொண்டிருந்த அபிமானமெல்லாம் ஒரு கணத்தில் பறந்தோடிவிடும்; தாட்சண்யம் இல்லாமல் செட்டியார் என்னை வேலையினின்றும் நீக்கிவிடுவார். நாணயம் தவறிய பிறகு எனக்கு வேறு எங்கேதான் வேலை கிடைக்கப் போகிறது? எந்த முகத்தை வைத்துக்கொண்டு நான் ஒருவரை வேலை கொடுங்கள் என்று கேட்பேன்? சே சே, இது என்ன வாழ்வு! நாணயந் தவறிய பிறகு இந்த வாழ்க்கை வாழ்ந்து என்ன பயன்? இனி இந்த உயிரை வைத்திருப்பதால் யாருக்கு நன்மை?' என்று இவ்வாறெல்லாம் வைராக்கியமான நினைவுகள் அவர் சிந்தையில் நிறைந்துவிட்டன.

இனி இந்த உயிரை வைத்திருப்பதில்லையென்று அவர் முடிவு கட்டிவிட்டார். உடனே தடாலென்று கட்டிலை விட்டு எழுந்தார். தண்ணீர் சேந்தும் கயிறு பக்கத்தில் கிடந்தது. அதை எடுத்துக்கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தார். அவர் இருப்பதோ ஒரு

சிறு வீட்டில்; ஒட்டுக் குடியாக அங்கே இருக்கிறார். அதில் அவருக்கு வசதியாக ஓர் இடம் அகப்பட வில்லை. 'அடடா, சாவதற்குக்கூட, பணம் இல்லாதவனுக்கு இந்த உலகத்தில் வசதியில்லையா?' உயிர் விடலாமென்றால் கயிற்றைக் கட்டித் தொங்க விடுவதற்கு உயர்ந்த கூரை இங்கே இல்லை. எந்த இடத்தில் பார்த்தாலும் ஆண்களும் பெண்களும் ஆடுகள் பட்டியில் அடைப்பட்டிருப்பதுபோல் படுத்திருக்கிறார்கள்."

குப்புசாமிக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை; அந்த வீட்டை விட்டால் பாங்கிதான் அவருக்குத் தெரியும். அதன் ஒருபுறத்தில் ஒரு சிறு சந்து செல்கிறது. அங்கே பாங்கியின் மேல் நிலையிலிருந்து சட்டத்தில் ஒரு வளையம் தொங்குகிறது. முன்பு அதில் விளக்குத் தொங்கவிட்டிருந்தார்கள். அதுதான் கயிறு கட்டித் தொங்கவிட வசதியாயிருக்குமென்று அவருக்குப் புலப்பட்டது. 'நாணயம் தவறிய இந்த நாய்க்கு அதுதான் சரியான இடம். நாளைக்கு எல்லோரும் நான் தொங்குவதைப் பார்த்து விஷயம் தெரிந்துகொள்ளட்டும். நாணயம் கெட்டவனுக்கு அப்படித்தான் வேண்டும்?' என்று தீர்மானித்துக்கொண்டே அவர் வேகமாக நடக்கலானார்.

யுத்த காலமாகையால் விளக்கணைப்பு அப்பொழுது அமலில் இருந்தது; எங்கும் ஓரே இருட்டு. மேலும் அமாவாசைக்கு ஒன்றிரண்டு நாட்களே இருந்தன; அதனால் மைபோல ஒரே கருமை எங்கும் படர்ந்திருந்தது. மக்கள் நடமாட்டமே இல்லை. அப்படி யாராவது வந்தாலும் அந்தக் கும்மிருட்டில் சேந்து கயிற்றுடன் வரும் அவரைக் கண்டுகொண்டிருக்க முடியாது.

குப்புசாமி பாங்கு வந்து சேர்ந்தார். அதன் இடது பக்கத்திலிருந்த சந்தில் நுழைந்தார்; வேக மாக ஒரு ஜன்னல் கம்பியைப் பிடித்து மேலேறி அந்த வளையத்தில் கயிற்றைக் கட்டித் தொங்க விட்டார். பாங்கிக் கட்டடத்தில் ஒவ்வொரு பாகமும் அவருக்கு நன்கு தெரியுமாதலால் அந்த மையிருளிலும் இது அவருக்கு எளிதாக முடிந்து விட்டது. பிறகு கீழே இறங்கி யாராவது வருகிறார் களா என்று கவனித்துப் பார்த்தார்; ஒருவரையும் காணவில்லை. சந்தின் ஒருபுறமாகக் கொஞ்ச தூரம் சென்று உற்றுக் கேட்டார். தூரத்தில் யாரோ வருவதுபோல் திப் திப் என்று அரவம் கேட்டது. நன்கு காது கொடுத்துக் கேட்டார். அவர் நெஞ்சு அடித்துக்கொள்ளும் ஒலிதான் அது என்று தெரிந்தது! அதனால் திரும்பிக் கயிற்றை நோக்கி வேகமாக நடக்கலானார்.

மறுபடியும் பக்கத்தில் காலடி கேட்பதுபோல் அவருக்குப் பட்டது; வேகமாக ஓடலானார். இருட் டில் ஒன்றும் தெரியவேயில்லை. கயிற்றை அணுகி விட்டார். இனித் தாமதிக்கலாகாது என்று அவசரம் அவசரமாக அதைத் தேடிப் பிடிக்கப் போனார். அப் போதுதான் அவர் தடாலென்று முன்னால் வந்து கொண்டிருந்த ஒருவர்மீது மோதி விழுந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு புரண்டார்கள். இருவரும் அச்சத்தால் ஒருவரை ஒருவர் விடாது கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள். இப்படி மௌனமாகக் கொஞ்ச நேரம் விடாப்பிடியில் கழிந்தது. எதிரில் வந்து மோதிய பேர்வழி கொஞ்சம் சமாளித்துத் தைரியத் தைக் கையில் பிடித்துக்கொண்டு தமது கையில் இருந்த டார்ச் விளக்கைப் போட்டார். போட்டது தான் தாமதம். அவர் வாயிலிருந்து, "என்ன குப்பு

சாமியா?" என்ற கேள்வி அவரையும் அறியாது ஆச்சரியத்துடன் பிறந்தது.

வந்தவர் பாங்கிச் செட்டியார்தாம்! அவர் குரல் என்று நன்கு தெரிந்த பிறகே குப்புசாமி கண்ணைத் திறந்து பார்த்தார். ஆனால் இன்னும் அவரைப் பிடித்திருந்த பிடியை மட்டும் விடவில்லை.

"ஆமாம் நான்தான்" என்று குழறிக்கொண்டே பதிலுரைத்தார் குப்புசாமி.

அவரையும் தொங்கிக்கொண்டிருந்த கயிற்றையும் செட்டியார் மாறி மாறிப் பார்த்துவிட்டு, "இங்கே எதற்காக வந்தீர்?" என்று கேட்டார் செட்டியார்.

"இந்த இடந்தான் வசதி என்று எனக்குப் பட்டது."

"எனக்கும் அதே சந்தேகந்தான்; விளக்கணைப்பைப் பயன்படுத்திக்கொண்டு யாரோ திருடர்கள் இந்தப் பக்கம் நடமாடுவதாக நான் கேள்விப்பட்டேன். ஊரெல்லாம் அப்படி ஒரு வதந்தி இருக்கிறது; அதனால்தான் நானும் பார்க்கலாமென்று இந்தப் பக்கம் வந்தேன்; நீங்களும் வந்திருக்கிறீர்கள். நல்ல வேளையாகப் போச்சு. இதோ எவனோ உள்ளே இறங்குவதற்காகக் கயிற்றைக் கட்டியிருக்கிறான் பார்த்தீர்களா?"

"என்னமோ அப்படி ஏற்பட்டுவிட்டது; மன்னிக்கவேணும்" என்று தடுமாறினார் குப்புசாமி.

"மன்னிக்கிறதற்கு இங்கே என்ன இருக்கிறது? நான்தான் உங்கள்மேல் விழுந்து மோதியதற்காக மன்னிப்புக் கேட்கவேணும். குமாஸ்தாவாக இருந்

தானும் உங்கள் சொத்துப் போலக் கவனித்துக் கொள்ளுகிறீர்களே! இரவில் என்னிடங்கூடச் சொல்லாமல் இப்படி வந்து பார்த்திருக்கிறீர்களே; ரொம்ப மகிழ்ச்சி. நீங்கள் வந்திராவிட்டால் நிச்சயம் இன்று திருடன் உள்ளே புகுந்திருப்பான்."

"நான் வேண்டுமானால் வேறு பக்கம் வேலை தேடிக் கொள்ளுகிறேன். எனது குடும்பத்தை நீங்களே காப்பாற்ற வேண்டும்."

"குப்புசாமி, ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? திருடர்களுக்குப் பயந்து பாங்கியை மூடிவிடுவேன் என்று நினைக்கிறீர்களா? இல்லவே இல்லை. உங்களைப்போல் குமாஸ்தாக்கள் இருக்கும்போது எனக்கு என்ன கவலை? ஒன்றும் கவலைப்படாதீர்கள். நீங்கள் எடுத்துக் கொண்ட சிரமத்திற்காக 500 ரூபாய் இனும் கொடுக்கலாமென்று நினைத்திருக்கிறேன். நாளைக்குக் காலையிலேயே அதைப் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் நான் உங்களுக்குச் சம்பள உயர்வு செய்ய வேண்டுமென்று சில நாட்களாக எண்ணிக் கொண்டிருந்தேன். அடுத்த மாதத்திலிருந்து 75 ரூபாய் செய்துவிடுகிறேன்" என்றார் செட்டியார்.

குப்புசாமிக்கு நெடுநேரம் வரை ஒன்றும் விளங்கவே இல்லை. அப்படியே பிரமித்து நின்று கொண்டிருந்தார்.

* * *

வழுக்கைத் தலையர் இங்கே தமது கதையை நிறுத்திவிட்டார். "பிறகு அவர் தமது வாழ்க்கையில் நாணயம் தவறவே இல்லையா?" என்று கேட்டார் குட்டையர்.

"இல்லவே இல்லை. இப்பொழுது அவர் குதிரைப்பந்தயம் பார்ப்பதையே நிறுத்திவிட்டார். கடற்கரைதான் இன்று ஆனந்தமாயிருக்கிறது. ஆகா, இந்த அலைகள் அணியணியாக வருவதே குதிரைகளின் ஓட்டத்தைவிட எனக்கு இன்று அதிக இன்பம் தருகிறது" என்றார் அவர்.

# கூலிக்கார வீரப்பன்

"என்ன செய்யலாம். ஒரு சொட்டு மழை கிடையாது; ஆடு மாடுகளெல்லாம் தீவனம் இல்லாமல் வயிறு காய்ந்து கிடக்கின்றன" என்றார் முத்துசாமிக் கவுண்டர்.

முத்துசாமிக் கவுண்டர் நல்ல கட்டான உடம்புள்ளவர். எண்ணெய் பூசிப் பளபளப்புச் செய்தது போன்ற கருப்பு நிறமும். முன்னால் சற்று தள்ளிக் கொண்டிருக்கும் தொந்தியும், முறுக்கு மீசையும் உடையவர். அவருக்கு வயது சுமார் நாற்பது இருக்கலாம்.

"வாங்கோ பண்ணைக்காரரே, புலிக்கட்டம் ஆடலாம்; இந்தத் தொல்லைகளை யெல்லாம் நினைச்சால் தீரவா போகுது?" என்று சாவடியில் தனியாக அமர்ந்து ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருந்த வீரப்பன் அழைத்தான். அவன் முத்துசாமிக் கவுண்டரைக் கண்டதும் மெதுவாக எழுந்து நின்றான்.

வீரப்பன் இவ்வாறு கூறிப் பெருமூச்சு விட்டான். அவன் முகத்தில் ஒருவிதக் கவலை குடி கொண்டிருந்தது. அவனுக்கு வயது 65-க்குமேல் இருக்கும். சிறு வயது முதற்கொண்டே மிகுந்த உடல் உழைப்பால் வயிறு வளர்த்தவன் என்று அவனைப் பார்த்தவுடன் யாரும் அறிந்து கொள்ளலாம்.

முத்துசாமிக் கவுண்டர் தமது மேல் வேட்டியைத் திண்ணையில் போட்டு அதன்மேல், 'உஸ்'

என்று உட்கார்ந்தார். கொஞ்ச நேரம் இருவரும் மௌனமாகப் புலிக் கட்டம் ஆடினார்கள். புலிக் கட்டம் ஆடினால் மழை பெய்யும் என்பது பொதுவாக எந்தக் கிராமத்திலும் இருந்துவரும் நம்பிக்கை. ஆனால் வேட்டைக்காரன்புதூர்ச் சாவடியில் புலிக் கட்டம் ஆடப் பயன் படுத்தும் ஓடும் கல்லும்கூடத் தேய்ந்துவிட்டன. மழை ஒரு துளிகூட நிலத்தில் விழுவதாகக் காணவில்லை.

இப்பொழுது புலிக்கட்டம் ஆடும் இருவர் மனமும் ஆட்டத்தில் நாட்டங் கொள்ளவில்லை. கவுண்டர் புல் இல்லாமல் மெலியும் தம் கால் நடைகளைப் பற்றி எண்ணமிட்டுக் கொண் டிருந்தார். "வீரப்பா, எங்கே உன் மகனை இப்போது காண்பதே இல்லையே?" என்றார் பண்ணைக்காரர்.

"அவன் பூனாச்சி மலைக்குப் போயிருக்கிறா னுங்கோ. நாளெல்லாம் வேலை செஞ்சா நாலணாக் கிடைக்கிறதே கஷ்டமா இருக்குதுங்க. வண்டி ஓட்டினா, பூனாச்சி மலையிலிருந்து வெறகு ஒரு வண்டி கொண்டுவந்தா, ரெண்டு ரூபா கிடைக்குதுங்க. போயிட்டு வர ரெண்டு நாள் ஆகும். இது மூனாவது நடை போயிருக்கிறானுங்க. போயி நாலு நாளாச்சு; என்னமோ காச்சலாப் படுத்துக் கிட் டான்னு, நேத்துச் சின்னாக் கவுண்டன் அங்கிருந்து வந்தவன் சொன்னானுங்க."

இதைச் சொல்லும்போதே வீரப்பன் கண்கள் ஒளி இழந்தன. மனத்தில் அடைப்பட்டுக் கிடந்த கவலை அவன் முகத்தில் தோன்றலாயிற்று.

வேட்டைக்காரன் புதூரில் முத்துசாமிக் கவுண் டர்தாம் பெரிய செல்வந்தர். பெரியதனக்காரரும் அவரே. அவர் சிறு பையனாக இருக்கும்பொழுது

அவர் தந்தையிடம் வீரப்பன் பண்ணை ஆளாக இருந்தான். அந்தக் காலத்தில் குழந்தையாக இருந்த முத்துசாமிக் கவுண்டரிடம் அவனுக்கு அளவுகடந்த பிரியம் உண்டு. மாடுகளை ஓட்டிக்கொண்டு செல்லும் பொழுதும் மற்றச் சமயங்களிலும் அவன் அக் குழந்தையைத் தூக்கிக்கொண்டு செல்வான். ஒரு நாள் மாடு ஒன்று மிரண்டு வந்து முத்துசாமியை இடித்துத் தள்ளிவிட்டது. வீரப்பன் பாதுகாக்க ஓடிவந்ததையும், அவனை மாடு முட்டியதால் வலது கன்னம் கிழிந்துபோனதையும் முத்துசாமிக் கவுண்டர் என்றும் மறக்கவில்லை.

குழந்தை முதற்கொண்டு பழகியதால் வீரப்பன் அவரிடம் கொஞ்சம் தாராளமாக இருப்பான். மேலும் வீரப்பன் சுயேச்சையான எண்ணமுள்ளவன். கூலிக்காரனாக இருந்தாலும் பிறர் தயவையோ, தட்சண்யத்தையோ அவன் ஏற்கமாட்டான். தனது ஐம்பதாவது வயது வரையில் கவுண்டர் பண்ணையத்தில் வேலை பார்த்து வந்தான். முத்துசாமிக் கவுண்டருடைய தகப்பனார் பெருத்த குடிகாரர்; பரத்தையர் நேசர். அளவில்லாமற் குடிப்பதும், மனம் போனபடி திரிவதும் தவிர அவர் வேறு எந்தக் காரியத்தையும் கவனித்ததில்லை) நல்ல வேளையாக வீரப்பன் அவர் பண்ணையத்தில் இருந்தான். அவன் நாணயம் உள்ளவன், உண்மையாகப் பாடுபடுபவன் என்பதை அனைவரும் அறிவார்கள். வீரப்பன் மட்டும் அவர் பண்ணையத்தில் இருந்திராவிட்டால் இன்று முத்துசாமிக் கவுண்டர் அவனைப்போல் ஒரு கூலிக்காரனாகத்தான் இருக்க முடியும்.

மணி பன்னிரண்டு ஆயிற்று. மத்தியான்ன வெயிலிலிருந்து தப்புவதற்காகச் சிறுவர்கள் ஆடுகளைச் சாவடியைச் சுற்றியுள்ள வேப்பமர நிழலுக்கு

ஓட்டி வந்துகொண்டிருந்தார்கள். காய்ந்துபோன புல்லும் காணுமல், வெகு தூரம் சுற்றி யலைந்த ஆடுகள் அங்கு வந்தவுடன் சலிப்பால் உறங்கின. அவைகள் வரும் அரவம் கேட்டு வீடுகளில் அடைபட்டுக் கிடக்கும் இளங் குட்டிகள் கத்தின.

அந்தச் சமயத்தில் விறகு வண்டி ஒன்று அங்கு வந்தது. வீரப்பன் ஆவலோடு எழுந்து பார்த்தான். அவன் மகன் வேலப்பன் கண் குழிந்து, கன்னமெல்லாம் ஒட்டிப்போய் வண்டியில் அமர்ந்திருந்தான். அவன் தனது மேல் துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு இடுப்பு வேட்டியை மேலே போர்த்துக் கொண்டிருந்தான். கொண்டு போன கட்டுச் சாத முடிப்பில் பாதி அப்படியே மூலைக்குச்சியில் தொங்கிக் கொண்டிருந்தது.

"வண்டியைக் கொஞ்சம் அவுத்து விடுங்கோ" என்று அவன் மெலிந்த குரலில் சொன்னான். வண்டியை விட்டுக் கீழிறங்கவும் அவனுக்கு வலிமை இல்லை.

வீரப்பன் சிறு பையனைப்போலத் திடுதிடு வென்று ஓடி எருதுகளை அவிழ்த்துவிட்டான். எருதுகளும் கவனிப்பார் இன்மையால் வாடியிருந்தன.

வேலப்பனை அங்கிருந்தவர்கள் தூக்கிக்கொண்டு போய் வீடு சேர்த்தார்கள். காய்ச்சல் மிகுதியாலும், கட்டை வண்டியில் வந்த அலுப்பாலும் அவன் அப்படியே சோர்ந்து படுத்திருந்தான். அவன் நாக்கு உலர்ந்துபோயிருந்தது; கண்களில் மஞ்சள் படர்ந்திருந்தது.

அன்று பொழுது சாயும்வரை வேலப்பனுல் பேசக்கூட முடியவில்லை. சாயங்காலம் தனது கட்டிலுக்கருகில் கவலையோடு உட்கார்ந்திருக்கும்

தந்தையிடம் சில வார்த்தைகள் பேசினான். "தலைவலி பொறுக்க முடியவில்லை; அங்கே மலையிலே ரோட்டுப் போட்டுக்கிட்டிருக்கிற ஒட்டருக்கெல்லாம் இப்படித் தான் காய்ச்சல் வருது. தலைவலிக்கு அந்த மேஸ்திரி என்னமோ வெள்ளையா ஒரு மாத்திரையைக் கொடுத்தான். நானும் அதைத் தின்னு தண்ணி குடிச்சேன். அப்போ கொஞ்சம் தலைவலி நின்னுது" என்றான்.

வேலப்பனுக்குக் காய்ச்சல் ஒரு நாள் விட்டு ஒரு நாள் வரலாயிற்று. காய்ச்சல் வந்துவிட்டால் அவன் கண்டபடி உளறுவான். வந்து பார்த்தவர்களெல்லாம் "இது காத்துக் குணம்" என்று கூறினார்கள். "என்னமோ வயசுப் பையன் ஒண்டியாக இருட்டிலே அந்த மலைக் காட்டிலே போயிருக்கிறான்; எங்கேயோ பயந்துக்கிட்டான். வள்ளுவனைக் கூட்டிக்கிட்டுவந்து தலை சுத்திப் போட்டாத் தீர்ந்துது" என்றாள் பக்கத்து வீட்டுக் கிழவி. வீரப்பனுக்கு இந்தப் பேச்சு பெரிய ஆறுதல் அளித்தது. உடனே சென்று வள்ளுவன் ஆறுமுகனை அழைத்து வந்தான். இரண்டு கறுப்புக் கோழிக் குஞ்சு, இன்னும் அது, இது என்று நான்கு ரூபாய்க்கு வாங்கி வந்து சாந்தி கழித்தனர். வள்ளுவனுக்குக் காணிக்கை எட்டணா. "நான்கு நாளிலே பறந்து போகும்" என்று உறுதி கூறிவிட்டு அவன் சென்றுவிட்டான்.

நான்கு நாட்கள் சென்றன. வேலப்பன் மலைக் காய்ச்சலுக்குப் பலியானான். வீரப்பன் அடைந்த துயரத்திற்கு அளவேயில்லை. அந்த ஏழைக் குடும்பமே அவலம் என்னும் பெரிய கடலில் முழுகித் தவித்துக்கொண்டிருந்தது. தள்ளாத வயதில் வீரப்பன் தலையில் குடும்பத்தின் சுமை விழுந்தது. தன் மனைவி, மருமகள், இரு பேரன்மார்கள் ஆகியவர்களை அவன் காப்பாற்ற வேண்டும்.

மகன் கூலி வேலை செய்துகொண்டிருந்த காலத்தில் வீரப்பன் நான்கு ஆடுகள் வாங்கி மேய்த்துக் கொண்டிருந்தான். அவைகள் போடும் குட்டிகளை விற்று, வீட்டில் உள்ளவர்களுக்கு வேட்டி சேலைகள் வாங்கிக் கொடுப்பான். அது அக் குடும்பத்திற்கு ஒரு நல்ல வரும்படியாக இருந்தது. வேலப்பன் வாடகை வண்டி ஓட்ட விரும்பவே, அவர்கள் சேமித்து வைத்திருந்த இருநூறு ரூபாயோடு அந்த நான்கு ஆடுகளையும் விற்று ஒரு வண்டியும், இரண்டு எருதுகளும் வாங்கிவிட்டார்கள்.

இப்பொழுது வண்டி மாடுகளை விற்கவேண்டிய தாயிற்று. எருதுகள் இளைத்துப் போய்விட்டதாலும் மழையில்லாக் காலமாகையால் யாருக்கும் தேவையில்லாததாலும் அவை பாதி விலைக்குத்தான் போயின. அந்த ரூபாயில் மகனுக்கு வைத்தியம் பார்த்தது, சாந்தி கழித்தது முதலியவைகளுக்கெல்லாம் ஏற்பட்ட கடனைத் தீர்த்துவிட்டு மீதி ரூபாயைக் கொண்டு வீரப்பன் பெரிய ஆடுகளாக ஆறு ஆடுகள் வாங்கினான். சந்தையிலிருந்து அவன் ஆடுகளை ஓட்டிக் கொண்டு வருவதைப் பார்த்துக் கண்ணீர் வடிக்காதவர்கள் இல்லை. மகன் இறந்த துன்பத்தால் அவன் நூறு வயதுத் தொண்டு கிழவன்போலக் காணப் பட்டான்.

புது ஆடுகள் மிரண்டு கத்துவதைக் கேட்டுக் குடிசைக்குள் இருந்த வீரப்பனுடைய பேரன்மார்கள் மகிழ்ச்சியோடு ஓடிவந்தார்கள். "தாத்தா, ஆடு வாங்கியாந்தீங்களா? நான்தான் ஆடு மேய்ப்பேன்" என்று இருவரும் ஒரே மூச்சாகக் கூறினார்கள். ஒருவனுக்கு வயது பத்திருக்கும்; மற்றவனுக்கு ஏழு வயதிருக்கும். அவர்கள் முகம் ஆடுகளைப் பார்த்ததும் பொலிவோடு விளங்கின. பாட்டன் மனத்தில்

இருக்கும் பெருங் கவலை அவர்களுக்குத் தெரியுமா? அவர்களுடைய சிரித்த முகங்களே அக் கவலையை மாற்றும் மருந்தாக இருந்தன.

"என் சாமிகளா, எங்கூட ஆடுமேய்க்க வாறீங்களா?" என்றான் வீரப்பன்.

"ஐயா, நீங்க இங்கேயே இருங்க; அம்மா சும்மா அழுதுக்கிட்டே இருக்கிறா. நீங்க இருந்தா அழுவ மாட்டா. நாங்க போயி ஆட்டை மேய்ச்சுக்கிட்டு வாறோம்; சின்னு, நீ அந்தப் பெரிய ஆட்டுக் கிட்டப் போவாதே, முட்டிப்புடும்" என்றான் பெரியவன். இளையவனான சின்னுச்சாமி, "நம்ம வண்டி எங்கே தாத்தா? நான் வண்டி பூட்டிக்கிட்டு வெறகுகொண்டாறதுக்குப் போறேன்" என்று ஆவலோடு தனது கபடமற்ற குரலில் மொழிந்தான்.

அந்தச் சமயத்தில் முத்துசாமிக் கவுண்டர் இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டே அங்கு வந்தார். வீரப்பன் தன் கண்களில் பிதுங்கிய கண்ணீரை மறைக்க மறுபக்கம் திருப்பிக்கொண்டே எழுந்திருந்தான்.

வேலப்பன் இறந்த அன்று இழவு காண முத்து சாமிக் கவுண்டர் வந்திருந்தார். மறுபடியும் வீரப்பனைக் கண்டு பேச அவர் இன்றுதான் வந்தார். அந்த எளிய குடும்பத்திற்கு வேண்டிய உதவி செய்ய வேண்டும் என்பது அவர் ஆசை. இப்பொழுது அக் குடும்பத்தின் நிலைமை அவருக்கு ஒரு நொடியில் விளங்கிவிட்டது. தள்ளாத கிழவன் குடும்பச் சுமையை உறுதியோடு தாங்க முன் நிற்பதையும் அவர் உணர்ந்தார். அது அவருக்குப் பெரிய ஆச்சரியத்தையும், வீரப்பனிடம் மரியாதையையும் உண்டாக்கிற்று.

கொஞ்ச நேரம் அவர்கள் இருவரும் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். இடையிடையே கவுண்டர் வீரப்பனுக்கு ஆறுதலும் கூறி வந்தார். "உன்னைப் போலவே வேலப்பனும் மிகவும் நாணயமானவன். அவனைப்போல் ஆள் கிடைக்கவா போகிறது? இப்பொழுதுகூட நம் பண்ணையத்தில் ஆள்கள் இருக்கிறார்கள். கண் மறைந்தால் வேலை செய்வதே இல்லை" என்றார் முத்துசாமிக் கவுண்டர்.

"என்ன பண்ணறதுங்கோ? வேலப்பனை உங்க பண்ணையத்திலே சேர்ந்துக்கச் சொன்னேன்; அவனுக்கு வண்டி ஓட்டினா நல்ல பணம் கிடைக்குமுன்னு ஆசை. விதி ஆரை விட்டுதுங்கோ!" என்றான் வீரப்பன்.

"ஏன் வீரப்பா, இப்போ நீ நம் பண்ணையத்திற்கு வந்துவிடேன். அந்த ஆள்களை மேல் பார்வை பார்த்துக்கொள்வதற்கு ஒருவன் தேவையாக இருக்கிறது வேலை செய்ய வேணும் என்பதுகூட இல்லை" என்று மெதுவாக முத்துச்சாமிக் கவுண்டர் தமது எண்ணத்தை வெளியிடலானார். வீரப்பனுக்கு அவர் விருப்பம் வெட்ட வெளிச்சமாகத் தெரிந்துவிட்டது. மேற்பார்வைக்கு ஆள் வேண்டியதில்லை என்பதை அவன் நன்குணர்வான்.

முத்துசாமிக் கவுண்டர் சாதாரணமான நல்ல படிப்புடையவர்; அதிகமாகத் தமது ஊரைவிட்டு வெளியில் போகாவிட்டாலும், தினசரிப் பத்திரிகைகளின் மூலம் உலக விஷயங்களையும், போக்கையும் அறிந்தவர்; உழைப்பால் இழிவில்லை யென்ற கொள்கை அவர் மனத்தில் நன்கு பதிந்திருந்தது. அதனால் அவரே தமது பண்ணையத்தைச் செவ்வையாக மேற்பார்வை பார்த்து வந்தார். இந்த விஷயத்தை அறியாதவர்கள் வேட்டைக்காரன்புதூரிலேயே இல்லை.

"இல்லீங்க, நான் இந்த வயசிலே என்னத்தைப் பார்க்கப் போறனுங்க? முன்னைப்போல ஆளுகளைத் தான் அடக்கிப் பேச முடியுமுங்களா?" என்று வீரப்பன் மறுமொழி கூறினன்.

"நீ சும்மா வந்து இருந்தாலே, அதுவே ஓர் அத்தாக இருக்கும்."

முத்துசாமிக் கவுண்டர் தன்மேல் கொண்டுள்ள அன்பு வீரப்பனுக்கு நன்கு விளங்கிற்று. அத்தனை அன்பை அவன் இதுவரையில்' அறிந்ததே இல்லை. ஆனல் சும்மா சம்பளம் பெற்று வயிறு வளர்ப்பதை அவன் வெறுத்தான்.

"அதெல்லாம் நடக்குமுங்களா? என்னமோ நாலு ஆட்டை மேய்ச்சா, அது நாலு குட்டி போட்டா, நாலு பணங் கிடைக்காதெயா போகும்? மருமக வேறே கூலிக்குப் போறமுங்களு. நாள் ஒண்ணுக்கு ரெண்டணவுக்கு மோசமில்லீங்க; ஊட்டுக்காரி கையாலே ஆவாதுங்க;அவ என்னமோ நூல் நூக்கிறுளுங்களாம்! சின்ன வயசிலே நூத்துக் கிட்டு இருந்தா. இப்போ இந்தக் காந்தி வந்ததுக் கப்புறம், அல்லாரும் அதைத்தானுங்க வாங்க ருங்களே? ஏதோ குடும்பத்தைத் தாட்டப் போது முங்க, பகவான் புண்ணியத்திலே" என்று தனது உட்கருத்தை வீரப்பன் வெளியிட்டான்.

முத்துசாமிக் கவுண்டருக்கு அதற்கு மேல் ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. தமது எண்ணத்தை வீரப்பன் அறிந்துகொண்டதையும் அவர் உணர்ந்தார். பிறகு அவனிடம் சொல்லிக்கொண்டு, ஆழ்ந்த யோசனையோடு தமது தோட்டத்திற்குச் சென்றுர்.

"வீரப்பன் மட்டும் நமது பண்ணையத்தில் இருந் திராவிட்டால், இன்று இத்தனை காடும், தோட்ட

மும், ஆடு மாடுகளும் ஏது? அவன்தானே இவற்றிற் கெல்லாம் காரணம்? பூமி என் தந்தைக்கு இருந்தது. ஆனால், வீரப்பனுடைய உண்மையான உழைப்பு இல்லாவிடில், நான் இன்று கட்டவும் துணி யில்லாமல், திண்டாடிக்கொண்டுதானே இருக்க வேண்டும்? இத்தனை சொத்துக்கும் என்னைவிட அவ னுக்குத்தானே அதிக உரிமை இருக்கிறது? கடவுள் முன்னிலையில் அவன்தான் உண்மையான வாரிசு தாரனாக இருப்பான். ஆனால், இன்று அவன் செய்த வேலைக்காக மாதம் பத்து ரூபாய் பெற்றுக்கொள் என்றால், அவன் அதை மறுக்கிறான். தனது விதி அவ் வளவுதான் என்று திருப்தியோடிருக்கிறான்" என்று பலவிதமாக முத்துசாமிக் கவுண்டர் எண்ணமிட்டுக் கொண்டிருந்தார். அவரது கண் முன்பு தோன்று வனவெல்லாம் வீரப்பனுடைய உழைப்பால் உருப் பட்டவைகளாகவே அவருக்குப் பட்டன. அவ ருடைய கண்களிலிருந்து அவரை அறியாமல் நீர்த் துளிகள் பொட்டுப் பொட்டாக விழலாயின.

# சின்னான்

அவன் ஒரு சக்கிலிப் பையன்; பன்னிரண்டு வயதிருக்கும். பெரியநாயக்கன்பாளையத்தில் ஒரு பண்ணையில் மாடு மேய்ப்பது அவன் வேலை.

சின்னானுடைய இளைய உள்ளத்தில் இரண்டு ஆசைகள் குடிகொண்டிருந்தன. ரயில் ஏறுவது ஒன்று; கோயம்புத்தூர் சென்று சினிமாப் பார்ப்பது மற்றொன்று.

அவன் மாடுகளை மேய்த்து வந்த புலம் ரயில் பாதையை அடுத்திருந்தது; அதுவே அவன் முதல் ஆசைக்குக் காரணம். சின்னான் அதிகாலையில் சாணி யெடுத்துத் தொழுவத்தைச் சுத்தம் செய்து விடுவான். அதற்குப் பிறகு பண்ணாடி வந்து பால் கறந்து கொண்டு போவார். உடனே அவன் மாடுகளை ஓட்டிக்கொண்டு மேய்க்கச் செல்லு வான். பொழுது சாயும் வரையில் அவன் மாடு களோடு காட்டிலேயே இருப்பான். ரயில்கள் வந்து கொண்டும் போய்க்கொண்டும் இருக்கும். அவற் றைச் சின்னான் ஆவலோடு பார்ப்பான். எஞ்சின் புகை விடும்போது அவனும் குப் குப் என்று சொல்லிக்கொண்டு கைகளை முன்னும் பின்னும் ஆட்டிக்கொண்டு ஓடத் தொடங்கி விடுவான். நீலகிரி எக்ஸ்பிரஸைக் கவனித்துக் கொண்டிருப்பதில் அவனுக்கு அலாதியான ஆசை உண்டு. அந்த ரயில் பூதம்போல வருவதைக் கண்டு அவன் குதித்துக் கூத்தாடுவான்; ஒவ்வொரு சமயம் இமை கொட் டாமல் பார்த்து ரயிலருகே நின்றுகொண் டிருப்பான்.

இந்த ஆசையால் அவன் எப்படியாவது ரயிலில் பிரயாணம் செய்துவிட வேண்டுமென்று நினைத்தான். ஆனால் என்ன செய்வான் பாவம்! பணம் வேண்டுமே! (அவனுக்கு மாதம் பத்து வள்ளம் தானியம் கூலியாகக் கிடைத்தது. அது நேராகக் குடிசைக்குப் போய்ச் சேரவேண்டும். இல்லாவிட்டால் இப்பொழுது கிடைக்கும் அரைக் கஞ்சிக்கும் திண்டாட்டம் வந்துவிடும்.) அதோடு அவன்மேல் ஈடாக 30 ரூபாய் பண்ணைக்காரரிடம் கடன் வாங்கியிருக்கிறார்கள். அதைத் தீர்த்த பிறகே அவனுக்கு விடுதலை கிடைத்து நாலு காசு சம்பாதிக்க வழி பிறக்கும்; அந்த நிலைமை நான்கைந்து ஆண்டுகளிலாவது வரும் என்று நினைக்க எவ்வித நம்பிக்கையும் இப்பதாகக் காணவில்லை.

சின்னான் ரயிலில் போகிறவர்களை யெல்லாம் பொறாமையோடு நோக்குவான். எத்தனை பேர் எத்தனை கவலைகளோடு பிரயாணம் செய்கிறார்களோ! மேட்டுப்பாளையத்து உருளைக்கிழங்கு விற்கும் ராமாயி தன் மகன் இறந்து போனதைக் குறித்து வண்டியில் உள்ள மற்றப் பிரயாணிகளையும் பொருட்படுத்தாமல் அலறிக்கொண்டு போவாள். காரமடை ரங்கப்பன் அன்று கோர்ட்டில் வழக்குத் தோற்றுப் போனதைப்பற்றி அங்கலாய்த்துக் கொண்டு போவான். "ஐயா, சிறு பெண்; ஏழையென்றால் மனமிரங்காதா?" என்று ஒருத்தி பாட்டுப் பாடிக் காசுக்குக் கெஞ்சிக்கொண்டிருப்பாள். ஆனால் அவர்கள் எல்லோரும் பெரிய அதிருஷ்டக்காரர்களாகவே சின்னானுக்குத் தோன்றுவார்கள்.

அவனுக்குச் சினிமா ஆசையை உண்டாக்கியவன் காளியண்ணன். அவன் குறும்ப சாதிப் பையன். பக்கத்துக் காட்டில் மாடு மேய்த்துக்கொண்டிருந்தான். அதனால் இருவரும் சேர்ந்து விளையாடுவ

பி. வ.—8

துண்டு. ஒரு நாள் காளியண்ணனைப் பண்ணைக்காரன் அடித்தான். வழக்கத்துக்கு மாருக அன்று அடி பலமாகையால் காளியண்ணன்கோபித்துக்கொண்டு எங்கேயோ ஓடிப் போய்விட்டான். இப்பொழுது அவன் கோயம்புத்தூர் ரயில் சந்திப்புக்கு வெளியே சாமான் தூக்கிக் கூலி, சம்பாதித்துக்கொண்டிருக்கிருன். உணவுக்குப் போக மீதி கிடைத்த காசுக்குச் சாயா குடிப்பான்; இரவிலே சினிமாவுக்குப் போகத் தவறமாட்டான்.

அவன் ரகசியமாக எப்பொழுதாவது சின்னுனைப் பார்க்க வந்துவிடுவான். கோயம்புத்தூரிலிருந்து பெரியநாயக்கன்பாளையம் நான்காவது ரயில் நிலையம்; பதிஞெரு மைல் தொலைவில் உள்ளது. காளியண்ணன் டிக்கட் வாங்குகிற பேச்சே கிடையாது. யாருடைய மூட்டையையாவது தூக்கிக் கொண்டு, "ஸார், உள்ளே கொண்டு போய் வைத்து விட்டு வருகிறேன்" என்று புகுந்துவிடுவான். பெரிய நாயக்கன்பாளையம் வந்ததும் பழைய மாடு மேய்க்கி ஆகிவிடுவான். அவனை யாரும் டிக்கட் கேட்க மாட்டார்கள்.

காளியண்ணன் ஒவ்வொரு தடவையும் சினிமாவைப்பற்றிச் சொல்லுவதையெல்லாம் கேட்கக் கேட்கச் சின்னுனுக்கு ஆவல் பொங்கி வரும். ஆனால் அதைத் தணிக்கத்தான் அவனுக்கு வழி கிடைக்கவில்லை.

ஒரு நாள் சின்னுனுடைய ஆசை அவனையும் மீறி விட்டது. எப்படியும் மறுநாள் கோழி கூப்பிடும் வேளையில் செல்லும் ரயிலில் யாரும் அறியாமல் ஏறி விடுவதென்று முடிவு செய்துவிட்டான். கோவையிலே காளியண்ணன் இருக்கிருன்; அவனோடு சேர்ந்து கொண்டு சினிமாப் போக முடியாதா என்ன?

தான் ரயில் சந்திப்பிலேயே இருப்பதாகச் சொல்லியிருக்கிறானே. ரயிலிலும் ஏறிவிடலாம்; சினிமாவும் பார்த்துவிடலாம். காசே வேண்டியதில்லை. அடடா, இந்த யோசனை இத்தனை நாள் தெரியாமல் போய் விட்டதே!

இருட்டாக இருந்ததால் மறுநாள் காலையில் சின்னான் பதுங்கிப் பதுங்கி ரயிலில் ஏறுவதை யாரும் கவனிக்கவில்லை. இருந்தாலும் அவன் மார்பு படபட வென்று அடித்துக்கொண்டது; ஆனால் ரயில் நகரத் தொடங்கவே அவனுக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது. கோயம்புத்தூர் பார்ப்பது, சினிமாப் பார்ப்பது என்று அவன் கனவு கண்டுகொண்டே கதவருகில் கீழே உட்கார்ந்திருந்தான். சோறே வேண்டியதில்லை; ஒரு நாள் பட்டினி கிடக்க முடியாதா? எத்தனையோ நாள் கஞ்சியும் இல்லாமலிருந்து அவனுக்குப் பழக்கமுண்டு; அது சேரியில் பல நாள் நடைமுறைதானே?

சின்னானுக்குக் கொஞ்சங் கொஞ்சமாகத் தைரியம் அதிகமாயிற்று. எழுந்து ஜன்னலின் வழியே எட்டிப் பார்த்தான். ரயிலின் வேகம் அவனுக்கு மிகுந்த உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்கியது. அவனுக்கு ரயில் நிலத்தில் போவதாகவே தோன்றவில்லை. வானத்தில் பறப்பது போலவே தென்பட்டது; ஆகா எவ்வளவு பேரின்பம்!

ஆனால் இந்த இன்பம் நெடுநேரம் நீடிக்கவில்லை. துடியலூரில் ரயில் நின்று புறப்படும்போது ஒரு டிக்கட் பரிசோதகன் சின்னான் இருந்த வண்டியிலேயே ஏறிவிட்டான். அவனுக்குச் சின்னானுடைய நீண்ட நாள் ஆசையெல்லாம் என்ன தெரியும்? "ஏண்டா திருட்டுப் பயலே, எங்கேடா போறே?" என்று கன்னத்திலே பளார் என்று இரண்டு கொடுத்

தான். அதோடு விட்டிருந்தால்கூடச் சின்னான் கவலைப்பட்டிருக்க மாட்டான். இந்த அறையெல் லாம் எதற்கு ஈடு? பண்ணாடி கைத்தடிக்கு மீறியதா இது?

சின்னான் கோயம்புத்தூரில் இறங்க விரும்பு கிறான் என்று தெரிந்த அந்த டிக்கட் பரிசோதகன் அவனுக்குப் புத்தி புகட்ட அன்று ஒரு புது வழியைக் கண்டுபிடித்தான். அவனை அங்கே இறங்கவிடாமல் சிங்காநல்லூர் வரையில் ரயிலிலேயே இருக்கச் செய்து அங்கே கொண்டுபோய் மறுபடியும் ஓர் அறை கொடுத்து, "ஓடிப்போ" என்று துரத்தி விட்டான்.

சின்னானுக்குப் பெரியநாயக்கன்பாளையம் தவிர வேறு ஓர் இடமும் தெரியாது. அதனால் அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல் இருந்தது. பாவம்! கோயம்புத்தூருக்குப் பக்கத்தில்தான் ஆறு மைலுக் குள் இருக்கிற விஷயம் அவன் அறியான். ஏக்கத் தோடு கால் சென்ற வழியே போகலானான். ஊருக்கு எப்படிப் போய்ச் சேருவது? அங்கே போனால் வீட்டில் வேறு உதை கிடைக்கும். அப்புறம் பண்ணாடி கைத்தடி வேறு இருக்கிறது; வீட்டில் எப்படியாவது தப்பினாலும் அதற்குத் தப்ப முடியாது. முதலில், போய்ச் சேருவது எப்படி? அங்கிருந்து எந்தத் திசையில் பெரியநாயக்கன்பாளையம் இருக்கிறதோ? வழியில் போகிறவர்களைக் கேட்கவும் அச்சமாக இருந்தது அவனுக்கு! அவன் மனம் கலங்கிவிட்டது. வயிறும் வாடத் தொடங்கிவிட்டது; அத்தனை துன்பத்திற்கும் மேலே இனிமாப் பார்க்கவும் முடியா தென்ற ஏக்கம் ஒரு பக்கம். எப்படியோ அடிபட்டா லும் ரயில் ஏறியாகிவிட்டது; அந்த ஆசை தீர்ந்தது. ஒரு நாள் ரயிலில் போகிறமாதிரிதானே

தினமும் போனாலும் இருக்கும்? சினிமாப் பார்க்கும் ஆசையும் நிறைவேறிவிட்டால் போதும்; ஒரு நாள் பார்த்தாலும் போதும்.

சின்னனுக்குத் துக்கம் பீறிக்கொண்டு வந்தது. அவனால் அழுகையை அடக்கவே முடியவில்லை. எப்படியாவது ஊர் போய்ச் சேரவேண்டுமே.

இந்தச் சமயத்தில்தான் அவன் காங்கேயம் காளை இரண்டையும் யாரோ பிடித்துக்கொண்டு போவதைக் கண்டான். அந்தக் காளைகளை அவன் வெகுநாள் மேய்த்திருக்கிறான். அதனால் நிச்சயமாக அவற்றைத் தெரியும். ஆமாம், அவைகளேதாம். 'யார் பிடித்துக்கொண்டு போவது? யாரோ புது ஆளாக இருக்கிறதே! இவனுக்கு எப்படி இந்தக் காளைகள் கிடைத்தன? பண்ணாடி கண்டிப்பாக அவற்றை விற்கப் போவதில்லையென்று சொல்லி யிருக்கிறாரே? ஓகோ, இவன் யாரோ திருடிக்கொண்டு போகிறவன்போல் இருக்கிறது.'

சின்னன் கூவிக்கொண்டு அந்த மனிதனை அணுகினான். "யாரது, சாமி, எங்கே எங்க பண்ணாடி காளைகளைப் பிடிச்சுக்கிட்டு வந்துட்டீங்க?" அந்த மனிதன் முதலில் திடுக்கிட்டுப் போனான். பிறகு சமாளித்துக்கொண்டு, "ஏண்டா சக்கிலிப் பயலே, எதடா உங்க பண்ணாடி காளை? ரொம்பத் திமிரா உனக்கு?" என்று அதட்டிக்கொண்டு வேகமாக நடக்கலானான். ஆனால் சின்னன் அவனை விடாமல் பின் தொடர்ந்து கூவிக்கொண்டே போனான். அதனால் அவனுக்கு இன்னும் இரண்டு அறை விழுந்தன. அதை அவன் பொருட்படுத்தாமல் தேம்பிக்கொண்டே மேலும் உரத்துக் கூவினான்.

அது ஒரு போலீஸ்காரன் காதில் விழவே, அவன் வந்து விசாரிக்கலானான். பையன் பிடிவாதமாகக்

காளை தன் பண்ணுடிக்குச் சொந்தம் என்றுன். அந்த மனிதனே தன்னுடையது என்றுன். போலீஸ்கார னுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பையன் எதற்காகப் பொய் சொல்ல வேண்டும்? ஆனல் இந்த ஆளைத் திருடன் என்று எப்படி நினைப்பது? எதற்கும் பையனை மிரட்டிப் பார்க்கலாம் என்று போலீஸ்காரன், "பையா, பொய்யா சொல்றே" என்று ஓர் அறை ஓங்கி விட்டான். சின்னுன் கன்னத் தைத் துடைத்துக்கொண்டே, "சத்தியமா எங்க பண்ணுடிகாளை இந்தரெண்டும்: நான்தான் நேத்துக் கூட மேச்சேன்" என்று அழுத்தமாக விக்கலுக் கிடையே கூறினுன்.

இதைக் கேட்டதும் போலீஸசுக்கு அந்த மனிதன் மேல் சந்தேகம் உறுதியாகிவிட்டது. அதனல் அந்த ஆளையும், சின்னுனையும் காளை களோடு போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச்சென்று காவலில் வைத்தான். திருட்டு உண்மையானல் சொந்தக்காரன் தேடிக்கொண்டு போலீஸ் நிலையத் திற்கு வராமலா போவான்?

இரண்டு மணிநேரங்கூட ஆகவில்லை. பெரிய நாயக்கன்பாளையத்திலிருந்து பண்ணுடி ஒரு குதிரை வண்டியில் வந்து இறங்கினுர். காளைகளை போலீஸ் நிலையத்தில் கண்டதும் அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச் சிக்கு அளவேயில்லை. திருட்டு ருசுவாகிவிட்டது. இரவில் வந்து காளைகளைத் திருடிக்கொண்டு அந்த ஆள் சந்தையில் விற்க வந்திருக்கிறுன்.

பண்ணுடிக்குச் சின்னுன்மேல் என்றுமில்லாத அன்பு பிறந்துவிட்டது. அவன் ஏன் அங்கு வந்தான், எப்படி வந்தான் என்பதைப் பற்றியெல்லாம் அவர் கவலை கொள்ளவே இல்லை.

"சின்னுன், நீ ரொம்பக் கெட்டிக்காரண்டா. உனக்கு என்ன வேணும் சொல்,"

"சாமி, கோயம்புத்தூருக்குப் போய்ச் சினிமாப் பார்க்க வேணும்."

"இவ்வளவுதானு? இந்தா பணம். இனிமேல் மூணு மாசத்துக்கு ஒரு தடவை உனக்குச் சினிமாப் பார்க்கக் காசு கொடுக்கிறேன். கோயம்புத்தூருக்கு போகப் பணமும் கொடுக்கிறேன்" என்ருர்.

சின்னனுக்கு அத்தனை அறைகளும் வயிற்றுப் பசியும் எங்கேயோ மறைந்துவிட்டன.

# பண்ணையாள்

சின்னப்பன் ஓர் ஏழைக் கிழவியின் ஒரே மகன். தாயும் பிள்ளையும் கரட்டுப்பாளையத்தில் சிறிய குடிசை ஒன்றில் வசித்துவந்தார்கள். மகன் ஒரு பண்ணையில் வேலை செய்துவந்தான், மாதம் ஐம்பது ரூபாய் சம்பளம், அதை வைத்துக்கொண்டுதான் அவர்கள் இருவரும் காலந்தள்ள வேண்டும். மற்றப் படி தாய்க்கு மகன்தான் சொத்து; மகனுக்குத்தாய் தான் சொத்து.

தாய் தன் மகனை அன்புடன் வளர்த்துவந்தாள். ஒரு வேளை கஞ்சி குடித்தும் குடியாமலும் அவள் மகனைப் பேணி வந்தாள். பையனுக்கு உடுக்க மட்டும் இரண்டு துண்டுகள் உண்டு. அவன் உடம்போ அவன் வாழ்ந்த பன்னிரண்டு ஆண்டுகளில் ஒரு நாளாவது ஆடை பட்டு அறி யாது. ஆனால் தாயும் மகனும் எளிமையிலும் நிம்மதி யாக வாழ்ந்து வந்தார்கள்.

சின்னப்பனுக்குப் பண்ணைக்காரரின் மாடுகளை மேய்ப்பதுதான் வேலை. பகல் முழுவதும் மாடு களோடு திரிவான். அது அவனுக்குஒரு விளையாட்டு. மாடுகளென்றால் அவனுக்கு மிகுந்த ஆசை. அவன் ஓர் இளங் காளையைத் தன் உயிராகப் பாவித்து வந்தான். அது பருத்துப் பார்ப்போர் கண்களைக் கவரும் கம்பீரம் உள்ளதாயிருந்தது. அதற்குக் கூர்மையான இரு கொம்புகள் உண்டு. அதனால் சின்னப்பன் அதை 'ஈட்டிக் கொம்பன்' என்று செல்லப் பெயரிட்டுக் கூப்பிடுவான். அதன் மேல் ஈ

உட்காரக் கூடாது. அது 'மா' என்று கத்தினால் தன்னைத்தான் கூப்பிடுகிறது என்று அவன் ஓடுவான்.

பொழுது விழ விழச் சின்னப்பன் தொழுவத்திற்கு மாடுகளை ஓட்டிக்கொண்டு வந்து அடைத்து விட்டு வீட்டிற்குப் போவான். இரவு சாப்பிட்டவுடன் அவன் தன் தாயோடு ஒரு கயிற்றுக் கட்டிலில் வெளி வாசலிற் படுத்துக்கொள்வது வழக்கம். தாய் கதை சொல்லுவாள். அதைக் கேட்டுக்கொண்டே சிறுவன் தூங்கிவிடுவான். தூக்கத்தில், "டே, சட்டி கொம்பா! கும்மாளம் அடிக்கிறாயா?" என்பான். கிழவி புன்சிரிப்போடு அவனுக்கு ஒரு முத்தம் அளித்துவிட்டுத் தானும் உறங்கிவிடுவாள். வானில் மின்னும் தாரகைகள் தாம் அவர்களைக் காத்துக் கொண்டிருப்பவை போலத் தோன்றும்.

இவர்கள் வாழ்க்கை இவ்விதமாக ஒருவித மாறுதலும் இல்லாமல் ஆண்டு முழுவதும் போய்க் கொண்டிருக்கும். ஆனால் கார்த்திகை பிறந்து விட்டால் சின்னப்பனுக்கு அவன் வாழ்வில் இன்பமான மாறுதல் உண்டு. அந்த மாதத்தில்தான் கரட்டுப்பாளையத்து மாரியம்மனுக்குப் பொங்கல், தேர், திருவிழா எல்லாம். மாரியம்மன் பொங்கலென்றால் கரட்டுப் பாளையத்திற்கு ஒரு பெரிய கொண்டாட்டம். புதிய மாப்பிள்ளைகள், பழைய மாப்பிள்ளைகள், பந்துக்கள் எல்லோரும் அங்கு இரண்டு நாள் முன்னதாகவே வந்து கூடிவிடுவார்கள். பொங்கலன்று எங்கே பார்த்தாலும் புது வேட்டிகள், தீபாவளிக்கு எடுத்துக் கொடுத்த சிவப்புப் பட்டுச் சேலைகள், பச்சை மேலங்கிகள், மேகவர்ணப் புடவைகள், வானவில்லிலும் அதிக நிற வேறுபாடுகளுடைய சிற்றாடைகள், இவைகளோடு நகைகள் எல்லாம் தலைமயங்கிக் கோயிலிலும் தேர்க் கடைகளிலும் மின்னும். மாமன்மார்

களும், அம்மாயிமார்களும் கொடுத்த 'தேர்க்காசு' கொண்டு சிறுவர்கள் வாங்கிய 'சீக்கி', புல்லாங்குழல் ஓசை ஊர் முழுதும் கேட்கும்.

சின்னப்பனுக்குக் காசு கொடுக்க வேறு நெருங்கிய உறவினர்கள் இல்லை; அவன் தாய்தான் பொங்கலன்று இரண்டணாக் கொடுப்பாள். அதைஎடுத்துக் கொண்டு அவன் தேர்க் கடையெல்லாம் சுற்றி வேடிக்கை பார்த்துவிட்டுக் கடைசியில் தனக்கு விருப்பமான பொருளை வாங்கிக்கொள்ளுவான். ஒவ்வொரு திருவிழாவிலும் என்ன என்ன வாங்குவதென்று அவன் நெடுநாள் எண்ணி எண்ணிக் கனவு கண்டுகொண்டிருப்பான்.

அவன் ஈட்டிக் கொம்பனை அருமையாக வளர்த்து வந்த அந்த ஆண்டிலும் வழக்கம்போல் கார்த்திகையில் மாரியம்மன் பொங்கல் வந்தது. அதில் என்ன வாங்குவதென்பதில் அவனுக்கு இரண்டுபட்ட எண்ணமே உண்டாகவில்லை. ஒரே ஆசைதான் அவன் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. அதையும் நிறைவேற்றிக் கொள்ளும் காலம் நெருங்க நெருங்க அவனுக்கு உண்டான குதூகலத்திற்கு எல்லையே இல்லை.

சின்னப்பனுக்கு அவன் தாய் பொங்கலன்று வழக்கம்போல இரண்டணாக் கொடுத்தாள்.

"அம்மா, இன்னும் இரண்டணாக் கொடு" என்றான் பையன்.

எதிர்பாராத இந்த வேண்டுகோள் தாய்க்கு முதலில் ஆச்சரியத்தை உண்டுபண்ணியது.

"எதுக்கு நாலணா; ரெண்டணாப் பத்தாதா?"

"பத்தாதம்மா; நாலணா வேணும்."

"சும்மா செலவு பண்ணப் பணமேது? போதும் போ."

"அம்மா, இந்தத் தடவை மாத்திரம் கொடு. அடுத்த பொங்கலுக்கு எனக்கு ஒரு காசுகூட வேண்டாம். அதையும் சேர்த்து இப்பவே கொடும்மா."

அவனுடைய கெஞ்சிய குரல் தாயின் உள்ளத்தைக் கவ்விவிட்டது.

"என்னமோ ஆசையாக் கேக்கருன்; வெத்திலே பாக்குக்கு எடுத்து வச்சதைக் கொடுத்தாப் போகிறது. கொஞ்ச நாளைக்கு வெத்திலே இல்லாட்டி என்ன கெட்டுப்போகும்?" என்று இவ்வாறு யோசித்துக்கொண்டே அவள்மேலும் இரண்டணுக் கொடுத்து விட்டாள்.

சின்னப்பனுக்கு உண்டான இன்ப உணர்ச்சி சொல்லி முடியாது. அவன் அந்தப் பணத்தைக் கொண்டு தனக்காக ஒன்றும் வாங்கிக்கொள்ள நினைக்கவில்லை. தேர்க்கடைக்குச் சென்று சிறிய மணி ஒன்று வாங்கி ஈட்டிக் கொம்பனுக்குக் கட்டி விட்டான். அவனுக்கு அப்பொழுது ஒரே குதூகலம். அவனுடைய நெடுநாள் ஆசை நிறைவேறிவிட்டதல்லவா? மகிழ்ச்சியால் ஈட்டிக் கொம்பனைக் கட்டி அணைத்துக்கொண்டு ஒரு முத்தம் கொடுத்தான்.

மறுநாள் வழக்கம்போல் சின்னப்பன் மாடுகளை ஓட்டிக்கொண்டு மேய்ச்சல் நிலத்திற்குச் சென்றுன். புதிதாக மணி கட்டியிருப்பதால் ஈட்டிக் கொம்பன் வாலைத் தூக்கிக்கொண்டு மிரண்டு ஓடிற்று. ஓடவே மணியும் ஓங்கி ஒலித்தது. அதனுல் அது சின்னப்பன் கைக்குச் சிக்காமல் எங்கேயோ ஓடிவிட்டது. சின்னப்பன் பெரிதும் கவலையடைந்தான். பகல்

முழுதும் அங்கும் இங்கும் அலைந்தான்; தேடாத இட மெல்லாம் தேடினான். ஆனால் காளையைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இருட்டானதும் காளை தானா கவே தொழுவதற்கு வந்துவிடுமென்று எதிர்பார்த் தான். ஆனால் மறுநாளும் அது வரவில்லை.

பண்ணைக்காரர் ரங்கசாமிக் கவுண்டருக்குக் கோபம் வந்துவிட்டது. அவருக்குச் சின்னப்பன் மணி வாங்கிக் கட்டியதெல்லாம் தெரியாது. "மாடு களை விட்டு விட்டு உனக்குத் தேர்க்கடையில் என்ன சோலி? அங்கே சுற்றிக்கொண்டிருந்திருப்பாய்; அது தான் காளை எங்கேயோ போய்விட்டது" என்று இரண்டு அறை பளார் பளார் என்று சின்னப்பன் கன்னத்தில் அறைந்தார். "காளை வந்து சேரா விட்டால் தோலை உரித்து விடுவேன் ஜாக்கிரதை; போய்த் தேடி எப்படியாவது பிடித்துக் கொண்டு வா. ஓடு" என்று கர்ஜித்தார்.

சின்னப்பன் தேம்பிக்கொண்டே வீட்டை நோக்கி நடந்தான். ஈட்டிக் கொம்பனைக் காணாத விசனம் ஒரு பக்கம்; தான் எவ்வளவு ஒழுங்காக வேலை செய்து வந்திருந்தும் பண்ணைக்காரர் அடித் தாரே என்ற வருத்தம் மற்றொரு பக்கம். அப் பொழுதான் அவனுக்கு, 'என்ன இருந்தாலும் நான் ஒரு பண்ணையாள்தானே? ஐந்து ரூபாய்க் காசுக்காக வேலை செய்பவன்தானே?' என்ற எண்ணம் உதித் தது. 'ஈட்டிக் கொம்பன் நல்ல காளையாகப் பருத்து வளர்வதற்கு நானல்லவா காரணம்? நான் எவ்வளவு பிரியமாக அதை மேய்த்து வந்தேன் என்று கொஞ்ச மாவது நினைத்துப் பார்த்தாரா? அது போய்விட்ட தென்று எனக்கு அடிதான் கிடைத்தது. காளை வந்து சேராவிட்டால் ஊரிலேயே இருக்க விடமாட்டா ராம். தோலை உரித்து விடுவாராம். இதென்ன

நியாயம்?' எனப் பலவாறு நினைத்துப் பெருமூச்சு விட்டான். அவன் கண்களிலிருந்து முத்துப் போன்ற நீர்த்துளிகள் சிந்தின.

இதற்குள் அவன் தன் குடிசைக்குப் பக்கத்தில் வந்துவிட்டான். கண்ணீரினிடையே அந்தப் பழங் குடிசை மங்கிப் பன்மடங்கு மோசமாகத் தோன்றியது. 'அம்மா இதைக் கேட்டால் அழுவாளே; அவளிடம் எப்படிப் போவேன்?' என்று எண்ணி எண்ணி விம்மினான். அந்தச் சமயத்தில் அவன் மனத்தில் ஓர் உறுதி பிறந்தது. "காளையைத் தேடிப் பிடியாமல் வீட்டுக்குள் நுழைவதில்லை; கஞ்சியும் குடிப்பதில்லை" என்று அப்படியே தன் கால் போன போக்கில் நடக்கத் தொடங்கினான்.

மறுநாள் அந்தி வேளை. உலகம் சூரியனது பொற் கிரணங்களில் முழுகிக் கிடக்கின்றது. பறவைகள் இனிமையாகக் கூவிக்கொண்டு, வீசும் மெல்லிய பூங்காற்றில் மூழ்கிமூழ்கிக் களிக்கின்றன; பசும் புல்லை மேய்ந்த பசுக்கள் பால் சுரந்து வீங்கிய மடியைத் தாங்கமாட்டாது அசைந்தசைந்து தங்கள் கன்றுகளைத் தேடி வீடுநோக்கி வந்துகொண்டிருக்கின்றன. பின்னால், மாடு மேய்ப்பவர்கள் புல்லாங்குழல் வாசித்துக்கொண்டும், வயலில் வேலை செய்துவிட்டு வரும் கூலிக்காரர்கள் சலிப்புத் தோன்றாமல் இருப்பதற்காகக் கதை சொல்லிக்கொண்டும் வருகிறார்கள்.

ரங்கசாமிக் கவுண்டர் தம் நிலங்களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டே சுமார் நான்கு மைல் தூரம் ஊரிலிருந்து வந்துவிட்டார். அங்கே ஓரிடத்தில் மணிச் சத்தம் அவர் காதில் விழுந்தது. அந்தப் பக்கம் அவர் திரும்பிப் பார்த்தார். ஒரு மரத்தில் அவருடைய காளை கட்டப்பட்டிருந்தது. அதன் கழுத்தில் தொங்கிய மணி அசைந்து ஒலிக்கும் பொழுதெல்லாம் அது துள்ளிக் குதித்தது.

சின்னப்பன் வெகு தூரம் தேடிப் போய்க் கடைசியில் ஈட்டிக் கொம்பனைக் கண்டுபிடித்து விட்டான். ஆனால் அதைப் பிடிப்பது எளிதில் முடியவில்லை. மிரண்டு மிரண்டு அது சின்னப்பனுக்கும் அடங்க மறுத்தது. அவன் அதைப் பிடிக்க முயலுகையில் தன் கூரிய கொம்புகளால் அவன் விலாவில் குத்திவிட்டது. ரத்தம் பீறிடுவதைப் பொருட்படுத்தாமல் சின்னப்பன் பாய்ந்து மூக்குக் கயிற்றைஎட்டி பிடித்துக் காளையைச் சாமர்த்தியமாக அடக்கி விட்டான்.

ஆனால் அவனால் களைப்புத் தாங்க முடியவில்லை. இரண்டு நாட்களாகக் கஞ்சிகூடக் கிடையாது. நடந்து நடந்து அலுப்பு ஒரு பக்கம்; குத்துண்ட காயத்தால் சோர்வு வேறு. அதனால் அவன் தனது இடுப்புத் துண்டினால் ஈட்டிக் கொம்பனை ஒரு மரத்தோடு சேர்த்துக் கட்டிவிட்டு அப்படியே படுத்துத் தூங்கிவிட்டான். அவன் அரையில் ஒரு கௌபீனமே இருந்தது. வயிறு முதுகோடு ஒட்டிக் கிடந்தது. பண்ணைக்காரர் கொடுத்த அறைகளின் தடிப்பும், கன்னத்தில் ஒழுகிய கண்ணீர்த் தாரையும் அப்படியே அவன் முகத்தில் தெரிந்தன.

சின்னப்பனையும், காளையையும் பார்த்ததும் ரங்கசாமிக் கவுண்டருக்கு நடந்ததெல்லாம் விளங்கி விட்டது. ஆனால் அப்படித் தெரிந்துகொண்டதாக அவர் வெளிக்குக் காண்பித்துக்கொள்ளவில்லை. சின்னப்பன் காயமடைந்து கிடப்பதை அவர் கவனித்தாரோ என்னவோ ஒருவரும் சொல்ல முடியாது. அவருடைய பேச்சிலிருந்து அப்படி ஒன்றும் வெளிப்படவில்லை. "டேய் சின்னப்பா, எழுந்து வா" என்று உரத்த குரலில் கூவினார். "காளையைச் சீக்கிரம் பிடித்துக்கொண்டு போ. அதுக்கு உன்னை யார் மணி கட்டச் சொன்னது?

ரெண்டு நாள் சுத்தினதும் இல்லாமல் இங்கே தூக்கம் வேறையா? போய்த் தொழுவத்திலே காளையைக் கட்டிவிட்டு அங்கே கிடக்கிற சாணியெல்லாம் எடுத்துக் குப்பைக் குழியிலே போடு; ரெண்டு நாளா எடுக்காமெ கிடக்குது.''

இப்படிச் சொல்லிக்கொண்டே பண்ணைக்காரர் போய்விட்டார். சின்னப்பன் மெதுவாக எழுந்து காளையைப் பிடித்துக்கொண்டு புறப்பட்டான். அவன் உள்ளம் குமுறியது. உணர்ச்சி மிகுதியால் உடம்பு நடுங்கிற்று; விலாப் பக்கத்திலிருந்து மேலும் ரத்தம் வடியத் தொடங்கிற்று. ''காயம் பட்டுக் கிடக்கிறேனென்றுகூட கவனிக்கவில்லையே; ஆமாம் அவர் எதற்காகக் கவனிக்கவேண்டும்? நான் இல்லா விட்டால் இன்னொர் ஆள்! நான் செத்தால் என்ன, பிழைச்சால் என்ன? நான் கேவலம் ஒரு பண்ணையாள்தானே?'' என்று இவ்வாறு அவன் இள நெஞ்சில் வேற்றுமை உணர்ச்சிகள் தொடர்ந்து பெருகின.

# சாரதாவின் காதல்

'சாரதா, கல்யாணமான பிறகாவது இதைச் சொல்லியிருக்கக் கூடாதா? அப்பொழுது எப்படியாவது சரி சரியென்று இருந்திருப்பேனே! கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து கொண்டாயென்று தெரிந்த பின்பு நான் எப்படி மனம் இசைந்து உன்னைக் கல்யாணம் செய்துகொள்வது?' எனப் பலவாறு அருணாசலம் சிந்தித்துக்கொண்டிருந்தான். அவன் உட்கார்ந்திருக்கும் அறையில் ஓரே நிசப்தம்; தை மாதத்து மூடுபனியைத் துரத்திவிட்டுச் சூரிய கிரணங்கள் சாளரத்தின் வழியாக அறைக்குள் அரவமில்லாமல் புகுந்து நிலத்தில் ஓர் ஒளிப்படலத்தை உண்டு பண்ணின, அருணாசலத்தின் எதிரில் அவன் தந்தை ராமசாமிப் பிள்ளை படுத்த படுக்கையாகக் கிடக்கிறார். பல ஆண்டுகளாக அவரை வாட்டி வந்த ஒருவித நோயால் இப்பொழுது அவர் மிகவும் தொல்லைப் பட்டுக்கொண்டிருந்தார். இனிமேல் வெகு நாட்களுக்குப் பிழைத்திருக்க முடியாது என்று வைத்தியர்கள் கூறிவிட்டபடியால், அவருடைய விருப்பத்தின்படி அருணாசலம் கல்லூரியிலிருந்து இரண்டு வாரத்திற்கு அனுமதி வாங்கிக் கொண்டு அங்கு வந்திருக்கிறான்.

புதுப்பாளையத்திற்கு வந்தது முதல் அருணாசலம் தன் தகப்பனுருக்கு வைத்தியர் குறிப்பிட்ட வேளைகளில் மருந்து கொடுப்பது, உணவு கொடுப்பது முதலிய பணிவிடைகளைச் சிரத்தையோடு செய்து வந்தான், எப்பொழுதும் அவர் படுக்கைக்குப் பக்கத்திலேயே இருப்பான்; வைத்தியர் அவரைப்

பேசாமல் இருக்கும்படி கூறியிருந்தபடியால் அவர் பேச வாயெடுத்தாலும் அருணசலம் பேசவேண்டாமென்று கேட்டுக்கொள்வான். "அப்பா, உடம்பு குணமான பிறகு அதெல்லாம் பேசிக்கொள்ளலாம்; இப்பொழுது பேசவேண்டாம்" என்று வாஞ்சையுடன் வற்புறுத்துவான். தன் அருமைத் தந்தை எப்படியாவது நலமடைய வேண்டுமென்று கடவுளைத் தொழுவான்; அவனுக்குத் தன் தகப்பனரைத் தவிர வேறு உறவினர்கள் அந்த ஊரில் இல்லை; வேறு இடங்களில் இருப்பார்களோ என்னவோ, பலர் ராமசாமிப் பிள்ளையுடன் நட்புப் பாராட்டி வருவதுண்டு; ஆனால் சொந்தக்காரரென்று யாரும் வந்ததில்லை.

ராமசாமிப் பிள்ளையின் நிலைமை நம்பிக்கைக்கு இடமில்லாமல் இருந்ததோடு அவரும் குணப்பட்டு எழுந்திருக்க ஆவலுள்ளவராகக் காணப்படவில்லை. அதற்கு மாருக அவர் யமனை விரைவில் வரும்படி அழைப்பவர்போலத் தோன்றினர். சாகக் கிடக்கும் தந்தையின் அருகில் தன்னந்தனியாக இருக்கும் அருணசலத்தின் மனத்தில் பல எண்ணங்கள் தோன்றி மறைந்துகொண்டே இருந்தன. ஐந்து மாதங்களுக்கு முன்பு சென்னை சென்று மாகாணக் கல்லூரியில் எப்.ஏ. முதல் வகுப்பில் சேர்ந்ததும், ஒரு நாள் தற்செயலாக ராணி மேரி கல்லூரியிற்பயிலும் சாரதாவைச் சந்தித்ததும், அவள் புதுப்பாளையத்தில் முன்பு வசித்து வந்த குமாரசாமிப் பிள்ளையின் மகள் என்பதை அறிந்ததும், பின்பு இருவரும் ஒருவரை ஒருவர்காதலித்ததுமாக, இப்படிச்சென்னையில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளும் ஒவ்வொன்றாகத் தெளிவாக அவன் மனக்கண்ணுக்குப் புலப்பட்டன.

சாரதாவின் மின்னற்கொடி போன்ற உருவம் அடிக்கடி அவன் முன்பு தோன்றிற்று. முழு நிலா

தன் வெள்ளிய மதுக் கிரணங்களைப் பொழிந்து கொண்டிருந்த ஓரிரவு அவன் சாரதாவுடன் கடற்கரையில் தனிமையாக இருந்து தன் காதலை வெளியிட்டான். அப்பொழுது அவள் சந்திரிகையுடன் மண்ணுலகத்திற்கு வந்த ஒரு தேவதையைப்போல் விளங்கினாள். அவன் அவளை அடங்காத காதலுடன் அணைத்துக்கொண்டு செவிகளில், "என் உயிரே!" என்று கூறிவிட்டு மௌனமாக இருந்ததை அவனால் மறக்கவே முடியவில்லை.

அருணாசலம் ஊர் வந்து மூன்று நாட்களான பின்பு சாரதாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதைப் பார்க்கும் வரையில் அவன் தான் சாரதாவை முழு மனத்துடன் காதலிப்பதாக எண்ணியிருந்தான். ஆனால் அக் கடிதத்தில் கண்ட விஷயங்கள் அவன் எண்ணத்தைக் குலைத்துவிட்டன. சாரதாவின் தாய் தந்தையர் திடீரென்று காலராவில் இறந்து போன பின்பு அவள் திக்கற்றவளானாள். அச்சமயம் அவளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுத்த கிறிஸ்தவப் பாதிரிப் பெண் ஒருத்தி கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்துகொண்டால் மேல் படிப்புக்கு ஏற்பாடு செய்து ஏதாவது நல்ல உத்தியோகம் வாங்கித் தருவதாகக் கூறினாள். கல்வியறிவில்லாத தன் உறவினர்களோடு அவர்கள் இச்சைப்படி வாழ விருப்பமில்லாததாலும் வேறு வழியில்லாததாலும் அப்பாதிரிப் பெண்ணின் விருப்பத்தின்படியே யாருமறியாமல் கிறிஸ்தவ மதத்திற் சேர்ந்துகொண்டு கல்லூரியில் சேர்ந்தாள். —இந்தச் செய்திகள் கடிதத்தில் விவரமாக எழுதப்பட்டிருந்தன. "நான் அன்று கிறிஸ்தவ மதத்தில் பெரியதொரு நம்பிக்கை கொண்டு சேரவில்லை. ஆனால் அதில் சேர்ந்ததனாலேயே படிக்க முடிந்தது; சுயேச்சையாக வாழ முடிந்தது; இவற்றையெல்லாம்

விட உங்களைப் பார்த்துக் காதலிக்கவும் வாய்ப்புக் கிடைத்தது. அருணா, உங்களுக்கு இந்தச் சாதிக் கட்டுகள் அர்த்தமற்றவை என்று நன்கு தெரிந்திருக்கும்; இதைப்பற்றி நான் ஒன்றும் கூறவேண்டுவது இல்லை. நமது காதலை எண்ணிப் பாருங்கள். அதற்கு முன் இந்த முட்டாள்தனமான பழங்கட்டுகளெல்லாம் ஒன்றும் இல்லாமற் போகாதவா? இக்காலத்தில் சீர்திருத்தமான முறையில் பல கலப்பு மணங்கள் நடைபெறுகின்றன" என்று இவ்வாறு சாரதா தனது காதலனிடம் முழு நம்பிக்கையுடன் தனது குழந்தை உள்ளத்தில் தோன்றியவற்றையெல்லாம் காதல் மொழிகளால் எழுதியிருந்தாள்.

அக்கடிதத்தை அருணாசலம் ஐந்தாவது முறையாக இன்று படித்துப் பார்த்தான். படிக்கும்போதெல்லாம் சாரதாவின் அழகிய ரோஜா மாலை போன்ற அழகு வடிவம் அவன் முன்பு தோன்றியது. அவளது பரந்த வரி படர்ந்த கண்கள் குழந்தைகளின் கண்களைப் போலக் கபடற்றுப் பிரகாசித்தன. அருணாசலத்திற்கு என்ன முடிவுக்கு வருவதென்று புலப்படவில்லை.

அவன் சிறு வயது முதல் புதுப்பாளைத்திலேயே வாழ்ந்து வந்தவன். பத்தாவது வரை அங்கிருந்து கொண்டே பக்கத்திலிருந்த ஒரு நகர உயர் நிலைப் பள்ளியில் படித்து வந்தான். பள்ளிக் கூட நேரத்தைத் தவிர மற்ற நேரங்களிலெல்லாம் அவன் பெரும்பாலும் மூடக் கொள்கைகளையும், வழக்கங்களையுமே கைக்கொண்டிருந்த கிராமமக்களுடனேயே பழகி வந்தான். ஐந்து மாதங்கள் சென்னையில் அவன் வாழ்ந்திருந்த போதிலும் அவன் அதிகமாக யாருடனும் பழக்கம் வைத்துக் கொள்ளவில்லை. நாட்டு நடவடிக்கைகளிலும் இயக்கங்களிலும் அவன் அக்கறை காட்டாமல் இருந்தான்.

பொதுவாகக் கிராம மக்களில் பலர் அர்த்த மற்ற கொள்கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள். ஆனால் ராமசாமிப் பிள்ளை இந்த இனத்தைச் சேர்ந்தவர் அல்ல. அவர் கடவுள் நம்பிக்கை உடையவர். பரந்த நோக்கமும் உடையவர். குருட்டு நம்பிக்கைகளுக்கும் அவருக்கும் வெகு தூரம். இருந்தாலும் அவர் எப்பொழுதும் ஏக்கம் பிடித்தவர்போலக் காணப்பட்டார்; யாருடனும் அதிகமாகக் கலந்து கொள்ளமாட்டார். அருணாசலத்தைக் கண்டபோதுதான் அவர் முகம் சிறிது மலர்ச்சி அடையும். மற்றப் போதெல்லாம் மங்கி உள்ளத்தில் மறைந்து கிடந்த தீரா விசனத்தைக் காட்டுவதாக இருக்கும். தமது மகனுக்கு அறிவு புகட்டுவதில் தாமாகவே ஒருவிதக் கவலையும் அவர் எடுத்துக் கொள்ளவில்லை. அருணாசலம் பழைய கொள்கைகளிலேயே வளர்ந்து வந்தான். மற்றக் கல்லூரி மாணவர்களைப் போலக் குடுமியைக் கத்தரித்துக் கொள்ளாமல் இருப்பது முதலியவைக ளெல்லாம் தனது கடவுள் பக்திக்கும் சாதி ஒழுக்கத் திற்கும் அறிகுறி என்று அவன் கருதியிருந்தான்.

இம்மாதிரி மனப்பாங்குடைய அருணாசலத்தை சாரதாவின் கடிதம் கலக்கிவிட்டது. அவளுடைய அழகும், காதலும் அவனை ஒரு புறம் வலிமையாக இழுத்தன. சென்னையிலேயே சாரதா கிறிஸ்து மதத்தைச் சேர்ந்தது தெரிந்திருந்தால் அவன் என்ன செய்திருப்பானோ யாரும் சொல்ல முடியாது. ஆனால் ஊருக்கு வந்ததுமுதல் பழங் கொள்கைகளே ஆழமாக வேரூன்றத் தொடங்கின.

அன்று மத்தியான்னம் சாப்பிடுவதற்காக அருணாசலம் சமையற்கட்டிற்குச் சென்றான். உணவு பரிமாறிவிட்டு நின்று கொண்டிருந்த சமையற்காரி, "அருணா, கேட்டயா, நம்ம வீரச்சக்கிலி குடும்பத்

தோடு போய் விட்டான். என்னமோ கிறிஸ்து வேதமாமே; அதுலே சேர்ந்துக்கிட்டானும்'' என்று சொன்னுள். அருணசலத்திற்குச் சாரதாவின் நினைவு வந்தது. 'சாரதா வீரசக்கிலி எல்லோரும் சமம். ஒரே அந்தஸ்து, ஒரே பந்தியில் சாப்பிடலாம்; விரும் பினுல் கல்யாணங்கூடச் செய்து கொள்ளலாம்' என்று இவ்வாறு அவன் மனத்திற்குள்ளேயே நினைத்துக் கொண்டு மௌனமாய் இருந்ததைக் கண்ட சமையற்காரி மறுபடியும் தொடங்கிறாள் ''செத்த மாட்டைத் தின்கிற இவனோடு எல்லாரும் ஒண்ணும்! கலெக்டர் துரைகூட அவனோடு கூட உட்கார்ந்து சாப்பிடுவாராமே! நம்மைக் கண்டால் அவன் கும்பிடமாட்டானும். திண்ணையில் வந்து உட்கார்ந்து கொள்வானும்! உம், காலம் கெட்டுப் போச்சு!....'' அவள் மேலும் சொல்லிக்கொண்டே போனுள்.

அருணசலத்திற்கு அவன் மனத்தில் நிகழும் போராட்டமே பெரியதாக இருந்தது. ஒன்றும் அறியாத அந்த வேலைக்காரியின் சொற்கள் கடைசி யாகப் பழங் கொள்கைகளுக்கு வெற்றியளித்து விட்டன. அன்றே அவன் சாரதாவுக்குத் தான் அவளைத் திருமணம் செய்துகொள்ள முடியாதென்று எழுதிவிட்டான்.

இரண்டு நாட்கள் கழிந்தன. ராமசாமிப்பிள்ளை யின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாய்க்கொண்டே வந்தது. மூன்றும் நாள் சாரதாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

''என் ஆருயிர் அருணு,

என்னைக் கைவிட்டு விடாதீர்கள்; அன்பே, அன்பே, கைவிட்டு விடாதீர்கள். காதலுக்கு சாதி யென்றும், மதமென்றும், உயர்வு தாழ்வென்றும்

உண்டா? இல்லவே இல்லை. நீங்கள் என்னைப் பார்த்தீர்கள். நான் உங்களைப் பார்த்தேன். காதல் கொண்டோம். அங்கு மதம் எங்கு வந்தது?

“அருணா, நமது காதலுக்கு அழிவில்லையென்றிருந்தேனே! எத்தனை தடவை அதன் உயர்வையும் வலிமையையும் பற்றிப் பேசி மகிழ்ந்திருக்கிறோம். ~~சாதியென்ற உலகம் நகைக்கும் அர்த்தமற்ற கட்டுப்~~ பாட்டை வைத்துக்கொண்டு அதைத் தள்ளிவிட்டீர்களே? நான் கிறிஸ்துவ மதத்தைப் பின்பற்றுகிறேனென்றால் அது என்னையும் எங்கும் நிறைந்து விளங்கும் இறைவனையும் பொறுத்தது. மதம் ஆன்ம சம்பந்தமானதல்லவா? பின் அதை ஏன் சமூக வாழ்க்கைக்குப் பேரிடைஞ்சலாகச் செய்யவேண்டும்? அருணா, பழைய நம்பிக்கைகளுக்கு இடங்கொடுத்து விடாதீர். அருணா, அன்பே, கைவிட்டு விடாதீர்.

‘காதல், காதல், காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல்’

தங்களையே எல்லா மென்றிருக்கும், சாரதா.”

காதற்பெருக்கால் வெளிவந்துள்ள இந்தக்கடிதம் அருணாசலத்தைக் கலங்கச் செய்தது. கொஞ்சநேரம் அவனுக்குக் காதலைத்தவிர வேறு எவ்வித எண்ணமும் இல்லாத ஓர் இன்ப உணர்ச்சி ஏற்பட்டது. ஆனால் அது நிலைபெற்று நிற்கவில்லை. சாரதாவுக்கு யாதொரு பதிலும் அளிக்காமல் மறுபடியும் தன் மனப்போராட்டத்திற்கு இடங் கொடுக்கலானான். காதல் சில சமயங்களில் வெற்றி கொள்ளும்; பழங் கொள்கைகள் சில சமயங்களில் வெற்றி கொள்ளும்.

இவ்வாறு ஐந்து நாட்கள் சென்றன. ராமசாமி பிள்ளையின் தீரா மனக்கவலையெல்லாம் தீர்ந்தது

அவர் உயிர் துறந்தார். அவர் எழுதிப் பத்திரமாக வைத்திருந்த ஒரு கடிதத்தை அருணசலத்திடம் கடைசி வேளையில் நீட்டினார். பிறகு சாகும்போது, "ஆ, எனது அருமைக் கமலா, இவ்வளவு நாட்கள் எனக்காகக் காத்திருந்தாயா? இதோ வந்து விட்டேன்." இவைதாம் அவர் கூறிய வார்த்தைகள்.

அருணசலத்திற்கு உண்டான துக்கத்திற்கு அளவில்லை. தந்தை இறந்த பிறகு அவன் உலகத்தில் ஆதரவற்றவனாகப் போய்விட்டான். தந்தையைத் தன்னிடமிருந்து பிரித்துவிட்ட கடவுளை நொந்து கொள்வான்; தன்னைத் தண்டிக்கவே கடவுள் இவ்வாறு செய்துவிட்டார் என்றும் நினைத்தான். சாதி சமயம் பாராமல் மணம் செய்துகொள்ள எத்தனித்த தன்னைக் கடவுள் சரியானபடி தண்டித்துவிட்டார் என்று அவனுக்குப் பட்டது. இந்த எண்ணம் தந்தையின் பிணம் சுடுகாடு சென்ற பிறகு வலுவடையலாயிற்று; அவனுக்கு வேறு ஒன்றும் தோன்றவில்லை. தாங்க முடியாத துக்கத்தால் மதி மயங்கிய அருணசலம் அன்றே சாரதாவுக்குத் தான் இனி அவளை நினைக்கவும் முடியாது என்று கடிதம் எழுதிவிட்டான்.

மூன்றும் நாள் மறுபடியும் சாரதாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அருணசலம் அசட்டையாக அதை மேஜைமேல் எறிந்துவிட்டுக் கன்னத்திற்குக் கைகொடுத்து உட்கார்ந்திருந்தான். உலகமே அவனுக்கு ஒரு பெரும் பாலைவனமாகத் தோன்றியது. என்ன என்னவோ நினைவுகள் அவன் மனத்தில் ஓடின. அப்பொழுதுதான் அவனுக்குத் தன் தந்தை கொடுத்த கடிதத்தின் நினைவு வந்தது. துக்கத்தில் அதை இதுவரையில் மறந்துவிட்டான். அதை எடுத்துப் படிக்கலானான்:—

"என் அருமை அருணா,

"நான் இறந்த பிறகாவது என் மனத்தில் புதைந்து கிடக்கும் இவ்விஷயங்கள் உனக்குத் தெரிய வேண்டுமென்று இதை எழுதி வைக்கிறேன்.

"நான் என் அருமை மனையாளுடன் வாழ்ந்த தெல்லாம் ஆறு மாதங்களே! அதற்குள் அந்தக் கொடிய வைசூரி நோய் அவளைக் கொள்ளைகொண்டு போய்விட்டது. அவளைப் பிரிந்து எனக்கு இவ்வுலகில் எந்த இன்பமும் இருப்பதாகத் தோன்றவில்லை; ஆனால் எப்படியோ நான் உயிர் வாழ்ந்து வந்தேன். எனக்கு ஊரில் இருக்கப் பிடிக்கவில்லை. (அப்பொழுது நான் வசித்து வந்தது திருநெல்வேலியில்; அதுவே என் சொந்த ஊர்.) எனது உயிர் இருக்கும் வரையில் எங்காவது சுற்றிக்கொண்டிருக்கலாமென்ற எண்ணம் உண்டாயிற்று. ஆகையால் என் உடைமைகளை யெல்லாம் விற்றுக் கிடைத்த ஒருலட்சம் ரூபாயையும் பாங்கியில் போட்டுவிட்டு ஊர் ஊராக அலைந்து திரிந்தேன். இயற்கையைக் கண்டு களிப்பதில் எனக்குப் பிரியம் உண்டு. இயற்கை வனப்பு மிக்க இடங்களுக்கெல்லாம் சென்றேன்; இப்படிப் பல இடங்களில் சுற்றியதில் எனக்கு அர்த்தமற்ற கொள்கைகளிலிருந்த மூட நம்பிக்கைகளெல்லாம் மறைந்துவிட்டன. நமது சமூகத்திலுள்ள பல ஊழல்கள் நன்கு புலப்பட்டன; ஆனால் என் கமலத்தைப் பிரிந்த பிறகு அவற்றைப் பிறருக்குக் கூறவோ அல்லது சமூக சீர்திருத்தத்திற்காகப் பாடுபடவோ எனக்கு விருப்பம் இல்லை. நாட்களை எப்படியாவது கழிக்க வேண்டுமென்பதொன்றே எனது எண்ணமா யிருந்தது.

"ஒரு நாள் ஒரு தோட்டத்தின் வழியாகச் சென்றுகொண்டிருக்கும்பொழுது ஒரு சக்கிலியப்

பெண் அங்கே வேலை செய்துகொண்டிருப்பதைக் கண்டேன். பக்கத்தில் மர நிழலில் ஒரு குழந்தை சிறு கந்தைத் துணியில் படுத்திருந்தது; அந்தக் குழந்தை அழும்போதெல்லாம் அவள் அதற்குப் பாலூட்ட வருவாள். பிறகு மறுபடியும் வேலை செய்யத் தொடங்குவாள். அவள் குழந்தைக்குப் பால் கொடுக்கும்போது அக்குழந்தையைத் தனக்கு அந்த வறுமை நிலையில் அருளிய கடவுளை நொந்து கொண்டிருந்தாள். அவள் நிலைமை எனக்குப் பரிதாபமாக இருந்தது. எனக்குச் சட்டென்று ஒரு எண்ணம் தோன்றிற்று. அவளுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகக் கூறிப் பல வகைகளிலும் சமாதானம் சொல்லி அக்குழந்தையை என்னிடம் கொடுத்து விடும்படி செய்தேன். அவள் கணவன் கண்டிக்கு ஓடிவிட்டானும்; அதனால் அவளைக் காப்பாற்ற வேறு ஒருவரும் இல்லை. மற்றப்படி அவளுடைய பந்துக்கள் குழந்தையை என்னிடம் கொடுப்பதைத் தடுக்கவில்லை. அவள் குழந்தையைப் பிரிந்த காட்சி கல்லையும் கரைக்கக் கூடியதாயிருந்தது. 'கண்ணே, நீ படிச்சு மேலுக்கு வருவாயென்று கொடுக்கிறேன். பாவி மகன் எங்கிருந்தால் என்ன? சுகமாக இருந்தால் போதும்' என்று குழந்தையை முத்தமிட்டுக் கண்களில் நீர் வடிய என்னிடம் கொடுத்தாள். அப்பொழுது அக்குழந்தைக்குச் சுமார் எட்டு மாதம் இருக்கும். நான் ஒரு தாயின் அன்போடு அதை வளர்த்தேன்; அக்குழந்தைதான் நீ.

"உன்னை வளர்த்துக் கல்வி கற்பித்து மேன்மை அடையச் செய்யவேண்டும் என்ற எண்ணம் என்னை மறுபடியும் திருநெல்வேலிக்குப் போகச் செய்தது. அங்குள்ள என் உறவினர்கள், நான் ஊர் பேர் தெரியாத ஒரு குழந்தையை வளர்த்து வருவதைப்

பற்றிப் பலவகையாகப் பேசலாயினர். அவர்களுக்குச் சமாதானம் கூறிக்கொண்டிருந்தால் உனக்குச் சரியான வயதும் அறிவும் வராத முன்பே உனக்கு இந்த ரகசியத்தை வெளியிடவேண்டி நேரிடுமென்று கருதி நான் பேசாமல் இந்த ஊருக்கு வந்து நிம்மதியாகக் காலம் கழிக்கலானேன்.

"நமது சமூகத்திலுள்ள ஊழல்களையெல்லாம் நீயே அறிந்துகொள்ள வேண்டுமென்பது என் விருப்பம். அதற்காகவே நான்,உன்னைச் சென்னைக்கு அனுப்பினேன்; கல்லூரிப் படிப்பில் நன்மை உண்டாகுமென்று நான் கருதவில்லை. ஆனால் அங்கு நீ பல அறிஞர்களோடு பழகவும், அவர்களுடைய கருத்துக்களைத் தெரிந்துகொள்ளவும், சமூக சீர்திருத்த இயக்கங்களைக் கவனிக்கவும் இடம் உண்டல்லவா?

நீ எப்பெண்மணியிடம் காதல் கொண்டாலும் சாதிமத வேறுபாடுகளைக் கவனியாமல் மணந்து உலகில் பிறருக்கு ஓர் எடுத்துக்காட்டாக வாழ வேண்டுமென்பதே என் முழு விருப்பம்.

"அருணா, பிறப்பைக் குறித்து நீ உன்னை இழிந்தவனென்று கருதுவாயானால் உன்னைப்போன்ற முட்டாள் உலகில் வேறு எவரும் இல்லை. உண்மையில் பிறப்பினால் உயர்வு தாழ்வு ஏற்படுவதே இல்லை. பழங் கொள்கைகளை இந்த விஷயத்தில் நம்ப வேண்டாம். அவைகளெல்லாம் இந்த நூற்றாண்டுக்கு உதவா.

"எனது செல்வமனைத்தையும் உனக்கு எழுதி வைத்திருக்கிறேன். நீ காதலிக்கும் பெண்ணையே மணந்து தாய்நாட்டுச் சேவை செய்து வாழ்வாயாக.

உன்,

ராமசாமிப் பிள்ளை."

படித்து முடித்தான். கையிலிருந்து அக்கடிதம் நழுவிக் கீழே விழுந்தது. அந்தச் சமயத்தில் அவனது நிலைமை சொல்லுக்கு அடங்காதபடி இருந்தது.

சாரதாவின் கடிதத்தை ஆவலுடன் பிரித்துப் பார்த்தான். அது கீழ்க்கண்டவாறிருந்தது.

"என் அருணா,

நீங்கள் கைவிட்ட பிறகு எனக்கு இவ்வுலகில் வேலையில்லை; தங்கள் வரவை எதிர்பார்த்து, எந்த உலகில் இவ்விதக் கொடிய பொருளற்ற பிரிவினைகளெல்லாம் இல்லையோ அங்கு ஆவலுடன் இருப்பேன்

தங்களைக் கடைசி வரையிலும் மறவாத,

தங்கள்,

சாரதா."

# உள்ள முடையான்

"காரியம் ஆகுமா ஆகாதா? இரண்டில் ஒன்று தெரியவேணும்" என்று வீரப்பன் தன் இரண்டு கைகளிலும் பிடித்திருந்த கயிற்றை மூக்கின்மேல் வைத்து ஏதோ முணுமுணுத்துவிட்டு ஏட்டுச் சுவடியிற் செருகினான். ஏட்டைப் புரட்டிப் பார்த்து விட்டு, "சீதா கல்யாணம்" என்றான் எலும்பப் பறையன்.

"நம்ம சின்னப்பனுக்குக் கல்யாணம் நடக்கு மான்னுதாங் கேட்டேன்."

"ஆட்சேபணையே இல்லிங்க; கட்டாயம் நடக்கும்; சீதா கல்யாணம் வந்திருக்குதுங்க!"

சின்னப்பனுக்குத் தன் தகப்பன் நிச்சயம் செய் திருக்கும் பெண்ணை மணஞ் செய்துகொள்ள விருப்பம் இல்லை; அதனால் அவன் முகூர்த்தம் வைத் தால் எங்காவது ஓடிவிடுவான். "எனக்குக் கல்யா ணமே வேண்டாம்" என்று அவன் பலமுறை கூறியும் யாரும் அவன் கருத்தை உணர்ந்துகொள்ளவில்லை. நேராக இந்தப் பெண் பிடிக்கவில்லை என்று சொல் லவோ அவனுக்குத் துணிச்சல் இல்லை. பெற்றோர் நிச்சயம் செய்த பெண்ணை வேண்டாமென்று எப்படிச் சொல்வது?

இப்பொழுது நான்காவது தடவையாக முகூர்த்தம் வைப்பதற்காக வீரப்பன் குறி கேட்டுக் கொண்டிருக்கிறான்.

எலும்பப் பறையன் அந்தப் பக்கத்தில் பேர் போனவன். அவன் குறி பொய்யானதே இல்லையாம். அவன் குறி சொல்வதே ஒரு தனி முறை; ஏட்டில் ஏதாவது ஒன்றை எழுதுவது, அப்படி எழுதிய பல ஏடுகளை மொத்தமாகச் சேர்த்து ஒரே கட்டாகக் கட்டுவது, அவற்றிற்குள் ஒரு கயிற்றை எங்காவது செருகச் செய்வது, அந்த இடத்தில் உள்ள ஏட்டில் எழுதப்பட்டுள்ள வரிகளுக்கு விளக்கம் செய்வது— இதுதான் அவன் வழி.

இந்த ஏட்டுக் கற்றைக்கு 'உள்ள முடையான்' என்று பெயர். குறி கேட்பவரின் உள்ளத்தை இது காட்டுகிறதாம். உள்ளத்தைக் காட்டுவதோடு மட்டுமல்லாமல் அதில் உதித்த கேள்விக்கு விடையும் கொடுக்கிறது. எலும்பனுக்கு இந்த ஏட்டுக் கற்றை பிதுரார்ஜிதமாகக் கிடைத்த சொத்து. ஆனால் விளக்கம் செய்யும் திறமை அவனுடைய சொந்தச் சம்பாதனை. அதில்தான் அவன் அந்தப் பக்கத்திலேயே பேர் வாங்கிவிட்டான்.

"நீங்க ஒன்னும் யோசிக்க வேண்டாமுங்க. வேலை வந்து கூடிட்டுதுங்க" என எலும்பன் அழுத்திக் கூறினான்.

"வேலைப் பிசகுதான், ஓடி ஓடிப் போகிறான். இந்த முறை பார்க்கலாம்" என்று வீரப்பன் இரண்டணா காணிக்கை கொடுத்துவிட்டு வீட்டுக்குள் சென்றான்.

எலும்பன் பணத்தை இடுப்பு வேட்டியின் ஒரு முனையில் முடிந்துகொண்டு போய்விட்டான்.

திருமணத்திற்கு முகூர்த்தம் வைத்தாகிவிட்டது. அந்த நன்னாளாகிய வெள்ளிக்கிழமையும் வந்துவிட்டது. ஆனால் மணமகனைத்தான் இரண்டு நாட்

களாகக் காணவில்லை! வீரப்பனுக்குக் கோபம். தன் தாய், தமக்கை, மனைவி எல்லோர்மீதும் எரிந்து விழு கிறான். "ஆனாலும் பையனுக்கு இத்தனை 'எளக் காரம்' கொடுக்கப்படாது. மிரட்டி வைச்சிருந்தா இப்படி ஓடுவானா?" என்று பக்கத்து வீட்டுக் கிழவி கூறிக்கொண்டு போகிறாள். எல்லோரும் அங்கும் இங்கும் அலைகிறார்கள். சாமான்கள், துணிமணிகள் எல்லாம் குறைவற இருக்கின்றன. மணமகனை மட்டும் காணவில்லை.

கோட்டுப்பாளையத்திலிருந்து பெண் வீட்டிற்குச் செல்ல அதிக தூரம் இல்லை. சின்னப்பனை மாலை வேளைக்குள் தேடிக் கண்டுபிடித்து விட்டாலும் முகூர்த்தத்திற்கு ஒரு தடங்கலும் இல்லாமல் தூரன் பாளையம் சென்றுவிடலாம்.

அந்திநேரமாக ஆக வீரப்பனுக்குக் கோபம் ஓங்குகின்றது. தன் மகன் போகக்கூடிய இடங்களுக் கெல்லாம் ஆட்களை அனுப்பினான்; ஆனால் பயன் இல்லை. உள்ளமுடையானை நம்பி அதிகம் செலவு செய்துவிட்டதால் அவனுக்கு விசனம் ஒருபுறம், கோபம் ஒருபுறம். வேறு என்ன செய்வதென்று அவனுக்குத் தோன்றவில்லை. கல்யாணப் பந்தலை விட்டு வெளியே வந்து மேற்கே நோக்கினான். சிவந்த சூரியன் தொடுவானத்தை அணுகிவிட்டான்.

அந்தச் சமயத்தில் சின்னப்பனைக் கூட்டிக் கொண்டு வீரப்பனுடைய மைத்துனன் வந்து சேர்ந்தான்.

சின்னப்பன் பக்கத்திலேயே ஒரு காட்டில் ஒளிந் திருந்தான். பாவம் இரண்டு நாட்களாகப் பட்டினி. அதனால் தண்ணீராவது குடிக்கலாமென்று ஒரு கிணற்றில் இறங்கிக் கொண்டிருக்கும்பொழுது தற் செயலாக அங்கு வந்த வீரப்பன் மைத்துனன்

அவனைக் கண்டுகொண்டான். சின்னப்பனுக்கு வேறு வழியில்லை; பேசாமல் வீட்டுக்கு வந்து விட்டான்.

கல்யாணம் 'சிறப்பாக' நடந்தேறியது. எலும்பப் பறையன் இனும் கேட்க வந்தான். "ஏன்டா, உன்னை நம்பி மோசம் போகத் தெரிஞ்சுதே. உனக்கு இனும் வேறையா?" என்று உறுமினான் வீரப்பன்.

"சாமி, அப்பவே சொன்னேனுங்களே, சீதா கல்யாணமுன்னு; காட்டுக்கு யாகங்காக்கப் போன ராமர் வந்துதானுங்கோ கல்யாணம். விசுவாமித்திரர் கூட்டிக்கிட்டு மிதிலைக்கு வந்தாப்பிலே நம்ம பெரிய எசமான் கூட்டிக்கினு வந்து கல்யாணத்தை நடத்தினுங்கோ. நான் சொன்னது ஒண்ணும் வித்தியாசம் இல்லீங்களே."

எலும்பனுடைய விளக்கம் எல்லோருக்கும் திருப்தி அளித்தது. திருமணம் நடந்துவிட்டது. அதுவே போதும். எலும்பனுக்கு வீரப்பன் எட்டணுக் கொடுத்தான்.

கல்யாணம் நடந்து ஆறு மாதங்களே ஆயின. சின்னப்பன் கண்டிக்கு ஓடிவிட்டான். விரும்பாத பெண்ணோடு வாழ்க்கை அதற்குமேல் நீடிக்கவில்லை. காட்டில் ஓயா வேலை; வீட்டில் அவன் சுகம் காணவில்லை; அவனுக்கு இல்லறம் கசந்துவிட்டது. இந்த நிலையில் கண்டிக்கு ஆள் சேர்க்கிறவர் ஆசை மொழிகள் அவன் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டன. ஒரு நாள் இரவு யாரும் அறியாமல் சின்னப்பன் மற்றவர்களோடு சேர்ந்து கண்டிக்குப் போய்விட்டான்.

"பையனையாவது பார்த்துக்கொண்டிருப்பேன்; குமரி காலெடுத்து வைச்சதும் புருசனைத் தூரத்தி விட்டாள்; எந்த நேரத்தில் பிறந்தாளோ?" என்று வீரப்பன் மனைவி பேசத் தொடங்கினாள்.

“அப்பவும் எலும்பன் சொன்னது சரியாகத் தான் போச்சு; சீதைகூட ராமர் வாழ்ந்தாரா என்ன? கர்ப்பமாயிருந்த சீதையைக் காட்டுக்கு ஓட்டிஞரு; இங்கே சின்னப்பன் ஓடிப் போஞன். யார் போஞ என்ன? கூடி வாழமாட்டாங்கஞுதாங் குறி சொல்லிச்சு, சிதா கல்யாணமுஞு வந்துதே. அப்பவே இதெல்லாம் யோசனை பண்ணியிருக்க வேணும்; நாம் தெரியாத்தனமாப் பண்ணிக் கிட்டால் என்ன பண்ணறது? உள்ளமுடையான் பொய்யாவா போகும்?” என்ருள் பக்கத்து வீட்டுக் கிழவி.

# விடை பெறாத கேள்வி

தொலைவிலே எங்கோ நாய் ஊளையிடுகின்ற அரவம் இருளை ஊடுருவிப் பிளந்துகொண்டு என் காதில் வந்து புகுந்தது. வேறு ஒரு வகையான ஒலியும் இல்லை. கிரீச்சிடும் சிறு சிறு பூச்சிகள் கூட வாயடங்கிக் கிடந்தன.

அந்த நாய் மட்டும் இந்த ஆழ்ந்த அமைதியைக் குலைத்துக் கொண்டு அப்படி ஊளையிடுவானேன்? அதற்கு என்ன வேதனையோ? அது தனது காவல் தொழிலில் எதைக் கண்டு இப்படி அலறுகிறதோ? ஏதாவது ஒரு மனிதனைக் கண்டிருந்தால் குலைக்குமே அல்லாது ஊளையிடாதே? ஒரு சமயம் குளிர் தாங்க மாட்டாமல் வருந்துகிறதோ அல்லது பசியோ என்னவோ?

எனக்கு இதைக் கண்டறிய வேண்டுமென்று ஆவல் உண்டாயிற்று. மேலும் உறக்கம் பிடியாமல் எத்தனை நேரந்தான் இப்படிக் கட்டிலில் புரண்டு கொண்டு இருப்பது? தடாலென்று எழுந்து போர் வையை இழுத்துப் போர்த்துக்கொண்டு அக்குரல் வந்த திசையில் நடக்கலானேன்.

உயிர்ப் பிராணிகளின் நடமாட்டமே காணோம். இருளின் மேல் இருளைப் போர்த்தது போல எங்கும் ஒரே மையிருள். வானத்தைக் கருமேகம் சிறு இடை வெளியும் தெரியாமல் மூடியிருந்தது. நட்சத்திரங் களின் மின்மினி ஒளிகூட இல்லை.

நான் மெதுவாகக் கொஞ்சதூரம் நடந்தேன். இருள் லேசாக விலகி வழிவிட்டு மறுபடியும் கூடித் திரண்டு கொள்வது போலிருந்தது எனக்கு. அப்பொழுதுதான் எதற்காக இந்தக் கும்மிருட்டில் நான் வெளியில் புறப்பட்டேன் என்ற எண்ணம் உண்டாயிற்று.

எங்கே போவது? போய்த்தான் என்னத்தைப் பார்ப்பது? ஊளையிடுகின்ற நாயைக் கண்டுபிடித்து விடுகிறேன் என்று வைத்துக் கொள்ளலாம். பிறகு என்ன செய்வது? அதை ஏதாவது கேட்டுத் தெரிந்து கொள்ள முடியுமா? நாயுடனே பேசிக்கொண்டிருப்பதை யாராவது பார்த்துவிட்டால் என்ன நினைப்பார்களோ?—என்று இதுபோன்ற எண்ணங்கள் கிளம்பின.

சே, போய்ப் பேசாமல் படுத்துக் கொள்ளலாம். சாமக்கோடங்கி போல இருட்டிலே எங்கே அலைவது என்று திரும்ப எண்ணினேன். அதுசமயம் மறுபடியும் அதே துன்பக் குரல் அண்மையிலேயே கேட்டது.

என்னால் திரும்பி வர முடியவில்லை. அந்தக் குரலில் அத்தனை அவலம் தொனித்தது. வந்தது வந்தாய் விட்டது, போய்ப் பார்த்துவிடலாம் என்று முடிவு செய்துகொண்டு வேகமாக முன்நடந்தேன். தெருக் கோடியில் ஒரு நாய் மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது. இருட்டில் அதிக நேரம் இருக்க இருக்கப் பொருள்களைத் தனித் தனியாகப் பார்த்து அறிந்துகொள்ள என் கண்கள் சக்தி பெற்றுவிட்டன. காலடிச் சத்தம் கேட்டு அந்த நாய் நின்று என்னைத் திரும்பிப் பார்த்தது. அதன் கண்கள் மின்னின. ஆனால் அது வழக்கத்திற்கு மாறாகக் குரைக்காமல் இருந்தது. ஊம்.... என்று மெதுவாகக் குரல் கொடுத்துவிட்டு அப்படியே ஒரு பக்கமாக நின்று விட்டது.

அந்தச் சமயத்திலே நாய்க்குச் சற்று முன்னாலே ஏதோ ஒன்று கருமையாகத் தரையிலே ஊர்ந்து உருண்டு செல்வதை நான் கவனித்தேன். ஓர் இருட்குவியல் மெதுவாக நகர்ந்துகொண்டிருக்கிறது! அது என்ன? அதற்கும் அந்த நாய்க்கும் என்ன சம்பந்தம் —என்றால் அறியக்கூடவில்லை.

நான் அதைப் பின்தொடர்ந்தேன். நாயும் எனக்குப் பின்னால் பதுங்கிப் பதுங்கி வந்துகொண்டிருந்தது.

அந்த இருட்டுக் குவியல் மெதுவாகச் சென்றது. தெருவெல்லாம் கடந்து இப்பொழுது ஊருக்கு வெளியே வடக்குப் பக்கமாகப் போகத் தொடங்கிற்று.

எங்கே போகிறதோ, தெரியாது. ஆனால் நான் விடாது பின்தொடர்ந்தேன். அதன் பின்னாலேயே சென்று பார்க்கவேண்டுமென்று என்னையும் அறியாமல் உள்ளத்திலே ஓர் ஆவல்; ஒரு துணிச்சல்.

ஆ! என்ன இது! சுடுகாட்டிற் கல்லவா போகிறது! போய்த்தான் பார்க்கலாமே. பேயாய் இருந்தால்தான் என்ன? இந்த இடத்தில் என்னை ஒன்றும் செய்யாமல் அங்கு மட்டும் என்ன செய்துவிடும்? அது என்னை அடித்துக் கொன்றுவிட நினைத்தால் இங்கேயே இப்பொழுதே செய்யாதா?

ஆமாம், பேயாய் இருந்தால் பெரிய உருவத்தோடல்லவா இருக்கவேண்டும்? அப்படித்தானே எல்லோரும் சொல்லிக் கொள்கிறார்கள்? இது என்னவோ நிலத்தோடு உருண்டுகொண்டிருக்கிறதே?

மயானத்தருகே ஒரு புதர் மறைவிலே நான் நின்று கவனித்தேன். உள்ளே காலெடுத்து வைக்க மனம் இடங் கொடுக்கவில்லை. அந்த உருவம் நேராக ஓரிடத்தில் போய் நின்றது.

நிற்கவும் எனக்குப் பீதி உண்டாகிவிட்டது. எதற்காக நின்றுவிட்டது? ஒரு சமயம் நான் பின் தொடர்வதை அது அறிந்துகொண்டதா என்ன? அப்படியானல்....? சட்டென்று புதர் மறைவிலேயே படுத்துக் கொண்டேன்;—என் நெஞ்சு ஏன் இப்படிப் படபடக்கிறது? இது அடித்துக்கொள்வது அதற்குக் கேட்டுவிடும் போலிருக்கிறதே.

நெஞ்சில் கையை வைத்து அழுத்திக்கொண்டு அப்படியே கிடந்தேன்.

பேச்சுக் குரல் கேட்டது.

"கண்ணே, எத்தனை நாள் உன்னைப் பிரிந்திருப்பது?"

இரக்கமான இந்தக் கேள்விக்குப் பிறகு சிறிது நேரம் எங்கும் நிசப்தம்.

"அதிக நாள் பிரிந்திருக்க வேண்டியதில்லையா? நாம் ஒன்றுகூடி வாழும் காலம் நெருங்கிவிட்டதா? நிச்சயமாய்த்தான் சொல்லுகிறாயா? அல்லது எனக்கு ஆறுதலாகப் பேசுகிறாயா?"

மறுபடியும் நிசப்தம்.

"எப்பொழுதும் உனது நினைவாகவே இருக்கிறேனடி; எனக்குத் தூக்கமே வருவதில்லை; சோற்றைக் கண்டால் விஷமாக இருக்கிறது."

ஒரு விநாடி மேலும் நிசப்தம்,

"கண்ணே, நான் சாப்பிடாமல் இளைத்துப் போய் விட்டதைப்பற்றி நீயேன் வருத்தப்படுகிறாய்? என் உடம்பு துரும்பாய்ப் போனால் போகட்டுமே. உன்னுடன் கூடியிருக்காமல் இந்த உடம்பு எனக்கு எதற்கு வேண்டும்?"

இந்தக் கேள்விக்கெல்லாம் பதில் யார் சொல்லு கிருர்கள்? எனக்கு அந்தப் பதில் கேட்பதில்லையே?....

சிறிது நேரத்தில் மறுபடியும் பேசும் குரல் கேட்டது.

"கண்ணே, எனக்காகவா மாலை கட்டி வைத்திருக்கிருய்? அந்தப் பூ என்றுமே வாடாதா? அப்படியா? நான் உனக்கு இங்கிருந்து என்ன கொண்டு வரவேண்டும்?"

ஆண் குரல் மட்டும் கேட்கிறது. அவனுடன் யார் பேசுகிருர்கள்? யாராவது பேசிஞல் எனக்குக் கேட்கவேண்டுமே? யாராவது பைத்தியக்காரன் இப்படித் தனக்குத் தானே பேசிக்கொள்ளுகிருனே என்னவோ?

சே, பைத்தியக்காரஞக இருக்க முடியாது. பைத்தியக்காரன் சுடுகாட்டுக்கு எதற்காக வருகிருன்? யாரோ இரண்டு காதலர்கள் இரகசியமாக இப்படிச் சந்தித்துப் பேசிக்கொள்கிருர்கள் போலிருக்கிறது. அந்தப் பெண் பயத்தால் மிக மெதுவாகப் பேசுகிருள். அதஞல்தான் எனக்குக் கேட்கவில்லை! இரகசியமாகச் சந்திப்பதற்கு மயானம் நல்ல இடந்தான். இந்த இடத்திற்கு இரவில் யாரும் வரமாட்டார்களல்லவா?

நான் தொடர்ந்து வந்த உருவம் ஓர் இளைஞனைப்போலக் காணவில்லையே! நிலத்தில் தள்ளாடி ஊர்ந்துகொண்டல்லவா வந்தது? அது மனித உருவமாகத் தோன்றவில்லையே! ஒரு வேளை பேய்கள்தாம் இப்படிப் பேசிக்கொள்கின்றனவோ என்னவோ? பேய்கள் ஒன்றையொன்று காதலிக்கக் கூடாதா என்ன?—பேயாயிருந்தால் பெரிய உருவமாக இருக்க வேணும். மேலும், பேய் யாருக்கும் பயப்படாது. இரண்டு பேய்களும் பேசுவது எனக்குக் கேட்குமே?

அதோடு நான் பார்த்த உருவம் பேயாயிருந்தால் அப்படி அசைந்து அசைந்து நடக்கவேண்டிய தில்லையே? அப்பா, அது இங்கு வந்து சேரவே ஒரு சாமமாகிவிட்டதே. எதற்கும் தைரியமாகப் பார்த்துவிடலாமா?....'

மறுபடியும் பேச்சுக் கேட்டது.

"கண்ணே, நான் இனி உன்னைப் பிரியவே முடியாது. என்னைக் கட்டி அணைத்துக்கொள்."

ஒரு கணம் பேச்சில்லை. "ஏன் கட்டி அணைக்கக் கூடாதென்கிறாய்? பொறு பொறு என்கிறாயே— நான் உன்னை ஆலிங்கனம் செய்யாமல் இன்று போகவேமாட்டேன்...."

"கிட்டே வந்தால் ஓடிவிடுவாயா? கண்ணே நீ இப்படிச் சொல்வது சரியா? ஒரு நிமிஷம் நிற்க மாட்டாயா? கண்ணே" என்று ஆத்திரத்தோடு குரல் கேட்டது.

நான் சட்டென்று எழுந்து உற்று நோக்கினேன்.

என்ன ஆச்சரியம்! நம் ஊர் நொண்டி முடவன் எதையோ கட்டிப் பிடிப்பவன்போல் தனது சிறு கைகளை நீட்டிக்கொண்டு வெட்ட வெளியை அங் காந்து பார்த்துக்கொண்டு நிற்கிறான்! அவன் மேலே போர்த்திருந்த கருங் கம்பளி கீழே ஒருபுறம் கிடக்கின்றது.

நிலத்தோடு உருண்டு வந்ததுபோல் காணப் பட்ட உருவம் யாரென்று இப்பொழுது விளங்கி விட்டது. அவன் முடவன். அதோடு சப்பைக்கால் நொண்டி. அவன் நடப்பதைக் கண்டால் வெகு விநோதமாக இருக்கும்.

நொண்டி முடவன் மனைவி இறந்துபோய் ஒரு மாதமாகிவிட்டதே. பிறகு அவன் இங்கே யாருடன்

பேசிக்கொண்டிருக்கிருன்? ஒருவேளை இறந்துபோன அவனுடைய மனைவியின் ஆவியுடன் இருக்கலாமோ? அதற்காகத்தான் அவன் சுடுகாட்டிற்கு வந்தாரு?

இந்த நொண்டி முடவனுக்கு இத்தனை காதலா? இவனுக்குத்தான் காதல் என்ருல் இவன் மேலும் ஒரு பெண் இவ்வளவு காதலோடிருக்க முடியுமா? இறந்துபோன பிறகுங்கூட அவள் ஆவி வந்து பேசுவ தென்ருல்....?

நான் இவ்வாறெல்லாம் கேட்டுக்கொண்டே என்னையும் அறியாமல் வீடு வந்து சேர்ந்துவிட்டேன்.

(உறுப்புக் குறைபாடுள்ள முடவன்! தகப்பன் வைத்துவிட்டுப் போன இரண்டு காணி நிலமில்லா விட்டால் சோற்றுக்கே வழியில்லாதவன்-அவனுக்கு இத்தனை காதல் இருக்க முடியுமா?) அவன்தான் காதல் கொண்டாலும் அவனை ஒருத்தி இவ்வளவு ஆழ்ந்து காதலிக்கிருளே! ஆண்மை, வீரம், அழகு முதலியவை உள்ள இடத்தில்தான் காதல் பிறக்கு மென்று படித்திருக்கிறேன். (காதலைப்பற்றி எழுதும் பொழுதெல்லாம் ஓர் அழகு மங்கையையும், ஓர் ஆண்மை இளைஞனையும் பற்றித்தானே எழுது கிருர்கள்?)

என்னுல் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை எதற்கும் காலையில் அந்த நொண்டி முடவனைப் போய்க் கண்டு அவனோடு உரையாடினுல் ஏதாவது விஷயம் விளங்கும் என்று நினைத்தேன். அப்படியே என்னை அறியாமல் தூங்கிவிட்டேன்.

காலையில் முடவன் வீட்டிற்கு முன்னுல் சங்கு ஒலித்துக்கொண்டிருந்தது. விசாரித்ததில் நொண்டி முடவன் இரவில் திடீரென்று யாரும் அறியாமல் இறந்துவிட்டதாகத் தெரிந்தது. பேய் அடித்து விட்டதாகச் சிலர் பேசிக்கொண்டார்கள்.

# காதல் வழி

என் நண்பன் விசுவநாதனைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? மிகவும் நல்லவன். நட்புச் செய்ய அவனைப்போல வேறு யாரும் கிடைக்கமாட் டார்கள். அவன் மட்டும் இப்பொழுது இங்கிருந் தால் நீங்களே அவனுடைய குணத்தை அறிந்து புகழ்வீர்கள்.

அவன் அடிக்கடி என்னிடம் சொல்லுவான்: ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் ஒரு தடவையாவது இந்த உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உண்டாகிறது' என்று. மற்றவர்களுடைய வாழ்வில் அப்படி உண்டா கிறதோ என்னவோ, அவனைப் பொருத்தமட்டில் இது உண்மைதான்! ஒரு தடவையல்ல, பல தடவை களில் அவன் தன் உயிரைப் போக்கிக்கொள்ளப் போவதாக என்னிடம் கூறியிருக்கிறன்.

திடீரென்று என்னிடம் அவன் ஓடி வருவான். நாங்கள் ஒரே மாணவர் விடுதியில் பக்கம் பக்கமாக உள்ள இரண்டு அறைகளில் வசிப்பவர்கள். "இனி மேல் நான் இந்த உயிரை வைத்துக்கொண்டிருக்கப் போவதில்லை; இது நிச்சயம்" என்பான்.

"என்னடா விஷயம்? அதை முதலில் சொல்; பிறகு உயிரை விடுவது அவசியந்தானு என்று யோசிப்போம்" என்பேன் நான்.

"தகப்பனருக்குச் சரோஜாவைப் பிடிக்கவில்லை யாம். அதனல் நான் அவளைக் கல்யாணம் செய்க

கொள்ளச் சம்மதிக்கமாட்டாராம். என்னுடைய சுகத்தில் கொஞ்சமாவது அக்கறையிருந்தால் அவர் அப்படிச் சொல்லுவாரா?''

''நீ உயிரை விட்டுவிட்டால் அப்புறம் அவருக்கு உன் சுகத்தில் ரொம்ப அக்கறை ஏற்படுமாக்கும்?''

''அவருக்கு அக்கறை ஏற்பட்டால் என்ன, ஏற்படாவிட்டால் என்ன? இனி நான் இந்த மண்ணில் இருந்து வாழ முடியாது.''

''நீ வாழ வேண்டுமென்று இந்த மண் தவங் கிடக்கிறதோ!''

இந்தமாதிரி எங்களுக்குள் கொஞ்ச நேரம் தர்க்கம் நடைபெறும். விசுவநாதன் தனது உள்ளக் குமுறலை அடக்கிக்கொண்டு யோசனையில் மூழ்கு வான். அந்தச் சமயம் பார்த்து நான், ''கொஞ்ச நாள் பொறுத்துக்கொள். தகப்பனர் நிச்சயம் சம்மதித்துவிடுவார். அதற்குள் இப்படி ஏன் உயிரைப் போக்கிக் கொள்ளுவதாக ஆத்திரப்படு கிறாய்?'' என்று தொடங்குவேன்.

அவனுக்குக் கோபம் பொங்கிவிடும். ''உனக்குக் காதலின் தன்மை என்ன தெரியும்? அது தெரியாமல் ஏன் இப்படி வாய் வேதாந்தம் பேசுகிறாய்? பொறுத் துக்கொண்டிருக்கிறதாம். பொறுத்துக்கொண்டு!'' என்று சீறிவிட்டு வெளியே கிளம்பிவிடுவான்.

முதல் தடவை விசுவநாதன் இப்படிக் குமுறிக் கொண்டு போனபோது நான் உண்மையில் அஞ்சி விட்டேன். ஆனால் எங்கள் நட்பு முதிர முதிர நான் அவனை நன்கு அறிந்துகொண்டேன். அதனால் எனக்கு அச்சம் போய்விட்டது.

ஒரு சமயம் நான் எனது உளவியல் பேராசிரியரிடம் பேசிக்கொண்டிருக்கும் போது, அவரிடம் விசுவநாதன் இப்படி அடிக்கடி உயிரை மாய்த்துக் கொள்ளப் போவதாகச் சொல்லுவதைப் பற்றி எடுத்துரைத்தேன். அவர் சொன்னார்: "இது ஒரு மாதிரியான தற்கொலை மனப்பான்மை. எளிதாகத் தன்னிடம் பிறர் பரிவு காட்டவேண்டுமென்ற மறைமுகமான ஆசையால் ஏற்படுவது" என்று.

"இதைப் போக்குவதற்கு வழியில்லையா?" என்று ஆவலோடு கேட்டேன்.

"போக்கலாம். அதற்கு அவனுடைய குழந்தைப் பருவத்தைப் பற்றி நன்றாகத் தெரிய வேண்டும்."

"எதற்காக?"

"சிறுவயதில் ஏற்பட்ட நடத்தையே இந்த மனப்பான்மைக்கு அடிப்படையான காரணமாக இருக்கும். அந்தப் பையன் இளமையிலே தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளக் கீழே தரையில் விழுந்து புரண்டு கொண்டிருந்திருப்பான். அப்படிச் செய்தால் தாய் உடனே அவனுக்கு வேண்டியதை யெல்லாம் கொடுத்து விடுவாள். அந்த வெற்றியானது அடி மனத்திலே வேரூன்றி அவனுக்கே தெரியாமல் இருந்திருக்கிறது" என்று இந்த விதமாக என்னென்னவோ பேசத் தொடங்கி விட்டார்.

அவரிடமிருந்து விடைபெற்றுத் தப்பி வருவதே கஷ்டமாய்விட்டது. அதுமுதல் இதைப்பற்றி நான் யாரிடமும் மூச்சுவிடுவதே இல்லை.

ஆனால் நேற்றுக் காலையில் அவன் கடலில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளப் போவதாகச் சொன்னவுடன் எனக்கு என்றும் இல்லாத பயம்

உண்டாகிவிட்டது. இந்தத் தடவை அவன் வார்த்தையை லேசாகக் கொள்ள முடியவில்லை. அவன் முகத்தில் என்றும் இல்லாத உறுதி குடிகொண்டிருந்தது. ஏனென்றால் இப்பொழுது விஷயம் பெரிதாய் விட்டது. (சரோஜாவை அவன் கல்யாணம் செய்து கொள்வதை முன்னெல்லாம் பெற்றோர் உறவினர்களுமே ஆட்சேபித்தார்கள். அவையெல்லாம் ஒருவாறு தீர்ந்துபோய் அவன் ஆவலோடு திருமணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் சரோஜாவே அவனைக்கல்யாணம் செய்துகொள்ள மறுத்து விட்டாள்.) திடீரென்று என்னவோ கோபம்.

"ஏன் திடீரென்று இப்படி மனமாறுதல் ஏற்பட்டது? நடந்த விஷயம் என்ன?" என்று நான் அவனை மெதுவாகக் கேட்டேன்.

"கல்யாணத்தை அடுத்த மாதத்திலேயே வைத்துக் கொள்ளலாமென்று நான் சொன்னேன். அவள் கோடை விடுமுறையில் வைத்துக்கொள்ளலாம் என்று ஒரே பிடிவாதம் செய்தாள்."

"சரி, சரி; அதற்காக அவளிடம் சண்டைபோட்டுக் கொண்டாயாக்கும்! கோடை விடுமுறையில் வைத்துக்கொண்டால் நல்லதுதானே? நீயும் பரீட்சை எழுதிவிடுவாய். பரீட்சைக்கு முன்னால் கல்யாணத்தை வைத்துக்கொண்டால் படிப்புக்கு இடைஞ்சல்தானே?"

"அதெல்லாம் எனக்கும் தெரியும். உன்னுடைய யோசனை எனக்கு வேண்டியதில்லை" என்று அவன் உறுமினான்.

"அடடே! கோபித்துக் கொள்ளாதே. இரண்டு பக்கத்திலும் பெற்றோர்களுடைய சம்மதமோ

உண்டாகிவிட்டது. இந்தத் தடவை அவன் வார்த்தையை லேசாகக் கொள்ள முடியவில்லை. அவன் முகத்தில் என்றும் இல்லாத உறுதி குடிகொண்டிருந்தது. ஏனென்றால் இப்பொழுது விஷயம் பெரிதாய் விட்டது. சரோஜாவை அவன் கல்யாணம் செய்து கொளவதை முன்னெல்லாம் பெற்றோர் உறவினர்களுமே ஆட்சேபித்தார்கள். அவையெல்லாம் ஒருவாறு தீர்ந்துபோய் அவன் ஆவலோடு திருமணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் சரோஜாவே அவனைக்கல்யாணம் செய்துகொள்ள மறுத்து விட்டாள். திடீரென்று என்னவோ கோபம்.

"ஏன் திடீரென்று இப்படி மனமாறுதல் ஏற்பட்டது? நடந்த விஷயம் என்ன?" என்று நான் அவனை மெதுவாகக் கேட்டேன்.

"கல்யாணத்தை அடுத்த மாதத்திலேயே வைத்துக் கொள்ளலாமென்று நான் சொன்னேன். அவள் கோடை விடுமுறையில் வைத்துக்கொள்ளலாம் என்று ஒரே பிடிவாதம் செய்தாள்."

"சரி, சரி; அதற்காக அவளிடம் சண்டைபோட்டுக் கொண்டாயாக்கும்! கோடை விடுமுறையில் வைத்துக்கொண்டால் நல்லதுதானே? நீயும் பரீட்சை எழுதிவிடுவாய். பரீட்சைக்கு முன்னால் கல்யாணத்தை வைத்துக்கொண்டால் படிப்புக்கு இடைஞ்சல்தானே?"

"அதெல்லாம் எனக்கும் தெரியும். உன்னுடைய யோசனை எனக்கு வேண்டியதில்லை" என்று அவன் உறுமினான்.

"அடடே! கோபித்துக் கொள்ளாதே. இரண்டு பக்கத்திலும் பெற்றோர்களுடைய சம்மதமோ

கிடைத்துவிட்டது. பிறகு அவசரம் என்ன? இரண்டு மாசம் தாமதிக்கப்படாதா என்றுதான் நினைத்தேன்.''

"உனக்கு என்ன தெரியும்? நீ அப்படித்தான் நினைப்பாய். காதலின் போக்கை அறியாத நீ வேறு எப்படி நினைப்பாய்?''

"காதலைப்பற்றித்தான் எனக்குத் தெரியாதென்று எத்தனையோ தடவை ஒப்புக்கொண்டிருக்கிறேனே, மறுபடியும் மறுபடியும் ஏன் என்னை இப்படி இடித்துக் காண்பிக்கிறாய்?''

"பின் எதற்காக இரண்டு மாசம் பொறுக்கச் சொல்லுகிறாய்?''

"நானா சொல்லுகிறேன்? அவள் தானே சொல்லுகிறாள்?''

"அவளுக்கு உண்மையான காதல் என்மேல் இருந்தால் அப்படிச் சொல்லியிருப்பாளா? இதிலிருந்து அவளுக்கு என்மேல் ஆழ்ந்த அன்பு இல்லையென்று தெரிந்துவிட்டது. அதனால்தான் இரண்டு மாசம் பொறு என்கிறாள்.''

உன்மேல் அன்பில்லாமல் அப்படிச் சொல்வதாக எனக்குப் படவில்லை. உன் பரீட்சைக்கு இடைஞ்சலாக இருக்கப்படாது என்றுதான் அவள் இரண்டு மாசம் பொறுக்கத் தயாராக இருக்கிறாள். அதுவே உண்மையான காதல் என்று நான் நினைக்கிறேன்.''

"உனது நினைப்பைக் கொண்டுபோய்க் குப்பை தொட்டியில் போடு. காதலை அறியாத உனக்கு என் மனவேதனை எப்படித் தெரியப்போகிறது?''

இப்படிக் கூறிக் கொண்டிருக்கும் போதே அவன் குரலில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. கோபம் மறைந்து துக்கம் மேலோங்கத் தொடங்கிற்று. அவன் என்னைக் கனிந்த உள்ளத்தோடு பார்த்து, "அன்பா, இதுதான் உன்னை நான் கடைசித் தடவை யாகப் பார்ப்பது. நான் உன்னை நினைத்துக் கொண்டே கடலில் விழப்போகிறேன். நீ எப்பொழு தாவது ஒரு பெண்ணைக் காதலிப்பாயானால் அப் பொழுது எனது செய்கையைப்பற்றிச் சரிவர அறிந்து கொள்வாய். ஆனால் உனக்கும் என் கதி நேரக்கூடாது என்று இறைவனை வேண்டுகிறேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

அவன் கண்களில் நீர் பெருகிக் கொண்டிருந்தது. நானும் வாய்விட்டுக் கதறிவிட்டேன். அவன் திரும்பிப் பார்த்தான்.

"விசு, கொஞ்ச நேரம் இங்கேயே பொறுமை யாக இரு. நான் இப்பொழுதே போய் சரோஜா வைக் கண்டு எல்லாம் தெரிவித்து வருகிறேன். அவள் நிச்சயம் உன் விருப்பப்படியே நடப்பாள்" என்று கூறி அவனை என் அறையிலேயே இருக்கச் செய்துவிட்டு நேராகத் திருவல்லிக்கேணியிலுள்ள அவளுடைய வீட்டுக்குப் போனேன்.

மாணவர் விடுதியிலிருந்து அவள் வீடு பக்கந் தான். அவளைப் பார்க்கும் வரையில் எனக்கு ஒரே நம்பிக்கை. பி. ஏ., முதல் வகுப்பில் வாசிக்கும் அவள் இந்த நெருக்கடியான நிலைமையை உணராமல் போய்விடுவாளா, என்ன?

ஆனால் எனது நம்பிக்கை வீணாய்விட்டது! அவள் ஒரே பிடிவாதமாயிருந்தாள்.

"அவரை நான் மணந்துகொள்ள முடியவே முடியாது. நினைத்ததற்கெல்லாம் உயிரை விட்டு

விடுவதாகப் பயமுறுத்துபவரைக் கல்யாணம் செய்து கொண்டு வாழ்க்கை முழுவதும் யார் தொல்லைப் படுவது?'' என்று முடிவாகச் சொல்லிவிட்டாள்

விசுவநாதனுக்கு விஷயத்தை மறைத்துப் பதில் சொல்லுவது கஷ்டமாய்விட்டது. ஆகவே, அவனிடம் வேறு வகையில்லாமல் உண்மையை உளறி விட்டேன்.

“ஆகா, அப்படியா சொன்னாள்? நான் சும்மா பயங்காட்டுகிறேன் என்பதுதானே அவள் நினைப்பு? இதோ பார்; நான் நேராகக் கடலில் போய் விழுந்து விடுகிறேன்'' என்று எழுந்து அவன் ஓடத் தொடங்கினான்.

நான் தடுத்தேன்; “டேய்; காதல் என்பதே தெரியாத நீ என்னைத் தொடக்கூட தகுதியில்லாதவன்'' என்று சொல்லி, எதிர்பாராத விதமாக என் முகத்தில் ஒரு குத்து விட்டான்.

அப்படியே மயங்கி விழுந்துவிட்டேன். உணர்வு வந்து நான் எழுந்தபோது அங்கே விசுவநாதனைக் காணோம். இதற்குள்ளே இறந்துவிட்டானோ என்னவோ என்று கூவிக்கொண்டே கடற்கரைக்கு ஓடினேன்.

அங்கேயும் விசுவநாதனைக் காணவில்லை. மணி இரண்டு இருக்கும். கடற்கரையில் நடமாட்டமே இல்லை. ஒன்றிரண்டு செம்படவர்கள் மட்டும் தங்கள் வலைகளைச் செப்பனிட்டுக் கொண்டிருந்தார்கள்,

“ஐயா, இங்கே என்னைப் போல வாலிபன் ஒருவன் வந்தானா?'' என்று ஒருவனைக் கேட்டேன்.

“எத்தனையோ பேர் வருகிறார்கள், போகிறார்கள். நாங்கள் என்னத்திற்கு அவர்களைக் கவனிக்கிறோம்?'' என்று அவன் பதில் சொல்லிவிட்டான்.

மறுபடியும் அங்கும் இங்கும் பார்த்தேன். விசுவநாதனைக் காணவில்லை. கடைசியில் நாங்கள் மாலை வேளையில் வழக்கமாக உட்காரும் இடத்திற்குப் போய்ச் சேர்ந்தேன். அப்படியே மணலின்மேல் சோர்ந்து உட்கார்ந்து பக்கத்திலிருந்த ஒரு தோணியின்மேல் சாய்ந்தேன்.

இருள் பரவத் தொடங்கிற்று. பௌர்ணமிக்கு அடுத்த இரண்டாம் நாளாகையால் சூரியன் மறைந்ததும் இருட்டு எங்கிருந்தோ வந்துவிட்டது. கடற்கரையில் கூடியவர்கள் தங்கள் இல்லம் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தார்கள். எனக்கு மாணவர் விடுதிக்குப் போக விருப்பமில்லை. அப்படியே உட்கார்ந்திருந்தேன்.

அதே சமயத்தில் சரோஜா வேகமாக அங்கு வந்து சேர்ந்தாள்.

"ஏன் தனியாக இருக்கிறீர்கள்?"

"சரோஜா, அவனை மத்தியான்னத்திலிருந்து காணவில்லை. நான் இங்கேயே காத்துக் கொண்டிருக்கிறேன்" என்று நடந்ததெல்லாம் ஒன்றுவிடாமல் கூறினேன்.

"நான் சொன்னதை எல்லாம் அவரிடம் கூறினீர்களா?"

"ஆமாம், அப்படியே சொன்னேன்."

"ஐயோ, எனக்குத் துரோகம் செய்துவிட்டீர்களே!" என்று அவள் கதறினாள்.

"சரோஜா, நான் ஒன்றும் பொய் சொல்லவில்லையே. நீ சொன்னதைத்தானே சொன்னேன்?

"உங்களுக்கு ஏதாவது காதலின் போக்குத் தெரிந்திருந்தால் அப்படிச் சொல்லுவீர்களா? நான் சொன்னதெல்லாம் உண்மையென்று எப்படி நீங்கள் நினைக்கலாம்?"

இந்தக் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை.

"அவரைப் பிரிந்து ஒரு நொடிகூட நான் உயிருடன் இருக்கமாட்டேன். நானும் அவரோடேயே இந்தக் கடலில் விழுந்து விடுகிறேன். அவர் இல்லாமல் எனக்கு இந்த வாழ்க்கை எதற்கு?" என்று அவள் எழுந்தாள்.

நான் சமாதானப்படுத்த முயன்றேன். அந்தச் சமயத்தில் நான் சாய்ந்துகொண்டிருந்த தோணிக்குள்ளிருந்து ஒரு குரல் கேட்டது.

"சரோஜா, கண்மணி, விழுந்துவிடாதே, இதோ நான் இருக்கிறேன்" என்று கூவிக்கொண்டே விசுவநாதன் குதித்தான்.

"ஆ! இருக்கிறீர்களா? உங்கள் விருப்பம் போலவே கல்யாணத்தை இந்த மாசமே வைத்துக் கொள்ளுவோம்" என்றாள் சரோஜா.

"சரோஜா, என்ன வேலை செய்யத் துணிந்தாய்? நீ கடலில் விழுந்திருந்தால்...?"

"நீங்கள் விழுந்து விட்டதாக நினைத்தே நானும்...."

"ஐயோ, இனிமேல் நான் சொல்லுகிறேனென்று நீ அப்படிச் செய்துவிடாதே."

"நீங்கள் இனிமேல் அப்படிச் சொல்லவே கூடாது."

"நான் இனிமேல் அப்படிச் சொல்லவே மாட்டேன்."

இப்படிப் பேசிக்கொண்டே இருவரும் ஒருவரை ஒருவர் நெருங்கிவிட்டார்கள். நான் கடலைப் பார்த்துக்கொண்டு ஒதுங்கி நின்றேன்.

தொடுவானம் கடலின் விளிம்பை முத்தமிட்டுக் கொண்டிருந்தது. மெதுவாக மேலெழுகின்ற நிலாவை ஒரு வெண் மேகம் தன்னுள் அணைத்துக் கொண்டிருந்தது.

மறுபடியும் நான் திரும்பிப் பார்த்தபோது சரோஜாவும் விசுவநாதனும் நூறு கஜத்திற்கு அப்பால் போய்விட்டார்கள். நான் ஒருத்தன் இருப்பதே அவர்களுக்கு நினைவில்லை. காதலின் போக்கே அப்படித்தானே) என்னவோ, எனக்குத் தெரியாதென்பதைப் பற்றித்தான் பலதடவை இருவரும் சொல்லியிருக்கிறார்களே!

# சிப்பாய் மருதப்பன்

"நீ இருக்கும் வரையிலாவது எனக்கு ஏதாவது வழி சொல்லிக்கொண்டிருந்தாய்; இப்போது அதற்கும் ஒருவரும் இல்லை. என் தலைவிதி அப்படி இருக்கிறது" என்றான் மருதப்பன்.

அவன் உள்ளத்தில் குடிகொண்டிருந்த துயரம் அவன் பேச்சிலே தொனித்தது.

"சும்மா கவலைப்படாதே. இன்னும் ஒரு மாதத்திற்கு நான் இருக்கிறேன். அதற்குள் உன்னுடைய துன்பமே தீர்ந்து போகும்படி ஒரு நல்ல தோது சொல்லுகிறேன்" என்றான் சின்னப்பன்.

சின்னப்பன் இப்பொழுது சிப்பாய் உடையில் காட்சி அளிக்கிறான், இரண்டாவது உலக மகா யுத்தத்தில் நேசக்கட்சியில் அவன் ஒரு வீரன். அவன் சைனியத்தில் சேர்ந்து ஆறு மாதங்களாவிட்டன. ஒரு மாத ரஜாவில் அவன் இப்பொழுது சொந்த ஊருக்கு வந்திருக்கிறான்.

"அவளைக் கண்டாலே எனக்கென்னவோ பயமாயிருக்கிறது. ஊரெல்லாம் இது தெரிந்து போய் விட்டது. எல்லாரும் என்னைப் பெண்டாட்டிக்குப் பயந்தவன் என்று கேலி பண்ணுகிறார்கள்" என்றான் மருதப்பன்.

"உனக்கு நான் ஒரு நல்ல தந்திரம் சொல்லிக் கொடுக்கிறேன். அதன்படி நடந்தால் நிச்சயம் உன்

தொல்லை தீர்ந்துவிடும். வீட்டில் நீ ராஜாமாதிரி இருக்கலாம்.''

“அதுதான் நான் வேணுமென்று கேட்கிறேன்; சொல்லேன், பார்க்கலாம்.''

“இந்த இரண்டு நாளாய்ப் பார்த்தாயா? எத்தனை பேர் என்னை வந்து பார்க்கிறார்கள்! என்னைக் கண்டாலே எல்லோரும் பயப்படுகிறார்கள்; எழுந்து நின்றுகொள்ளுகிறார்கள். இதெல்லாம் எதனால் தெரியுமா? எல்லாம் இந்த ராணுவ உடையினால்தான். முன்னெல்லாம் என்னை யாராவது ஒரு பொருளாக மதித்தார்களா? இல்லை. காக்கி உடை போட்டுக்கொண்டு, காலில் பூட்ஸ் மாட்டிக் கொண்டு என்னைப்போல டக் டக் என்று நடந்தால் எல்லாரும் நடுங்கவேண்டாமா? இந்தக் காக்கி உடைக்கு இத்தனை மகிமை இருக்குமென்று எனக்கு இதுவரையில் தெரியாது. நீயும் இதைப் போட்டுக் கொண்டு காலில் பூட்ஸ் மாட்டிக்கொண்டு டக் டக் என்று நடக்க ஆரம்பித்தால் உன் பெண்டாட்டி தன்னைப்போல் அடங்கிவிடுவாள்.''

“ஆமாம், அதைப் போட்டுக்கொள்வதென்றால் பட்டாளத்தில் சேரவேணுமே?''

“நீ ஒண்ணும் சேரவேண்டாம்; பேசாமல் என்னுடன் ஒரு வாரத்திற்கு வா. இரண்டு பேரும் எங்காவது தலைமறைவாக ஓர் ஊருக்குப் போய் விடுவோம். அங்கே உனக்கு இந்த உடையைப் போட்டுக்கொண்டு எப்படி நடக்கிறதென்று சொல்லிக் கொடுக்கிறேன். பிறகு, இங்கே வந்து நீயும் பட்டாளத்தில் சேர்ந்து கொண்டதாகச் சொல்லி அவளை மிரட்டிவிடலாம்.''

“இது நல்ல தோதுதான். ஆனால் பட்டாளத்தில் சேர்ந்துவிட்டதாகச் சொல்லிக்கொண்டு இங்கேயே இருந்தால் குட்டு வெளியாய்விடுமே?''

"அதையெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன். 'ஜப்பான்காரன் நம்ம தேசத்துக்குள்ளே கால் வைப்பதற்குப் பயந்துகொண்டு கிடக்கிருன். அதனுலே புதுசாச் சேர்ந்த சிப்பாய்களுக்கெல்லாம் ஆறு மாசம் லீவ்' என்று நான் சொல்லிவிடுகிறேன். நம்ம ஊர்க்காரர்கள் நான் இப்போ என்ன சொன்னுலும் நம்பிவிடுவார்கள். உனக்கு அதைப்பற்றிக் கவலையே வேண்டாம். ஆறு மாசத்துக்கு மிரட்டி அடக்கி வைத்திருந்தால் பிறகு உன் பெண்டாட்டி எப்பவும் பயந்து நடப்பாள். அப்புறம் அதிகாரம் பண்ணவே தைரியம் வராது."

மருதப்பனுக்கு வந்த குதூகலத்திற்கு அளவேயில்லை. தனது தீராத கவலையெல்லாம் அப்பொழுதே தீர்ந்துவிட்டதாக நினைத்துத் தன் நண்பனை அப்படியே கட்டியணைத்துக்கொண்டான். "சின்னப்பா, இது ரொம்ப நல்ல யோசனை. இன்னிக்குச் சாயங்காலமே நாம் பழநிக்குப் போவோம், வா. நம்ம காரியத்தையும் பார்த்துக்கொள்ளலாம்; சாமி தரிசனமும் செய்துகொள்ளலாம்" என்ருன் மருதப்பன்.

* * *

சின்னப்பனுடைய யுக்தி மிக நன்ருக வேலை செய்கிறது. மருதப்பன் இப்பொழுது வீட்டில் சர்வாதிகாரம் நடத்துகிருன். அவன் காக்கி உடை அணிந்துகொண்டு கையில் ஒரு சிறு பிரம்புடனும், காலில் ஆணியடித்த பூட்ஸுடனும் டக் டக் என்று நடப்பதைப் பார்த்து அவன் மனைவிக்குப் பயம் தட்டிவிட்டது. இதுவரை கேலி செய்துகொண்டிருந்த ஊர் மக்களெல்லாம் இப்பொழுது மருதப்பனை மரியாதையோடு சென்று பார்க்கலானுர்கள். அவன் சண்டை தீர்ந்து வந்தவுடன்

அந்த ஊரிலுள்ள புறம்போக்கு நிலமெல்லாம் அவ னுக்கே கிடைக்குமென்றும், அதனால் அவன் பெரிய பண்ணைக்காரனாகி விடுவானென்றும் எல்லோரும் பேசிக்கொண்டார்கள். "மருதப்பன் என்னமோ அப்பாவிமாதிரி இருந்தான்; உண்மையிலே அவன் பெரிய தைரியசாலி. அவனை அந்தச் சிப்பாய் உடை யிலே பார்ப்பதற்கே பயமாயிருக்கிறது!" என்று அவர்கள் வெளிப்படையாக ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

பத்து நாட்கள் இவ்வாறு கழிந்தன. பிறகு ஒரு நாள் மருதப்பன், சின்னப்பனுக்குத் தெரியாமல் சிப்பாய் உடை யணிந்துகொண்டு ஈரோட்டிற்குப் புறப்பட்டான். கரட்டுப்பாளையத்திலிருந்து பத்து மைல் தொலைவில் உள்ள பட்டணம் ஈரோடு. அதற்கு ரயிலில் போவதுதான் சுலபம். அவன் ரயிலில் ஏறி உட்கார்ந்த பிறகு அதே பலகையில் யாரும் உட்காரத்துணியவேயில்லை. ஜோராக மருதப் பன் காலை நீட்டிப் படுத்துக்கொண்டான். அந்தச் சமயத்தில் அவனுக்குத் தன்னை ஆறு மாதங்களுக்கு முன் ரயிலில் ஏற முயன்றபோது ஒரு சிப்பாய் பிடித்து உந்தியது நினைவிற்கு வந்தது. அதை இப்பொழுது நினைத்தபோது அவனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. "இன்றைக்கு அப்படி என்னை யார் தள்ள முடியும்? நான் வேண்டுமானால் யாரையும் கல்தா கொடுக் கலாம்" என்று பெருமையாக எண்ணிக் கொண்டான்.

ரயில் ஈரோடு சந்திப்பில் வந்து நின்றது. ரயில் மேடையில் எங்கும் ஒரே கூட்டம். எல்லோரும் ஒரு வருக்கு முன் ஒருவராக ரயிலில் ஏறி இடம் பிடித்துக் கொள்ள வேண்டுமென்று தயாராக இருந்தார்கள். மருதப்பன் இறங்குவதற்குள்ளாக, அவசரம் அவசர மாக ஒருவன் உள்ளே புகுந்துவிட்டான். மருதப்ப

னுக்கு மூக்குக்குமேல் கோபம் வந்துவிட்டது. அவன் முன்போல் பெண்டாட்டிக்குப் பயந்த மருதப்பனு என்ன, கோபம் வராமலிருப்பதற்கு? அவன்தான் சிப்பாய் மருதப்பனுச்சே! ஆகவே, அதிகாரத் தொனியில், "டேய், நான் கீழே இறங்குவதற்குள் ஏண்டா ஏறினுய்?" என்று சொல்லி மருதப்பன் அவனுடன் சண்டைக்குப் போனுன்.

அந்தப் பேர்வழி காக்கி உடைக்குப் பயந்தவ னுகத் தெரியவில்லை. அவன், மருதப்பனை அலட்சிய மாகப் பார்த்துக்கொண்டே, "சர்க்கார் உன்னை ஜப்பான்காரனுடன் சண்டை போடச் சொன்னுர் களா? இல்லை, என்னுடன் சண்டை போடச் சொன்னுர்களா?" என்று கேட்டான்.

அதைக் கேட்ட மருதப்பன் ஆத்திரமடைந்து, அவனைப் பிடித்து இழுத்துக் கீழே விட்டான். அந்த மனிதன் அவனை அநாயாசமாகத் தள்ளிவிட்டு, மீண்டும் ரயிலில் ஏறப்போனுன். அவனை மருதப்பன் பிடித்து இழுக்க, மருதப்பனை அவன் பிடித்து இழுக்க, அதனுல் அங்கு ஒரு பெரிய அமளி ஏற்பட்டு விட்டது.

போலீஸார் விரைந்து வந்தனர். அவர்கள் மருதப்பனைச் சில கேள்விகள் கேட்டதும், அவன் உண்மையில் பட்டாளத்தில் சேர்ந்தவனல்ல என் பதும், போலி வேஷதாரி என்பதும் வெளியாகி விட்டன. அதனுல் குற்றம் சாட்டப்பட்டுப் பாது காப்பில் வைக்கப்பட்டான்.

* * *

மருதப்பன் ஒரு சிப்பாயினுடைய உடையை அணிந்துகொண்டு போலியாக நடித்திருக்கிறுன் என்பது சந்தேகமில்லாமல் தெரிந்துவிட்டது.

அதனால் அவனுக்கு ஆறு மாதக் கடின காவல் தண்டனை விதிக்கப்போவதாக நீதிபதி கூறினார். மருதப்பன் மிகவும் பயந்து போய்விட்டான். அவனால் அழுகையை அடக்க முடியவில்லை. உண்மையைச் சொல்லித் தன்னை மன்னிக்கும்படி நீதிபதியைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று அவன் நினைத்தான்.

“ஐயா, நான் எல்லாவற்றையும் ஒளிக்காமல் சொல்லிவிடுகிறேன். என்னை மன்னித்து விடுங்கள்” என்று அவன் தொடங்கினான். “என் வீட்டுக்காரி எனக்கு அடங்கி நடக்கிறதே இல்லை. என்னை மிரட்டிக்கொண்டேயிருந்தாள். அவளை அடக்குவதற்கு என்னென்னவோ செய்து பார்த்தேன்; முடியவேயில்லை. ஊரெல்லாம் என்னைப் பெண்டாட்டிக்குப் பயந்தவன் என்று பரிகாசம் செய்தார்கள். அதனால் நான் ஒரு தந்திரம் செய்து இப்படி வேஷம் போட்டேன். இந்தச் சிப்பாய் உடையைக் கண்டு அவள் அடங்கிவிட்டாள். நான் பேசாமல் வீட்டிலேயே அவளை மிரட்டிக்கொண்டிருக்காமல் இங்கு வந்தது பிசகாய்ப் போய்விட்டது. சிப்பாய் உடை அணியவே எனக்குத் தலைக்கிறுக்கு வந்து இப்படிச் செய்து விட்டேன். என்னை மன்னிக்க வேணும்; இனிமேல் இப்படிச் செய்யவேமாட்டேன்” என்று கையெடுத்துக் கும்பிட்டான்.

“ஆ! அப்படியா? இந்தக் காக்கி உடைக்கு அவ்வளவு சக்தியிருக்கிறதா? அடடா! இத்தனை நாள் எனக்கும் தெரியாமல் போய்விட்டதே” என்றார் நீதிபதி.

“ஊஹூம், இத்தனை நாளாய் வேஷம் போட்டுக்கொண்டா என்னை ஏமாத்தினாய்? வா வீட்டுக்கு, அப்புறம் பேசிக்கிறேன்” என்று கர்ஜித்தாள் நீதி

மன்றத்திற்கு வெளித் தாழ்வாரத்திலிருந்த மருதப்பன் மனைவி.

"ஐயோ! என் பெண்டாட்டி எப்படியோ இங்கே வந்து எல்லாம் தெரிந்துகொண்டாளா? அப்படியானால் எனக்கு மன்னிப்பு வேண்டவே வேண்டாம். ஐயா! அதற்குப் பதிலா இந்த ஆறு மாசத் தண்டனையை ஆறு வருசமாகச் செய்து விடுங்க" என்று நீதிபதியைப் பார்த்துக் கெஞ்சினான் மருதப்பன்.

# குரங்கு மனம்

காளியம்மாளுக்குத் தாங்க முடியாத துக்கம். நினைக்க நினைக்க அவள் உள்ளம் குமுறத் தொடங்கிற்று. துக்கம் மலைபோலப் பெருகிற்று. அவள் ஆசையோடு கேட்ட சேலையைத் தகப்பனார் வாங்கி வரவில்லை. அதுவும் தலைத் தீபாவளிக்கு. விசனத்திற்கு இதைவிட வேறு என்ன வேண்டும்? முதல் தீபாவளிக்கே இப்படியென்றால் பின் என்ன இருக்கிறது? அவள் சென்ற ஒரு மாத காலமாக எண்ணி எண்ணி மகிழ்ந்ததெல்லாம், கண்ட கண்ட கனவெல்லாம் சிதறிப்போய் விட்டன. தன் கணவனோடு பூரிப்புடன் பிறந்தகத்துக்குத் தீபாவளிக்காக இரண்டு நாள் முன்னதாகவே வந்ததும், வந்த மறு நாள் மாலை தகப்பனார் வாங்கிவந்த சேலையைப் பார்க்கும்வரையில் அவள் குதூகலமாக இருந்ததும் இப்பொழுது மறைந்துவிட்டன.

ஆனால் தீபாவளி அவள் வருத்தத்தைக் கண்டு வராமல் நிற்கிறதா? அந்த ஊரிலும் தீபாவளி நாள் எண்ணெய்த் தேய்ப்பு, புத்தாடை, பணியார வகைகள் முதலிய சிறப்புகளுடன் புலர்ந்துவிட்டது.

அன்று காலையில் காளியம்மாள் எண்ணெய் தேய்த்து முழுகவில்லை. தலைவலியென்று இழுத்துப் போர்த்துப் படுத்துக்கொண்டாள். மத்தியான்னம் வரையில் எழுந்திருக்கவே இல்லை. அவள் தாய் கருப்பாயி அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக வந்து தொந்தரவு செய்ததன்பேரில் மத்தியான்னம் சிறிது சாப்பிட்டுவிட்டு மறுபடியும் படுத்துக்கொண்டாள்.

கருப்பாயி மகளிடம் வந்து சமாதானம் சொல்லுவதும், தன் கணவனிடம் போய் அழுத வண்ணம் முறையிடுவதுமாக இருந்தாள்.

மாப்பிள்ளைக்கு இந்தப் பிணக்கு விஷயம் ஒன்றுமே தெரியாது. அவர் புது வேட்டி உடுத்துக் கொண்டு, விருந்து சாப்பிட்டுவிட்டு மைத்துனன் மார்களோடு உல்லாசமாக இருந்தார். மனைவி புதுச் சேலை கட்டிக்கொண்டு ஏன் தம்மிடம் 'இன்னும் வர வில்லை என்று மட்டும் கொஞ்சம் ஏக்கம். ஆனால் இடைவிடாது தம்முடன் மற்றவர்கள் இருந்து கொண்டிருப்பதனால் வரவில்லைபோலும் என்று தமக்குள்ளேயே சமாதானமும் செய்து கொண் டார். கருப்பாயியின் விசனமும் கோபமும் கலந்த குரல்கூட அவருக்குக் கேட்கவில்லை. அவையெல்லாம் மேற்புறம் புறக்கடையில் நடந்தவை.

"அப்பவே நான் சொன்னேனே; அந்தச்சீலையை வாங்கிக்கிட்டு வந்திருந்தா என்ன போச்சு?" என்று தொடங்குவாள் கருப்பாயி.

அவள் கணவர் பெரியதம்பிக் கவுண்டர், "என்னமோ வாங்கியாச்சு இப்போ என்ன பண்ண றது? இன்னொரு தடவைக்கு அதையே வாங்கினாப் போவுது, ஓடியா போவும்? இதுவும் என்ன, அதுக்கு குறைஞ்சுதா? அது 120 ரூபாய்; இது 115 ரூபா" என்று சமாதானம் சொல்லுவார்.

"அஞ்சு ரூபாதானே எச்சு? அதையே வாங்கிக் கிட்டு வர்ரத்துக் கென்ன?"

"என்னமோ ஏமாந்து போச்சு. நான் விலை எச்சுன்னு வாங்காமெ வல்லெ. இதே நல்லதுன்னு அல்லாருஞ் சொன்னாங்கோ; எனக்கும் பிடிச்சுது; எடுத்து வந்தேன். உடுத்திக்கச் சொல்லு."

"நீங்களே போய்ச் சொல்லுங்க. நான் சொல்லியாச்சு. உங்ககிட்டே நாமொருத்தி சிக்கிக்கிட்டேன்" என்று கறுப்பாயி சொல்லிக்கொண்டே போவாள்.

இப்படி வாக்கு வாதம் அரைமணிக்கு ஒரு தடவை நடந்துகொண்டிருந்தது. ஒவ்வொரு தடவையும் தாயின் கை உயர்ந்து வரலாயிற்று.

மாலை மூன்றுமணி சுமாருக்குக் காளியம்மாள் எழுந்து ஊருக்கு அருகிலுள்ள அவர்கள் தோட்டத்தை நோக்கிப் புறப்பட்டாள். படுத்துப் படுத்து அவளுக்கே சலித்துவிட்டது. அவள் வருவதைக் கண்ட பெண்கள் அனைவரும் அவளுடைய புதுச் சேலையைப் பார்க்க வேண்டுமென்று ஓடி வந்தார்கள். அவர்களுக்கு ஒரே ஏமாற்றம்; திகைப்பு.

"காளியாத்தா, ஏன் பழைய துணியைக் கட்டிக் கொண்டிருக்கிறே?"

எல்லோர் வாயிலும் இதே கேள்விதான். காளியம்மாளுக்குப் பதில் சொல்வதே தொல்லையாகி விட்டது. "உடம்புக்கு நல்லால்லே; குளிச்சுக்கிலே" என்று சொல்லியும் சொல்லாமலும் வேகமாக நடந்தாள்.

மாரப்பம்பாளையத்தில் பெரியதம்பிக் கவுண்டர் தாம் பெரிய பணக்காரர். அவர் வீட்டில் நடக்காத சிறப்பு அந்த ஊரில் வேறு எங்கும் இல்லை. காளியம்மாள் இப்படிப் போவதைக் கண்டு யாராலும் ஆச்சரியத்தை மறைக்க முடியவில்லை. காளியம்மாளுக்கும் அவர்களது மனம் தெரிந்துவிட்டது.

விரைவிலே தோட்டத்துக்குள் நுழைந்து ஒரு சங்கம் புதர் மறைவில் தனியாக உட்கார்ந்து கொண்டாள். அவள் மனத்தில் எத்தனை எத்தனை

எண்ணங்களோ எழுந்து மறைந்தன. ஒவ்வொரு சமயம் அவளையும் அறியாமல் ஒரு துளிக் கண்ணீர் முத்துப்போல் அவள் கண்களில் தோன்றியது. அவளுக்கு நேரம் போவதே தெரியவில்லை. வீட்டை விட்டுத் தோட்டத்திற்கு வந்ததும் அவளுக்கு இப்போது துன்பமாகத் தெரிந்தது.

திரும்பிப் போகும்போதும் பெண்கள் அவளை அதே கேள்வியுடன் மொய்த்துக்கொள்வார்களே!

வெகு நேரம் கழிந்துவிட்டது. சங்கம் புதரின் மறுபுறமாகத் தொலைவில் யாரோ இருவர் குதூகலமாகப் பேசும் குரல் கேட்டது.

"சின்னம்மா, தீபாவளிக்கு வந்தியா?"

"ஆமா அக்கா, அப்பன் வந்து கூட்டிக்கிட்டு வந்தாங்கோ; அவுங்களும் வந்திருக்கிறுங்கோ."

"இந்தச் சேலை நல்லாருக்குது. என்ன விலை?"

"சந்தையிலே அம்மா எடுத்தாந்தா! அஞ்சு ரூபா விலை. அவுங்களுக்கு ரெண்டு ரூபாயிக்கு வேட்டி துண்டு எல்லாம் எடுத்திருக்குது."

சின்னம்மாள் பெருமையோடு பேசினுள். அவள் இடையில் சிவப்பும் மஞ்சளும் தலை தடுமாறிக் கிடந்த ஒரு தட்டுச்சேலை பளிச்சென்று பிரகாசித்தது. வாய் நிறைய வெற்றிலை; கொண்டை நிறைய மருக்கொழுந்து; முகத்தில் களிப்பு.

சின்னம்மாள் பெரியதம்பிக் கவுண்டர் பண்ணையில் இருபது வள்ளம் கூலிக்கு வேலை செய்யும் ஒரு பண்ணையாளின் மகள். அவளுக்கும் காளியம்மாளுக்குக் கல்யாணமான அதே மாதத்தில்தான்

கல்யாணம் நடந்தது. அவளும் இப்பொழுது தலைத் தீபாவளிக்கு வந்திருக்கிறாள்.

சின்னம்மாளுக்கும் காளியம்மாளுக்கும் சிறு வயசிலிருந்தே நட்பு. இருவரும் ஒன்றாக வளர்ந்தவர்கள். காளியம்மாளுக்கு எல்லாக் கைவேலைகளும் செய்பவள் சின்னம்மாள்தான். அவள் தன் தீபாவளிச் சேலையைக் காளியம்மாளுக்குக் காண்பிக்க வேண்டுமென்று ஆவலோடு வந்துகொண்டிருந்தாள். மறுபுறம் புதர் மறைவில் காளியம்மாள் விசனக் கடலில் மூழ்கியிருப்பது அவளுக்குத் தெரியாது.

"சின்னம்மா, இப்போ எங்கே போறே?" என்று அவளுடன் பேசியவள் மேலும் கேட்டாள்.

"காளியாத்தா வந்திருப்பா. அவளைப் பார்க்கப் போறேன். நான் புதுச் சீலை கட்டிக்கிட்டு வாரதைப் பாத்தா அவளுக்குச் சந்தோசமா இருக்கும்" என்றாள் சின்னம்மாள்.

இந்தப் பேச்செல்லாம் காளியம்மாளுக்கு ஒன்று விடாமல் கேட்டது. அது அவள் உள்ளத்தில் புகுந்து புதிய வழியில் வேலை செய்யத் தொடங்கிற்று. தூக்கத்தில் இருந்த அவளை யாரோ தட்டி யெழுப்பி, "பார், எத்தனை இன்பம் உனக்காகக் காத்திருக்கிறது" என்று சொல்வதுபோல் இருந்தது. "சின்னம்மாள் பேச்சில் எத்தனை மகிழ்ச்சி! எத்தனை இன்பம் பொங்குகிறது! எல்லாவற்றிற்கும் மனம் தானே காரணம்? ஐந்து ரூபாய்ச் சேலையைக் கட்டிக்கொண்டு அவள் எவ்வளவு இன்பமடைகிறாள்! நான்?" என்று காளியம்மாள் தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள். "நான் 115 ரூபாய்ச் சேலையிருந்தும் அதுவும் தகப்பன் அடுத்த ஆடி நோன்

புக்கு நான் கேட்ட அந்தச் சேலையை வாங்கிக் கொடுக்கிறேன் என்று சொல்லியும் விசனப்பட்டுக் கொண்டு இருக்கிறேன். இது நன்றாய் இருக்கிற தென்றுதானே அவர் வாங்கி வந்தார்? பணத்தையா பார்த்தார்? நான் பிரியமாக உடுத்துக்கொள்வே னென்றுதானே வாங்கியிருக்கிறார்? நான் எவ்வளவு முட்டாள்தனமாக நடந்துவிட்டேன்! சே! உடனே போய்க் குளித்துவிட்டுச் சேலையைக் கட்டிக்கொள் கிறேன். தலைவலி தீர்ந்து போகச்சென்று சொல்லி விட்டால் போகிறது. அவரும் என்ன என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாரோ? இந்தப் பிணக்கு அவருக்குத் தெரியாமல் போய்விட்டால் நல்லது.''

காளியம்மாள் மகிழ்ச்சியோடு எழுந்தாள். அதே சமயத்தில் கறுப்பாயி அவளைத் தேடிக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தாள்.

''அம்மா, எனக்கு அந்தச் சேலையே போதும்.''

''இல்லை, வா; நம்ம துரைசாமி போய் நீ கேட்ட சேலையை வாங்கிக்கிட்டு வந்துட்டான்.''

''வேண்டாமம்மா; போக வேண்டியதில்லை. இதே போதும்.''

''போயாச்சு; வாங்கியும் வந்தாச்சு. ஈரோடு எட்டு மைல்தானே? சைக்கிள்லேயே போய்வர எந்நேரமாகும்?''

காளியம்மாளுக்கு இப்போது இரட்டிப்பு மகிழ்ச்சி.

★